REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஒக்டோபர் 26 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN

1932 - 2022

வரு. 90 இல. 253 | Wednesday 26, October, 2022 | 16 பக்கங்கள் | 40/-

## அமெரிக்க திறைசேரி அதிகாரி இலங்கை வருகை

அரச, பொருளியல் தலைவர்களை சந்திப்பார்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஆசியாவுக்கான ஐக்கிய இராச்சியத்தின் திறைசேரி திணைக்கள உதவிச்செயலாளர் ரொபர்ட் கப்ரொத் நேற்று இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

06

### தமிழர் இனப்பிரச்சினைக்கு ஒருவருட காலத்தினுள் தீர்வு:

# ஜனாதிபதியின் வாக்குறுதிக்கு தமிழ் கூட்டமைப்பு வரவேற்பு



அரசியலமைப்பு விடயத்தில் பூரண ஆதரவு வழங்குவதாக சுமந்திரன் தெரிவிப்பு

**யாழ்.விசேட நிருபர்**

புதிய அரசியலமைப்பு தொடர்பில் முன்னரைப்போலவே இவ்விடயத்தில் TNA இணைந்து செயற்படும் எனவும் தெரிவிப்பு

இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு புதிய அரசியலமைப்பினூடாக ஒரு வருட காலத்திற்குள்ளே செய்து முடிக்கப்படும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குறுதியை தமிழ் தேசிய கூட்டமைப்பு வரவேற்பதாக பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளருமான எம். ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியலமைப்பினூடாக இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு காண்பது தொடர்பான வேலை திட்டம் உடனடியாக நடைபெற வேண்டும். அதை ஜனாதிபதி முன்னெடுக்கின்ற போது எங்களுடைய முழுமையான இணக்கப்பாடும் முழுமையான ஆதரவும் அதற்கு இருக்கும் என்பதே எங்களுடைய உத்தியோகபூர்வ நிலைப்பாடாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருந்த காலப்பகுதியில் எவ்வளவு சேர்ந்து செயற்பட்டோம் என்பதை அவர் அறிவார். 2016 ஆம் ஆண்டு

06



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெள்ளை மாளிகையில், தீபாவளி பண்டிகையை கொண்டாடினார். அவருடன் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

PAFFREL

## தேர்தல் செலவினங்களை மட்டுப்படுத்தல் அவசியம்

சட்டமூலத்தை உடன் நிறைவேற்ற – பெப்ரல் கோரல்

03

### மிருகங்களை துன்புறுத்தும் செயற்பாடு:

## யால சரணாலய அதிகாரிகள் சிலர் சேவையிலிருந்து நிறுத்தம்




யால சரணாலயத்தில் மிருகங்களை துன்புறுத்தும் வகையில் வாகனங்களை செலுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் வழிகாட்டி மற்றும் அதிகாரிகள் சிலர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக அவர்கள் சேவையிலிருந்து

06

### இரட்டை குடியுரிமை எம்.பிக்கள் விடயம்:

## தேர்தல்கள் ஆணைக்குழுவே இறுதி தீர்மானத்தை எடுக்கும்

சபாநாயகர் மஹிந்த யாப்பா தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இரட்டை பிரஜாவுரிமையைக் கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் பாராளுமன்றம் அன்றி தேர்தல் ஆணைக்குழுவே அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன

06

### பயணிகள் போக்குவரத்து ஆட்டோக்கள்;

## பதிவு செய்து ஒழுங்குபடுத்திய பின்பே இரட்டிப்பு எரிபொருள்

எரிசக்தி அமைச்சர் கஞ்சன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மக்கள் போக்குவரத்துக்கான முச்சக்கரவண்டிகளுக்கு எரிபொருள் கோட்டாவை அதிகரிப்பதற்கு முன்பதாக முச்சக்கரவண்டிகளை ஒழுங்குபடுத்தலுக்குட்படுத்துவது அவசியமென மின்சக்தி எரிசக்தி அமைச்சர்

06

## பிரிட்டனின் புதிய பிரதமருக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து

இருநாட்டு உறவுகள் வலுப்பெறும் எனவும் நம்பிக்கை



பிரிட்டனின் பிரதமராக பதவியேற்றுள்ள ரிஷி சுனக்குக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் தனது அன்பான வாழ்த்துக்களை தெரிவிப்பதாக அவர் அனுப்பியுள்ள கடிதத்தில்

06

### மூன்றாம் மன்னர் சார்ள்ஸ் முன்னிலையில்

## பிரித்தானியாவின் புதிய பிரதமராக ரிஷி சுனக் நேற்று பதவியேற்றார்



பிரிட்டன் பிரதமர் பதவிக்கான போட்டியில் இருந்து பென்னி மொர்டவுண்ட் விலகியதை தொடர்ந்து புதிய பிரதமராக இந்திய வம்சாவளியான ரிஷி சுனக் இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் முன்னிலையில் நேற்று பதவியேற்றார்.

பிரிட்டனின் 57 ஆவது பிரதமராக பதவியேற்றுள்ள ரிஷி சுனக் இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கிலேயர்களின் நாட்டின் முதல் இந்திய வம்சாவளி

06

### 50 பல்கலை மாணவர்கள் உட்பட

## நாட்டில் HIV நோயாளர் தொகையில் திடீர் அதிகரிப்பு

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இரட்டிப்பு மடங்கு அதிகரிப்பு




**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் 18 வயதுக்கும் 30 வயதுக்குமிடைப்பட்ட இளைஞர் யுவதிகளிடையே எச்ஐவி வைரஸ் தொற்று அதிகரித்து வருவதாகவும் கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் அந்த எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளதாகவும் தேசிய பாலுறவு நோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ரசாஞ்சலி ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

06

## ஆட்கடத்தலை தடுக்க கிழக்கில் பொறிமுறை ஒன்று அவசியம்

கிழக்கு ஆளுநர் அனுராதா யஹம்பத் ஆலோசனை



ஆட்கடத்தலை தடுப்பதற்காக கிழக்கு மாகாணத்தில் விசேட பொறிமுறையொன்றை தயாரிக்க வேண்டுமென கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

மாகாண தலைமை செயலாளர் தலைமையில் அந்த பொறிமுறையை உருவாக்க வேண்டுமென ஆளுநர் ஆலோசனை வழங்கியுள்ளார். கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் ஒத்துழைப்பையும் அதற்காக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

" ஆட்கடத்தலுக்கு எதிராக அரசு மற்றும் சமூகம் சார்ந்த

06

### தோட்டக் கிணறு ஒன்றிலிருந்து

## இரு இளைஞர்களது சடலங்கள் மீட்பு

யாழ். பருத்தித்துறையில் சம்பவம்

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணம் பருத்தித்துறை புலோலி சிங்கநகர் பகுதியிலுள்ள தோட்டக் கிணற்றிலிருந்து இரு இளைஞர்களின் சடலம் திங்கட்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பன்னங்கட்டு பகுதியைச் சேர்ந்த சுசேந்தகுமார் சசிகாந் (வயது 24),

06

### 15 லீற்றர் பெற்றோல் தரும் வரை

## ஆட்டோ கட்டணங்களை குறைக்க முடியாது



முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

முச்சக்கர வண்டிகளுக்கான கட்டணத்தை குறைப்பதாக முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் நேற்றுக் காலை தெரிவித்திருந்த போதும் அந்த தீர்மானத்தை மாற்றிக் கொண்டு கட்டணத்தை குறைக்கப் போவதில்லையென நேற்று அச்சங்கம் அறிவித்துள்ளது.

முச்சக்கர வண்டிகளுக்கு வழங்கப்படும் எரிபொருளை 05 லீற்றரால் அதிகரித்துள்ள

06

### கொழும்பு தேசிய வைத்தியசாலையில்

## நோயாளர்களிடமிருந்து பணம் திருடும் கும்பல் குறித்து கவனம்

வைத்தியசாலை பேச்சாளர் தரும் எச்சரிக்கை



கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களின் பணம், கையடக்கத் தொலைபேசி மற்றும் தங்க நகைகளை திருடுவோர் தொடர்பில் தகவல்கள் பதிவாகியுள்ளன. நோயாளர்களை பார்வையிடும் போர்வையில் செல்லும் குழுவினர் திருட்டில் ஈடுபடுவதாக தேசிய வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

06

### மாவனெல்லையில் நேற்று பாரிய அனர்த்தம்:

## CTB பஸ்ஸுடன் பாடசாலை சேவை பஸ் மோதி விபத்து



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மாவனெல்லை பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் 38க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாவனெல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

38 பேர் படுகாயம்; 67 வயது பெண் மரணம்
04 பேர் கவலைக்கிடம்

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டி ஒன்றும் பாடசாலை

06

உங்கள் பிள்ளையின் வெளிநாட்டுக் கல்விக்கான கடவுச்சீட்டு




வெளிநாட்டு நாணயத்தில் சேமித்திடுங்கள்

ETHERA ISURA Doodaru
PERSONAL FOREIGN CURRENCY ACCOUNT (PFCA)

- 2% மேலதிக வட்டி
- கல்வி மற்றும் மருத்துவ தேவைக்கான பணப் பரிமாற்றத்திற்குத் தரகு பணம் இல்லை
- சிறப்பு உடல்நலக் காப்புறுதி மற்றும் விபத்துக் காப்புறுதி
- கல்விச் சாதனைகளுக்குச் சிறப்புப் பணப் பரிசுகள்
  - லண்டன் அல்லது இலங்கை உயர்தர பரீட்சையில் சிறப்புச் சித்தி பெறும் ஒவ்வொரு பாடத்திற்கும் தலா ரூ. 10,000 பணப்பரிசு (அதிகபட்சம் 3 பாடங்கள் வரை)
  - லண்டன் அல்லது இலங்கை சாதாரணதர பரீட்சையில் சிறப்புச் சித்தி பெறும் ஒவ்வொரு பாடத்திற்கும் தலா ரூ. 5,000 பணப் பரிசு (அதிகபட்சம் 5 பாடங்கள் வரை)

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: +94 70 1750 294

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மக்கள் வங்கியில் வைப்பு செய்யும் வைப்புக்கள் அனைத்தும் இலங்கை வைப்பு காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK
Pride of the Nation

AA- (lka) ஃபிட்ச் ரேட்டிங், AAA- பிராண்ட் ஃபினான்ஸ் ரேட்டிங்
மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.




தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை (24) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோர் தலைமையில் விசேட தீபாவளி விழா நடைபெற்றது. ஜனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் இந்து மத சம்பிரதாயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்ததுடன் நிகழ்வு மிகவும் எளிமையாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, மனுஷ நாணயக்கார, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், முன்னாள் அமைச்சரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான அகில விராஜ் காரியவசம், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பாலித்த ரங்கே பண்டார, முன்னாள் அமைச்சர்களான தயா கமகே, அனோமா கமகே, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜா, ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.









## புத்தளம் கடற்கரைப்பூங்காவில் பொலிஸ் காவலரண் திறப்பு

(புத்தளம் தினகரன் நிருபர்)

பொதுமக்கள் நலன் கருதி புத்தளம் கொழும்பு முகத்திடல் கடற்கரைப்பூங்காவில் பொலிஸ் காவலரணொன்று அமைக்கப்பட்டுள்ளது. புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக்கின் வேண்டுகோளின் பேரில் புத்தளம் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமைய புத்தளம் இன்சீ சீமெந்து நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் இக்காவலரண் அமைக்கப்பட்டுள்ளது.

புத்தளம் நகரபிதா மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளின் பங்கேற்புடன் இந்த காவலரண் (21) உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

நீண்ட கால தேவையாக காணப்பட்ட இக்காவலரணைத் திறந்து வைத்து நகரபிதா உரையாற்றுகையில்,

இந்த காவலரண் திறந்து வைக்கப்பட்டதன் மூலம் இப்பகுதியில் ஒன்றுகூடும் மக்களுக்கு சமூக விரோதிகளால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களுக்கு தீர்வாகவும் போதைப் பாவனையாளர் மற்றும் வியாபாரிகளின் நடமாட்டத்தையும் கட்டுப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர், புத்தளம் பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் உட்பட பொலிஸ் உயரதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

## துப்பாக்கிகளுடன் இருவர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

குற்றச்செயல்களை மேற்கொள்ளும் நோக்கில் வெளிநாட்டில் தயாரித்த துப்பாக்கியொன்றையும் உள்நாட்டில் தயாரித்த துப்பாக்கியொன்றையும் வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அதிரடிப்படையின் கந்தளாய் முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய 24ஆம் திகதி திங்கட் கிழமை அக்போபுர பொலிஸ் பிரிவிலுள்ள சீனி தொழிற்சாலையின் 18 வது வெவ பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்கள் இருவரை கைது செய்துள்ளதுடன் இரண்டு துப்பாக்கிகளையும் அதற்கு பயன்படுத்தும் தோட்டாக்களையும் விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 42,51 வயதுடைய பேராறு கந்தளாய் மற்றும் ரஜ எல கந்தளாய் பகுதிகளை சேர்ந்தவர்கள் என்பது ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. விசாரணைகளை மேற்கொள்வதற்காக அக்போபுர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். அக்போபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 ஒக்டோபர் 26 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
23 முதல் 31 வரை
சுபஹ் - 04.41
லுஹர் - 11.56
அஸர் - 03.17
மஃரிப் - 05.53
இஷா - 07.04

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஐப்பசி 9
ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: பிரதமை



# தேர்தல் செலவினங்களை மட்டுப்படுத்தல் அவசியம்

## சட்டமூலத்தை உடன் நிறைவேற்ற பெப்ரல் கோரல்

தேர்தல்முறையில் மாற்றம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற விரிவான திருத்தங்களின் ஆரம்பமாக எதிர்பார்க்கப்படும் செலவினங்களை மட்டுப்படுத்துவதற்கான சட்டமூல வரைபை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பெப்ரல் அமைப்பு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளது. பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அரசியலமைப்பிற்கான 22 ஆவது திருத்தத்தின் ஊடாக இலங்கையில் வலுவானதொரு ஜனநாயக நிர்வாக முறையைக் கட்டியெழுப்புவதற்குக் காணப்பட்ட மிகச்சிறந்த வாய்ப்பு தவறவிடப்பட்டிருப்பினும், 20 ஆவது

06

### முதல் பெண்மணி மைத்திரி விக்ரமசிங்க வெள்ளியன்று யாழ் பயணம்

*யாழ்.விசேட நிருபர்*

நாட்டின் முதல் பெண்மணியும், களனிப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறையின் சிரேஷ்ட பேராசிரியரும், பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தில் அனுபவம் வாய்ந்த பெண்ணியவாதியுமான மைத்திரி விக்கிரமசிங்க நாளை மறுதினம், வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு செல்லவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள "பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தின் ஊடாகப் புதிய இயல்பு நிலையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்" என்ற

06

## அமெரிக்க திறைசேரி அதிகாரியுடன் எரிசக்தி அமைச்சர் கஞ்சன சந்திப்பு



மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர நேற்று (25) நாட்டுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க திறைசேரியின் பிரதி உதவி செயலாளர் ரொபர்ட் கப்ரோத்துடன் இலங்கையின் சக்தி மற்றும் எரிசக்தி துறை தொடர்பான முக்கிய கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார். ரொபேர்ட் கப்ரோத், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் அமெரிக்க திறைசேரி மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான

06

### இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுவோர்;

## முதற்கட்டமாக 10,000 ரூபா

*லோரன்ஸ் செல்வநாயகம்*

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் அனர்த்தங்களுக்கு உட்படுவோர் தாம் முதலில் அதற்கான புகைப்படமொன்றை எடுத்து அதனை அப்பிரதேசத்திலுள்ள கிராமசேவை அதிகாரிகளுக்கு சமர்ப்பித்தால் முதல்கட்ட கொடுப்பனவை பெற்றுக்கொடுக்க முடியுமென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மத்திய நிலையத்தின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க அதுதொடர்பில் தெரிவிக்கையில்,

நாட்டில் சீரற்ற காலநிலை காரணமாக அனர்த்தங்களுக்கு உட்படுவோர் முதலில் அந்த சந்தர்ப்பத்தை படம்பிடித்து பிரதேச கிராமசேவை அதிகாரிக்கு கையளிக்க வேண்டும். அவ்வாறு கையளிப்பவர்களுக்கு முதற்கட்டமாக 10,000 ரூபா கொடுப்பனவை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய அனர்த்தங்களுக்குட்பட்டோர் மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு உணவு பொருட்கள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன. 400 வீடுகளுக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு முதற்கட்டமாக

06

## மழையுடனான சீரற்ற காலநிலை இன்றிலிருந்து தணியும் வாய்ப்பு

*லோரன்ஸ் செல்வநாயகம்*

நாடு முழுவதும் தற்போது நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை இன்றிலிருந்து தணியுமென எதிர்பார்ப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் வட மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழைவீழ்ச்சி காணப்படும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

வட வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த 'சிட்ரன்' சூறாவளி நேற்று பங்களாதேஷ் கடற்பரப்பை நோக்கி நகர்ந்ததாகவும் எவ்வாறெனினும் வடஈசான மூலை திசையில் அது நகர்வதால் பாதிப்புகள் குறைவடைய வாய்ப்புள்ளதென்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்தது. அந்தவகையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மழை வீழ்ச்சி குறைவடையுமென எதிர்பார்ப்பதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதேவேளை, நேற்று முற்பகல் பங்களாதேஷ் நாட்டுக்குள் பிரவேசித்துள்ள சிட்ரன் சூறாவளி தாக்கத்தினால் அந்நாட்டில் 07 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அதனால் ஏற்பட்ட அனர்த்த பாதிப்பில் 28,000 பேர் பாதிக்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில்

06

## வாட்ஸ் அப் செயலி வழமைக்கு திரும்பியது

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நேற்று செயலிழந்த வாட்ஸ் அப் செயலி சுமார் ஒன்றரை மணி நேரத்துக்குப் பின் வழமைக்கு திரும்பியது.

நேற்று திடீரென தொழிநுட்ப கோளாறு காரணமாக வாட்ஸ்அப் சேவை முடங்கியது. அதனையடுத்து வாட்ஸ்அப் சேவைகள் இடையூறுகளைச் சந்தித்ததாக பயனர்கள் பலர் புகார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் நேற்று மதியம் வாட்ஸ்அப் செயலியின் சேவை முடங்கியிருந்தது. பயனாளிகளினால் செய்திகளை அனுப்பவோ பெறவோ முடியாமல் இருந்தது.

தகவல்களை அனுப்ப முடியாமல் வாட்ஸ்அப் செயலியின் சேவைகள் இடையூறுகளைச் சந்தித்து வருவதாக பலர் புகார் அளித்திருந்தனர்.

டுவிட்டரில் இது தொடர்பான ஹேஷ்டேக்கும் பரவியது. தொழிநுட்ப கோளாறு காரணமாக வாட்ஸ்அப் சேவை முடங்கியதாக தகவல்கள் வெளியாகின. வாட்ஸ்அப் சேவை முடங்கியதை அந்த நிறுவனம் உறுதி செய்ததுடன், பிரச்சினையை சுமார் ஒன்றரை மணி நேரத்தில் நிறுவனம் சரி செய்தது. பிரச்சினை

06




எமது பேரார்வமும்
பெரு நோக்கமும்
நாட்டுக்கு சேவையாற்றுவதே!

உங்கள் நம்பிக்கையின் பலம் தந்த ஊக்கத்தினால்
எம் பயணத்தின் மற்றுமொரு முக்கிய மைல் கல்லாக
எமது 500 ஆவது கிளையை திறந்து வைக்கின்றோம்.

கடந்த 39 ஆண்டுகளாக கொழும்பிற்கு அப்பாலுள்ள ஒவ்வொரு நகரம், ஊர் மற்றும் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு இலங்கையருக்கும் சேவையளிப்பதற்காக பேரார்வத்துடனான எமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றோம். இன்று நாம் நாடு முழுவதும் அதிகுறைந்த விலைகளுக்கு நியமம் கூறும் ஒரே சில்லறை விற்பனையாளராக உருவெடுத்திருப்பதோடு, எமது நாட்டு இளைஞர்களுக்கு நிலைபேறான திறமைசார் தொழில்களையும் வழங்கி வருகின்றோம். உள்நாட்டு விவசாயிகள் மற்றும் ஆரம்பகட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு புதிய சந்தைகளை நாம் துடிப்போடு கட்டமைத்துவரும் அதேவேளை, எமது நோக்கம் எப்பொழுதும் இலங்கையின் முன்னோக்கிய பயணத்துக்கு ஒத்துழைப்பு தருவதாகவே அமைந்துள்ளது. எமது 500 ஆவது கிளையை இல. 93, அக்குரேகொட வீதி, பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரியில், இன்று நாம் திறந்து வைக்கும் தருணத்தில் புத்தம்புது கொள்வனவு அனுபவத்தை பெற்றுக்கொள்ள நீங்களும் எம்மோடு இணைந்துகொள்ளுங்கள்.

Cargills Online | Cargills Food Hall | Cargills Xpress

Cargills food city
வீடு செல்லும் போது

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 09ஆம் நாள் புதன்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் அவ்வல் பிறை 29

### குறள் தரும் சிந்தனை



செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்

பகைவரின் செருக்கை அழிக்கும் தகுதியான கருவி பொருளைத் தவிர வேறொன்றும் இல்லாததால் அதனைச் சேமிக்க வேண்டியுள்ளது.

## பயணிகளுக்கு நியாயமான சேவை வழங்க வேண்டிய ஓட்டோ சாரதிகள்

இலங்கை எதிர்கொண்டுள்ள அந்நிய செலாவணி பற்றாக்குறையினால் தோற்றம் பெற்ற பொருளாதார நெருக்கடி தீவிரநிலையை அடைந்து நாட்டின் அரசியலிலும் பாரிய கொதிநிலையை ஏற்படுத்தியது. இதற்கு அந்நிய செலாவணியை அடிப்படையாகக் கொண்ட பெற்றோல் மற்றும் டீசல் பற்றாக்குறை முக்கிய காரணமாக அமைந்ததோடு, அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களது விலையேற்றத்திற்கும் வழிவகுத்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களை திட்டமிட்ட வகையில் விரிவான அடிப்படையில் அவர் ஆரம்பித்தார். கடந்த காலத்தில் நாடு பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்ட சந்தர்ப்பங்களின் போது, அவற்றில் இருந்து நாட்டை மீட்டெடுத்ததன் ஊடாக பெற்றுக் கொண்டுள்ள அனுபவங்களைப் பின்புலமாகக் கொண்டு அவர் இவ்வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலானார். தற்போது கடந்த காலத்தைப் போன்றல்லாது மிகத் தீவிரமான பொருளாதாரா நெருக்கடியை நாடு எதிர்கொண்ட போதிலும், தமது அனுபவங்களைப் பயன்படுத்தி ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களின் பயனாக பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தன்மை வீழ்ச்சி அடைய ஆரம்பித்துள்ளது. அதன் பிரதிபலன்களை மக்கள் ஏற்கனவே அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர்.

குறிப்பாக பெற்றோல், டீசல் பற்றாக்குறைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் விநியோகத்திற்கென கியூ.ஆர் கோட்டா முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பயனாக பயணிகள் போக்குவரத்து சேவை பெரும்பாலும் வழமைக்குத் திரும்பியுள்ளது. ஏனைய வாகனங்களும் முன்பு போன்றல்லாமல் நெருக்கடிகளை எதிர்கொள்ளாது எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. அத்தோடு எரிபொருள் மற்றும் எரிவாயு உட்பட ஏனைய அத்தியாயவசியப் பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தொழில்முறை போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுவரும் முச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்களும் அவற்றின் சாரதிகளும் கோட்டா முறையின் ஊடாகத் தமக்கு வழங்கப்படும் பெற்றோல் போதியதாக இல்லை. அதனை அதிகரித்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போதைய கோட்டா முறைமையின் கீழ் முச்சக்கர வண்டியொன்றுக்கு வாரத்திற்கு 05 லீற்றர் பெற்றோல் வழங்கப்படுகிறது. ஆனால் தொழில்முறை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்கு இந்த அளவு பெற்றோல் போதியதாக அமையாது. பயணிகள் போக்குவரத்து சேவைக்கு முச்சக்கர வண்டிகளைப் பயன்படுத்துகின்ற பெரும்பாலானவர்களின் வாழ்வாதார வருமான ஆதாரமாக ஓட்டோவே அமைந்திருக்கின்றது. அந்த வகையில் 05 லீற்றர் பெற்றோலைப் பயன்படுத்தி ஒரு வாரத்திற்கான வாழ்வாதார வருமானத்தைத் தேடிக்கொள்வதும் சிரமமான காரியம்.

இவ்வாறான நிலையில் தொழில்முறை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் ஓட்டோ வண்டிகளின் சாரதிகளதும் உரிமையாளர்களதும் நலன்களில் கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி, அவர்களுக்கு தற்போது வழங்கப்படும் பெற்றோலின் அளவை இரு மடங்காக, அதாவது 10 லீற்றர்களாக அதிகரித்து வழங்கத் தேவையான பணிப்புரையை வழங்கியுள்ளார்.

அதற்கேற்ப, மேல்மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் ஓட்டோ முச்சக்கர வண்'டிகளுக்கு நவம்பர் மாதம் 06 ஆம் திகதி முதல் வாரத்திற்கு 10 லீற்றர் பெற்றோல் வழங்கப்படவுள்ளது. இந்நாட்டில் தொழில்முறை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பெரும்பாலான முச்சக்கர வண்டிகள் மேல்மாகாணத்திலேயே காணப்படுகின்றன. அதனால் இத்திட்டத்தை மேல்மாகாணத்தில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவென பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளை பதிவு செய்யும் நடவடிக்கை நவம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளது. அதேநேரம் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் இச்சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் நவம்பர் 06 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை பதிவு செய்யப்படும். அதனை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் ஏனைய மாகாணங்களில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கும் பெற்றோல் வழங்கப்பட உள்ளது. ஜனாதிபதியின் இப்பணிப்புரையைப் பயணிகள் சேவையில் ஈடுபட்டுள்ள சகல ஓட்டோ வண்டிகளின் உரிமையாளர்களும் சாரதிகளும் வரவேற்றுள்ளனர்.

நாட்டில் 12 இலட்சம் முச்சக்கர வண்டிகள் காணப்படுகின்றன. அவற்றில் சுமார் 04 இலட்சம் ஓட்டோக்கள் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்டோக்களது உரிமையாளர்களதும் சாரதிகளதும் நலன்களைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நடவடிக்கைக்கு ஏற்ப, ஓட்டோ சாரதிகளும் உரிமையாளர்களும் பயணிகளின் நலன்களையும் முன்னிலைப்படுத்தி சேவை வழங்க தவறக்கூடாது. அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஜனாதிபதி ரணிலுக்கு எனது பூரண ஆதரவை தொடர்ந்தும் வழங்குவேன்



## 'மொட்டு கட்சியை விட்டு வெளியேறப் போவதில்லை' என்கிறார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

இதுவரையும் மனசாட்சிக்கு உடன்பாடான தீர்மானங்களை மட்டுமே எடுத்ததாகவும் மக்கள் ஆணைக்கு தலைவணங்கி தேவையான நேரத்தில் தேவையான அரசியல் முடிவுகளை எடுப்பதற்கு எப்போதும் பின்னிற்பதில்லை என்றும் தன்மீது இதுவரை நம்பிக்கை வைத்த மக்களுக்கு எந்தவகையிலும் துரோகம் செய்வதில்லை என்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளருமான பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தினார்.

"தற்போது ஜனாதிபதிக்கு ஆதரவளித்தல் என்பது யானை மீது சவாரி செய்வதல்ல" என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மொட்டுக் கட்சியை விட்டு தான் வெளியேறப் போவதில்லை என்று உறுதிப்படுத்திய அமைச்சர், மினுவாங்கொடை அரசியல் பேரவையில் இரகசிய வாக்கெடுப்பு ஒன்று நடத்தியது மொட்டுக் கட்சியை விட்டு வெளியேறுவதற்கு அல்ல என்றும் சுட்டிக்காட்டினார்.

கடந்த வார இறுதியில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வெளிநாட்டில் இருக்கும் போது அவரது அரசியல் குழு இரகசிய வாக்கெடுப்பை நடத்தியதாகவும், ரணதுங்க ஐக்கிய தேசியக் கட்சியில் இணையத் தயாராகி வருவதாகவும் பல பத்திரிகைகள் தெரிவித்திருந்தன.

நேற்றுமுன்தினம் (24) காலை நாட்டுக்கு வருகை தந்த பிரசன்ன ரணதுங்க இது தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

“நான் முக்கிய அரசியல் தீர்மானம் ஒன்றை எடுக்கத் தயாராகி வருவதாகவும், நான் வெளிநாட்டில் இருந்தபோது எனது மினுவாங்கொடை அரசியல் குழு உறுப்பினர்கள் இரகசியமாக வாக்கெடுப்பு நடத்தியதாகவும் கடந்த வார இறுதியில் பத்திரிகைகளிலும் பல இணையத்தளங்களிலும் வெளியான செய்தி தொடர்பில் எனது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்த இரகசிய வாக்கெடுப்பு கடந்த 20 ஆம் திகதி நடைபெற்றது. நான் தனிப்பட்ட பயணமாக வெளிநாட்டில் இருந்த நேரம் அது. இந்த முடிவுக்கு முன்னர் இருந்ததிட்டத்தின்படி நான் வெளிநாடு சென்றேன். 06, 07 ஆகிய இரு தினங்களில் அதற்கான விவாதமும் வாக்கெடுப்பும் நடத்தப்பட்டால் அதற்குத் தேவையான பங்களிப்பை வழங்க நான் தயாராக இருந்தேன். கட்சித் தலைமைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி இந்த விவாதமும் வாக்கெடுப்பும் பிற்போடப்பட்டுள்ள போதிலும் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் என்ற வகையில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அவைத்தலைவர் ஆகியோருக்கு அறிவித்து அதற்கான பொறுப்பை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் எமது ஆளுங்கட்சியின் துணை தலைமை அமைப்பாளரிடம் ஒப்படைத்தேன். எனது வெளிநாட்டுப் பயணம் ஜனாதிபதியின் அனுமதியுடன் இடம்பெற்றதால், 22ஆவது அரசியலமைப்புத் திருத்த விவாதத்தின் போது நான் வேண்டுமென்றே வெளிநாடு சென்றதாக என் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை மறுக்கிறேன்.

கடந்த 20ஆம் திகதி மினுவாங்கொடைஅரசியல்பீடத்தில்தற்போதைய அரசியல் சூழ்நிலையில் நான் எடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்த இந்த வாக்கெடுப்பு எனது அறிவுறுத்தலின் பேரிலேயே நடத்தப்பட்டது. ஒரு மனச்சாட்சியுள்ள அரசியல்வாதி என்ற வகையில் நாட்டிற்காக அரசியல் தீர்மானம் எடுக்கப்படும் போதெல்லாம் எனது தொகுதியின் அரசியல் பீடத்துடன் கலந்தாலோசித்தே 2015ஆம் ஆண்டு 'மஹிந்த காற்று' மேடையில் ஏறினேன். மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் தனியான அரசியல் கட்சி உருவாக்கப்பட வேண்டும் என்று நான் முதலில் பரிந்துரைத்தேன். மினுவாங்கொடையில் உள்ள இந்த அரசியல் பீடத்திற்கு தெரிந்து தான் இது நடந்தது. 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இந்த அரசியல் பீடத்துடன் கலந்தாலோசித்து தனித்துப் போட்டியிட வேண்டும் என்று கட்சிக்கு பரிந்துரைத்தேன்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையின் போது பிரதமர் பதவியை கைப்பற்றுமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பல்வேறு தரப்பினரிடம் யோசனை முன்வைத்திருந்த போதிலும், எந்தத் தரப்பும் அதை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சவாலை ஏற்றுக்கொண்டார். மொட்டு கட்சி அதற்கு பூரண ஆதரவை தெரிவித்தது.

நாடு திரும்பிய எனக்கு மினுவாங்கொடை சந்திப்பு தேர்தல் முடிவுகள் கிடைத்துள்ளதுடன், இந்த தருணத்தில் தற்போதைய ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட வேண்டும் என இந்த அரசியல் பீடத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதியின் காலை இழுக்காமல் அவர் முன்னெடுக்கும் அனைத்து வேலைத்திட்டத்திற்கும் ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடாகும்.

இன்று எமது நாடு நாட்டிற்கு நெருக்கடியான காலகட்டத்தை கடந்து வருகின்றது. நாட்டில் நிலவும் பொருளாதார, சமூக நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நாம் செய்ய வேண்டியது வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வதோ அரசாங்கத்தை கவிழ்க்க சதி செய்வதோ அல்ல. தற்போதைய சூழ்நிலையில் நாட்டை மீட்டெடுக்க நமது ஆதரவை வழங்க வேண்டும்.

மினுவாங்கொடை அரசியல் பீடத்தின் கருத்துக்குப் பணிந்து தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எனது பூரண ஆதரவை தொடர்ந்தும் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக எந்த சவாலையும் ஏற்க தயாராக இருக்கிறேன் என்று இங்கு வலியுறுத்துகிறேன்.

# கிருஷ்ண பெருமானை அடிக்கடி வழிபட தவறாத பக்தர் பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக்



## கொவிட் முடக்க காலத்தில் அறிமுகப்படுத்திய திட்டத்தினால் இங்கிலாந்து மக்களின் மனதை வென்றவர்!

இங்கிலாந்து பிரதமராகத் தெரிவாகி உள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக்கிற்கு பல்வேறு நாட்டுத் தலைவர்களும் வாழ்த்துத் தெரிவித்து வருகிறார்கள்.

ரிஷி சுனக்கின் (வயது 42). அவரது பாட்டன் இந்தியாவில் உள்ள பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர் ஆவார். அவரது பெயர் ராம்தாஸ் சுனக். பஞ்சாப்புக்கு உட்பட்ட குஜ்ரன்வாலா பகுதிதான் அவரது பூர்வீகம் ஆகும். நாடுகள் பிரிக்கப்பட்டபோது அந்த பகுதி பாகிஸ்தானுக்கு சென்று விட்டது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் இருந்த ராம்தாஸ் சுனக், எழுதுவினைஞராக தனது பணியைத் தொடங்கினார். பின்னர் அவர் இந்தியாவில் இருந்து 1935 ஆம் ஆண்டு கிழக்கு ஆபிரிக்காவுக்கு உட்பட்ட நைரோபிக்கு சென்றார். 1937 ஆம் ஆண்டு டெல்லியைச் சேர்ந்த சுஹாக் ராணி சுனக் என்ற பெண்ணை அவர் திருமணம் செய்து கொண்டார்.

இவர்களுக்கு பிறந்தவர்தான் ரிஷி சுனக்கின் தந்தை யஷ்வீர் சுனக். அவர் கென்யாவில் பிறந்தார். அவரது தாய் உஷா, தான் சானியாவில் பிறந்தவர் ஆவார். இவர்கள் அனைவரும் 1960 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு புலம்பெயர்ந்தனர்.

மருத்துவரான யஷ்வீரும், மருந்தாளரான உஷாவும் இங்கிலாந்தின் ஹாம்பிசைர் மாகாணம் சவுத்தாம்ப்டன் நகரில் மருந்தகம் ஒன்றை அமைத்து தொழில் செய்து வந்தனர். ஹாம்ப்சைரில் பாடசாலைப்படிப்பை முடித்த ரிஷி சுனக், பின்னர் வின்செஸ்டரில் உள்ள ஆண்கள் பாடசாலையில் அங்கேயே தங்கி படித்தார். அவர் அங்கு மாணவர் தலைவராக விளங்கினார். பின்னர் அவர் 2001 ஆம் ஆண்டு ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துக்கு உட்பட்ட லிங்கோல்ன் கல்லூரியில் சேர்ந்து தத்துவம், அரசியல், பொருளாதார பிரிவில் பட்டம் பெற்றார்.

இந்த நேரத்தில் அவர் கன்சர்வேடிவ் கட்சியில் சேர்ந்து பயிற்சி பெற்று, அரசியல் பணிகளிலும் ஈடுபட்டு வந்தார்.

2006 ஆம் ஆண்டு அவர் ஸ்டாண்ட் போர்ட் பல்கலைக்கழகத்தில் எம்.பி.ஏ. பட்டமும் பெற்றார். பின்னர் ஒரு வங்கியில் ஆலோசகராக பணியில் சேர்ந்த ரிஷி சுனக், பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றி தனது திறமையை நிரூபித்தார். மேலும் அவர் இங்கிலாந்தில் உள்ள இன்போசிஸ் நிறுவனத்தின் உரிமையாளர் நாராயணமூர்த்திக்கு சொந்தமான கேட்டர்மாரன் வென்சர்ஸ் நிறுவனத்தின் இயக்குனராக பணியில் சேர்ந்தார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு முழுமையாக அரசியல் பிரவேசம் மேற்கொண்ட ரிஷி சுனக், கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் யார்க்சைர் மாகாணத்தில் உள்ள ரிச்மண்ட் தொகுதியில் போட்டியிட்டு இங்கிலாந்து நாடாளுமன்றத்துக்கு எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டு கறுப்பு மற்றும் சிறுபான்மையின மக்களின் தலைவராக ரிஷி சுனக் நியமிக்கப்பட்டார். அதையடுத்து 2015 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலிலும் ரிஷி சுனக் எம்.பி.யாக தெரிவு செய்யப்பட்டார். 2017 ஆம் ஆண்டு நடந்த தேர்தலிலும் வெற்றிபெற்ற ரிஷி சுனக், தனது ஆதரவு பலத்தை நிரூபித்தார்.

இதையடுத்து அவரை அப்போதைய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் நாட்டின் பொருளாதார தலைமைச் செயலாளராக நியமித்தார். 2019 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்ற ரிஷி சுனக், இங்கிலாந்து நாட்டின் உயரிய பதவியான திறைசேரி தலைவராக நியமிக்கப்பட்டார். அப்போது இங்கிலாந்து கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கியது. அந்த சமயத்திலும் ரிஷி சுனக் திறம்பட பட்ஜெட் தாக்கல் செய்தார். வரி விலக்குகளை அறிவித்தார். மேலும் கபினட் அமைச்சராக பதவி வகித்த ரிஷி சுனக்,கொரோனா காலத்தில் முக்கிய முடிவுகளை எடுக்க காரணமாக இருந்தார்.

குறிப்பாக இவர் கொரோனா காலத்தில் பணியாளர் தக்கவைப்பு திட்டத்தை அமுல்படுத்தினார். இந்தத் திட்டத்திற்கு அரசு முக்கியத்துவம் கொடுக்க தயங்கிய போதும், ரிஷி சுனக் தனது பொருளாதார யுக்தியால் திட்டத்தை அமுல்படுத்தினார். இந்தத் திட்டம் மூலம் கொரோனா காலத்தில் பணிகள் நடைபெறாதபோது அரசும், தனியார் நிறுவனங்களும் தங்கள் பணியாளர்களுக்கு 80 சதவீத ஊதியத்தை வழங்கின. இதன்மூலம் ரிஷி சுனக் இங்கிலாந்து மக்களின் கவனத்தை ஈர்த்தார்.



இப்படி பல்வேறு வரலாறுகளை படைத்த ரிஷி சுனக் கடைசியாக இங்கிலாந்து பெண் பிரதமர் லிஸ் டிரஸ் தலைமையிலான அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்தார். தற்போது அந்நாட்டின் பிரதமராக உயர்ந்துள்ளார். தற்போது ரிஷி சுனக் இங்கிலாந்தின் யார்க்சைர் நகரில் வசித்து வருகிறார்கள். இந்துவான ரிஷி சுனக் அங்குள்ள கிருஷ்ணர் கோவிலுக்கு அடிக்கடி சென்று வழிபட்டு வருவார்.

திருச்சி
எம்.கே.ஷாகுல் ஹமீது...

# யாழ் பல்கலைக்கழகத்தில் இன்று மெய்கண்டார் விழா

மெய்கண்டாரின் குருபூசையை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை, உயர்பட்டப் படிப்புகள் பீட சைவசித்தாந்த முதுமாணிக் கற்கை அணி ஏஐஐ இணைந்து நடாத்தும் மெய்கண்டார் விழா இன்று 26.10.2022 புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சைவசிந்தாந்தத்துறைத் தலைவர் கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் தலைமையில் நடைபெறுகிறது.

நல்லை ஆதீன 2 ஆவது குருமகாசந்திதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கலைப்பீடாதிபதி தகைசார் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர், இலங்கை சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத் தலைவர் சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ. து. கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் ஆகியோரின் ஆசியுரைகளுடன் நிகழவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. ஸ்ரீசற்குணராஜாவும், கௌரவ விருந்தினர்களாக உயர்ப்பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் செ. கண்ணதாசன், இந்துக்கற்கைகள் பீடாதிபதி கலாநிதி சுகந்தினி சிறிமுரளிதரன் ஆகியோரும் கலந்துகொள்ள உள்ளார்கள்.

இந்நிகழ்வில வரவேற்புரையினை கலாநிதி இ.ஜெயந்திரன், நன்றியுரையினை தி.செல்வமனோகரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். சைவசித்தாந்த மரபு தொடர்பான காணொளி, பட்டிமன்றம், வில்லிசை, மற்றும் கலாநிதி மு.ரதிதரன் அவர்களின் நெறியாள்கையில் மெய்கண்டார் நாடகம் என்பன நிகழ்வுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அடிமைப்படுத்திய இங்கிலாந்தின் அரியணையில் அமர்ந்த ரிஷி சுனக்!

## சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யமாகத் திகழ்ந்த பிரிட்டனுக்கு இந்திய வம்சாவளிப் பிரதமர்!

சூரியன் அஸ்தமனம் ஆகாத சாம்ராஜ்யமாக முன்னொரு காலத்தில் திகழ்ந்த இங்கிலாந்தின் பிரதமராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பிரிட்டனின் ஆளும் கன்சர்வேடிவ் கட்சித் தலைவராக ரிஷி சுனக் தெரிவானதையடுத்துஅவர் பிரிட்டனின் பிரதமராகியுள்ளார். பிரிட்டன் அரசியல் வரலாற்றில் முதன் முறையாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் பிரதமராகி உள்ளார்.



கடந்த செப்டம்பர் மாதம் 6ஆம் திகதி பிரிட்டன் பிரதமராகப் பதவியேற்றிருந்த லிஸ் ட்ரஸ், அங்கு நிலவிய பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக கடந்த வியாழக்கிழமை (20.10.2022) தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார். இதைத் தொடர்ந்து, பிரதமர் பதவிக்காக நடந்த தேர்தலில் பென்னி மோர்டவுன்ட் பின்வாங்கியதை அடுத்து ரிஷி சுனக் பிரதமராகப் பதவி ஏற்றார்.

கடந்த ஏழு மாதங்களில் பிரிட்டன் பிரதமராகப் பதவியேற்கும் மூன்றாவது பிரதமர் ரிஷி சுனக் ஆவார். பொரிஸ் ஜோன்சனுக்குப் பிறகு பதவிக்கு வந்த லிஸ் ட்ரஸ் 45 நாட்கள் பதவியிலிருந்த பிறகு ஒக்டோபர் 20 அன்று பதவி விலகினார். அவருக்குப் பின் தற்போது ரிஷி சுனக் பிரதமராகியுள்ளார்.

ரிஷி சுனக் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். பிரிட்டன் வரலாற்றில், இந்திய வம்சாவளியைச் சார்ந்த ஒருவர் பிரதமர் பதவிக்கு வந்திருப்பது இதுவே முதல் முறையாகும். கன்சர்வேடிவ் கட்சியின் உறுப்பினரான இவர், கடந்த 2015 முதல் ரிச்மண்ட் (யார்க்ஸ்) நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். ரிஷி சுனக், இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்றபோது பகவத்கீதையின் மீது உறுதிமொழி எடுத்திருந்தார்.

இவரின் பெற்றோர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள். 1960 களில் கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குக் குடிபெயர்ந்துள்ளனர்.

## இந்திய மக்களுக்கும், உலகிலுள்ள இந்துக்களுக்கும் கிடைத்த கௌரவம்

சுனக்கின் தந்தை யாஷ்வீர் சுனக், தேசிய சுகாதார சேவை நிலையத்தின் பொதுப்பயிற்சியாளராக இருந்தவர். அவரின் தாயார் உஷா சுனக் இரசாயன கடை ஒன்றை நடத்தி வந்தவர். ரிஷி சுனக்கின் மனைவி இந்தியாவின் வர்த்தகப் பிரமுகரான இன்ஃபோசிஸின் தலைவர் நாராயண மூர்த்தியின் மகள் அக்ஷதாமூர்த்தி ஆவார்.

ரிஷி சுனக்கின் ஆண்டு வருமானம் 700 மில்லியன் பவுண்ஸ்களுக்கு மேல் ஆகும். இந்த வருமானத்தை அவர் இங்கிலாந்தில் உள்ள சொத்துக்களில் முதலீடு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ரிஷி சுனக் சிறந்த எழுத்தாளரும் ஆவார். பொருளாதாரம் வணிகம் சார்ந்த பல புத்தகங்களையும் அவர் எழுதியுள்ளார். கொவிட் 19 நோய்த்தொற்று காலகட்டத்தில் ரிஷி சுனக் அரசியலிலும் கன்சர்வேடிவ் கட்சியிலும் மிகவும் பிரபலமானவராக இருந்துள்ளார்.

பிரதமர் போட்டியில் அவருடன் இருந்த இன்னொரு வேட்பாளரான பென்னி மோர்டான்ட் முக்கிய பொறுப்புக்கு கொண்டுவரப்படலாம். அத்துடன் முன்னாள் சுகாதார அமைச்சர் மாட் ஹான்காக், சுயெல்லா பிரேவர்மேன் ஆகியோரும் புதிய அமைச்சரவையில் இடம்பெற வாய்ப்பிருக்கிறது.

ரிஷி சுனக் நேற்று உத்தியோகபூர்வமாக பதவியேற்கவிருந்தார். ரிஷி சுனக்குடனும் முன்னாள் பிரதமர் லிஸ் ட்ரஸ்ஸுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் லண்டனுக்கு திரும்பவிருந்தார். பிரித்தானிய அரசியலில் ஆட்சித் தரப்பில் கடந்த சில நாட்களாக நிலவிய குழப்பங்களின் வரிசையில் ஏழுவாரத்தில் இரண்டாவது பிரதமராக ரிஷி சுனக் பதவியேற்றுள்ளார்.

இந்தப் போட்டியில் களமிறங்க திட்டமிட்டிருந்த முன்னாள் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் இந்தக் களத்தில் இருந்து வெளியேறியுள்ள நிலையில், எஞ்சிய போட்டியாளராகக் கருதப்பட்ட பென்னி மோர்டனும் இறுதிநேரத்தில் போட்டியில் இருந்து விலகியுள்ளதால் ரிஷி சுனக் போட்டியின்றி கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டதையடுத்து பிரதமராகும் வாய்ப்பு ஏற்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. பிரித்தானிய அரசியலில் முதற்தடைவையாக ஆசியப் பூர்வீகத்தைக் கொண்ட பிரதமராகவும்,வயதில் குறைந்த பிரதமராகவும் ரிஷி சுனக் பதவியேற்றுள்ளார்.

ரிஷி சுனக் கடந்த 1980 ஆம் ஆண்டு மே 12 ஆம் திகதி பிரிட்டனின் சவுதாம்ப்டன் நகரத்தில் பிறந்தவர். இவரது பெற்றோர் யாஷ்விர் மற்றும் உஷா சுனக் இந்திய ஆபிரிக்க பின்புலத்தைக் கொண்டவர்கள்.

கென்யா நாட்டில் பிறந்த இவரது தந்தை யாஷ்விரின் பின்புலம் ஒருங்கிணைந்த பிரிட்டிஷ் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்தது. ரிஷி சுனக்கின் தந்தை வழி மூதாதையர்கள் பிறந்த இடம் தற்போது பாகிஸ்தானின் குஜ்ரான்வாலாவில் உள்ளது.

1960 ஆம் ஆண்டுக்கு பிறகு ரிஷி சுனக்கின் பாட்டனும் பாட்டியும் கென்யாவுக்கு குடிபெயர்ந்தனர். தற்போது அப்பகுதி தன்சானியா எல்லையின் கீழ் வருகிறது. அதன் பின்னர் பிரிட்டன் சென்ற அவரது தந்தை யாஷ்விர் சுனக் தேசிய சுகாதார மையத்தில் பணிபுரிந்தவர்.

அவரது தாய் உஷா சுனக் மருந்தகம் நடத்தி வந்தார். 42 வயதான ரிஷி சுனக் இந்து மதத்தைச் சேர்ந்தவர்.

தன்னுடைய பெற்றோர் ஏழை, எளிய மக்களுக்கு அர்ப்பணிப்போடு உதவுவதைப் பார்த்தே தான் வளர்ந்ததாக தன்னுடைய இணையதள பதிவில் குறிப்பிட்டு இருக்கிறார் ரிஷி சுனக். உலக புகழ்பெற்ற வின்செஸ்டர் கல்லூரி, பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், அமெரிக்காவின் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகங்களில் அரசியல், பொருளாதாரம், தத்துவம் உயர்கல்வியை அவர் பயின்றார்.

2001 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை கோல்ட்மேன் சொக்ஸ் முதலீட்டு வங்கியில் ஆய்வாளராக பணியாற்றிய அவர், இன்ஃபோசிஸ் இணை நிறுவனர் நாராயணமூர்த்தி நடத்தி வந்த கடாமரான் வென்சர்ஸ் நிறுவனத்தின் இயக்குநராக கடந்த 2013 முதல் 2015 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். கர்நாடகாவைச் சேர்ந்த இன்போசிஸ் நாராயணமூர்த்தியின் மகள் அக்ஷதா மூர்த்தியை ரிஷி சுனக் திருமணம் செய்தார்.

"சர்வதேச அளவில் படிக்க, பணியாற்ற வாழ வாய்ப்பு கிடைத்தது என் அதிர்ஷ்டம். நான் என் மனைவி அக்ஷதாவை கலிஃபோர்னியாவில் சந்தித்தேன். எங்களுக்கு கிருஷ்ணா, அனோஸ்கா என 2 மகள்கள் உள்ளனர். அவர்கள் என்னை மகிழ்ச்சியோடும், பரபரப்போடும் வைத்துள்ளார்கள்" என்று தனது குடும்பம் குறித்து தெரிவித்து இருந்தார் சுனக்.

தன்னுடைய ஓய்வு நேரத்தில் உடற்பயிற்சி செய்வது, கிரிக்கெட், கால்பந்து விளையாடுவது, சினிமா பார்ப்பது போன்றவற்றை செய்கிறார் ரிஷி சுனக். அரசியலுக்கு நுழைந்த பிறகு 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கன்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளராக ரிச்மாண்ட் தொகுதியில் நிறுத்தப்பட்டு வெற்றி பெற்றார் ரிஷி. 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிலும் ரிஷி சுனக் இதே தொகுதியில் எம்பியாக தெரிவானார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு பிரிட்டனின் உள்ளாட்சி அரசியல்துறை அமைச்சராக பதவியேற்ற ரிஷி சுனக், 2019 ஆம் ஆண்டு பிரிட்டன் கருவூலத்தின் தலைமைச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பிரிட்டன் நிதியமைச்சராக பொறுப்பேற்ற அவர், இந்த ஆண்டு ஜுலை வரை பதவிவகித்தார். வீழ்ச்சியில் உள்ள பிரிட்டன் பொருளாதாரத்தை ரிஷி சுனக் பிரதமராகி மீட்பார் என்று நம்புகிறார்கள் அந்நாட்டு மக்கள்.

இந்தியாவை ஒரு காலத்தில் ஆட்சி செய்த பிரிட்டனையே ஆட்சி செய்யும் பிரதமராக இந்திய வம்சாவளியான ரிஷி சுனக் பதவியேற்பது இந்திய மக்களை மகிழ்ச்சியடையச் செய்து இருக்கிறது. காலச்சக்கரத்தில் இவ்வாறான நிகழ்வொன்று நடந்துள்ளதை மக்கள் வியப்புடன் பார்க்கின்றனர்.

பொரிஸ் மற்றும் லிஸ் ட்ரஸ் ஆதரவாளர்களுக்கு வாய்ப்பளித்து, ஒருமித்த ஆதரவைப் பெற ரிஷி முயற்சி ரிஷி முடிவு செய்துள்ளார். தமது கட்சியில் செயல் திறம் மிகுந்தவர்களுக்கு வாய்ப்பளிக்க அவர் முடிவு செய்துள்ளார்.

தற்போதைய இக்கட்டான சூழலை எதிர்கொள்ள செயல் திறம் மிகுந்தவர்களுக்கு தமது அமைச்சரவையில் வாய்ப்பளிக்க ரிஷி சுனக் வாக்குறுதி அளித்துள்ளார். இதன் பொருட்டு, இரவு வெகுநேரம் வரையில் தமது ஆலோசகர்களுடன் தீவிர கலந்தாலோசனையில் ரிஷி சுனக் ஈடுபட்டதாக தெரியவந்துள்ளது.

இந்தியாவை 200 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த பிரித்தானியாவை தற்போது ஒரு இந்தியர் ஆளப்போகிறார் என்பது உலகு எங்குமுள்ள இந்திய வம்சாவளி மக்களுக்கும் இந்துக்களுக்கும் பெருமைக்குரிய விஷயமாக உள்ளது.

அவரு மாமனாரான இன்போசிஸ் நாராயண மூர்த்தி மருமகனுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் "ரிஷி சுனக் விடயத்தில் நாங்கள் பெருமை கொள்கிறோம், அவர் தொடர்ந்து வெற்றிபெற வாழ்த்துகிறோம். இங்கிலாந்து மக்களுக்கு அவர் தன்னால் முடிந்ததைக் கண்டிப்பாகச் செய்வார் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பு ரமடா ஹோட்டலில் யாழ். விருந்து உணவுத்திருவிழா

## நாளை முதல் 30ஆம் திகதி வரை



கொழும்பு ரமடா ஹோட்டலின் ஏற்பாட்டில் யாழ். விருந்து உணவுத் திருவிழா நாளை 27ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை Ramada's Gardenia restaurant இல் இரவு 7.00 மணிக்கு ஆரம்பமாகி இரவு 11.00 மணிவரை நடைபெறவுள்ளது.

இது தொடர்பான பத்திரிகையாளர் மாநாடு ரமடா ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஹோட்டலின் பொதுமுகாமையாளர் வாஸிம் காதர், பணிப்பாளர் ஜயந்த அபேசிங்க, சிஸ்டர் கிச்சனின் துஷாரா இன்னாசித்தம்பி, தனு இன்னாசித்தம்பி பொதுமக்கள் தொடர்பு அதிகாரி விதாங்கி வீரதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ். மண்ணில் உற்பத்தியான மிளகாயத்தூள் கலவைகள், சுவையூட்டிகள் மற்றும் மூலப்பொருட்களை அங்கிருந்தே கொண்டுவந்து தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் இந்த யாழ். விருந்தில் பரிமாறப்படவுள்ளன.

யாழ். விருந்து உணவுத்திருவிழாவில் வடக்கின் பாரம்பரிய சிறுதானியங்களில் உடலுக்குத் தேவையான புரதம், கல்சியம், விட்டமின்கள், நார்ச்சத்துகள் நிறைந்த உணவு வகைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

யாழ். விருந்தில் சைவ மற்றும் அசைவ உணவு பழைய, பாரம்பரியமான உணவுகள், ஒடியல் கூழ், ஆட்டுக்கால் சூப், குடா இறால் கறி, கடலுணவுகளை வீடுகளில் சமைப்பதுபோல ரமடாவின் சமையல் கலை நிபுணர்களுடன் இணைந்து சமைத்து விருந்தளிக்க தயாராக இருப்பதாக my Sister's kitchen இன் துஷாரா மற்றும் தனு இன்னாசித்தம்பி சகோதரர்கள் தெரிவித்தனர்.

கொழும்பு ரமடா ஹோட்டல் 2002 ஆம் ஆண்டு இந்த யாழ் உணவுத் திருவிழாவை அறிமுகப்படுத்தியிருந்தது. இம்முறை பல புதிய உணவுவகைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்த ஹோட்டலின் பொதுமுகாமையாளர் வாஸிம் காதர், இம்முறையும் பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்து கொள்ளவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

# குளியலறை உபகரண கைத்தொழில் துறையின் நிலைமை; Sri Lanka Ceramics & Glass Council கலந்தாலோசனை



செரமிக் தொழிற்துறையில் உள்ள அனைத்து தரப்பினருக்கும் இடையே ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கான உயர் அமைப்பான Sri Lanka Ceramic & Glass Council (SLCGC) (இலங்கை செரமிக் மற்றும் கண்ணாடி சபை), இலங்கை குளியலறை உபரகண துறையின் தரம், கட்டுப்படியான விலை, அதன் தன்னிறைவு பற்றிய குழுநிலை விவாதத்தை அண்மையில் நடத்தியிருந்தது. கடந்த 19ஆம் திகதி கொழும்பு ஹில்டனில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள், குளியலறை உபகரண உற்பத்தியாளர்கள் கலந்துகொண்டதோடு, இத்துறையில் புகழ்பெற்ற குழுவொன்றுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

குறித்த கலந்துரையாடல் குழுவி ல் பிரதம விருந்தினராக கைத்தொழில் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரண கலந்து கொண்டதோடு, கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.எம். திலகா ஜயசுந்தர, இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் ரோஹண விஜேசேகர, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் கலாநிதி சாரங்க அழகப்பெரும, Lanka Minerals & Chemicals (Pvt) Ltd முகாமைத்துவப் பணிப்பாளர் மான வச்சந்திர போபிட்டிய, Royal Ceramics Lanka PLC நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அரவிந்த பெரேரா, RSL குழும நிறுவனங்களின் தலைவர் டொக்டர் நிஷாந்த நாணயக்கார ஆகியோரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலின் போது, SLCGC அமைப்பானது, உள்ளூர் குளியலறை உபகரண தொழில்துறை தொடர்பில் நிலவும் தவறான கருத்தொன்று தொடர்பில் எடு த்துரைத்தது. இத்துறையில், நாட்டில் 1 அல்லது 2 உற்பத்தியாளர்கள் மட்டுமே இருப்பதாக இலங்கையிலுள்ள பலர் இன்னும் நம்புகின்றனர். இருப்பினும், இன்று தொழில்துறையில் 8 இற்கும் மேற்பட்ட சிறிய, நடுத்தர, பெரிய அளவிலான உற்பத்தியாளர்கள் உள்ளனர். அவர்கள் பல்வேறு மட்டத்திலான விலைகள் மற்றும் மாறுபட்ட தரநிலைகளில் உற்பத்திகளை வழங்கக்கூடிய திறன் கொண்டவர்களாக உள்ளனர் என்பதை அது சுட்டிக்காட்டியது.

இவ்வாறான உற்பத்தியாளர்கள் வரிசையில், Royal Ceramics Lanka PLC, RSL Ceramics (Pvt) Ltd., Mulatiyaana Ceramics (Pvt) Ltd., Nilwala Ceramics Village (Pvt) Ltd., Otto Bath ware, Hega Tile (Pvt) Ltd., Embilipitya Ceramics (Pvt) Ltd., Novel Ceramics (Pvt) Ltd., and Dilax Chemical (Pvt) Ltd ஆகியன உள்ளது. இந்நிகழ்வில், மேற்குறிப்பிட்ட சில உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்பட்ட பல்வேறு தரத்திலும், விலைகளிலும் அமைந்த தயாரிப்புகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

கொவிட்19 தொற்றுநோயின் காரணமான தாக்கங்கள் மற்றும் உள்ளூர் குளியலறை உற்பத்தி தொழில் துறையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி குறித்தும் இக்குழு கலந்துரையாடியது. தற்போதுள்ள இறக்குமதி கட்டுப்பாடுகள் இத்தொழில்துறையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை தொடர்பிலும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

ஏராளமான புதிய தொழிற்சாலைகள் மற்றும் கணிசமான அளவிலான உற்பத்தியின் அதிகரிப்பு ஆகியன காரணமாக, 2 வருடங்களுக்குள் இத்தொழில்துறையானது அது அடைய விரும்பிய இலக்கை அடைய முடிந்தது. இத்தொழில்துறைக்குத் அவசியமான 80% மூலப்பொருட்களை உள்நாட்டிலேயே பெற முடியும் எனும் உண்மையை SLCGC அமைப்பானது நிரூபித்துக் காட்டியுள்ளது. இதன் காரணமாக, இதற்கான மூலப்பொருட்களின் இறக்குமதியை கணிசமாகக் குறைக்க முடியும்.

# மக்களின் எதிர்பார்ப்புகளை அறிந்து கொள்வதற்காக வடபகுதிக்கு விஜயம் செய்த SLT-MOBITEL அணி

வடபகுதியில் தனது வாடிக்கையாளர்களின் தேவைகளை இனங்காண்பதற்காகவும், அப்பிரதேசத்தில் அதிகரித்துச் செல்லும் நிலையான மற்றும் மொபைல் இணைப்புகளின் சேவைகளை மேம்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தும் வகையில் SLTMOBITEL இன் உயரதிகாரிகள் குழுவினர், யாழ்ப்பாணத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர். இந்த விஜயத்தின் போது வாடிக்கையாளர்கள் மற்றும் மக்களின் தேவைகள் தொடர்பில் இவர்கள் ஆராய்ந்திருந்தனர்.

சிரேஷ்ட அங்கத்தவர்கள் அடங்கலாக, நிறுவனத்தின் நாற்பது பேரைக் கொண்ட குழுவினர், இந்த விஜயத்தில் ஈடுபட்டனர். பொதுமக்கள், சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்கள், வர்த்தகங்கள், தொழில்முனைவோர், மாணவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பல தரப்பினருடனும் இந்த அணி தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தது. இந்த ஒவ்வொரு பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் எதிர்நோக்கும் சவால்கள் பற்றி கவனம் செலுத்தியிருந்தது.



SLT குழும தவிசாளர் ரொஹான் பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், “நிறுவனத்தில் வடபிராந்தியம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது முதல், வடபிராந்தியத்தைச் சேர்ந்த பல பொறியியலாளர்கள் உறுதியான வலையமைப்பைக் கட்டியெழுப்ப பங்களிப்பு வழங்கியுள்ளனர். வட பிராந்தியத்தைச் சேர்ந்த எமது ஊழியர்கள் மற்றும் அலுவலகங்கள் 40 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்றன. நாட்டில் காணப்படும் இரண்டாவது மிகவும் உயரமான வலையமைப்பு கோபுரம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது. வடபகுதி சகோதர சகோதரிகளுக்கு ஆதரவளிப்பதற்கு எம்மாலான சகல பங்களிப்பையும் நாம் வழங்குவோம்” என்றார்.

இக்குழு நெடுந்தீவுக்கும் விஜயம் செய்திருந்தது. வட மாகாணத்தின் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் அபிவிருத்தி எதிர்பார்ப்புகளின் பிரகாரம் இந்த விஜயம் அமைந்திருந்தது. இந்தத் தீவை, இலங்கையின் சுற்றுலா மையமாக மாற்றக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதுடன், நெடுந்தீவை சுற்றுலா மையமாக மாற்றுவதனூடாக, இந்தத் தீவைச் சேர்ந்த சுமார் ஐயாயிரம் மக்களுக்கு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு சிறந்த வாய்ப்பாக அமைந்திருக்கும்.

ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு பொருத்தமான வகையில் சேவைகளை எவ்வாறு மேம்படுத்த முடியும் என்பது தொடர்பில் யாழ்ப்பாண அலுவலகத்தின் ஊழியர்கள் மற்றும் பிராந்திய அணிகளுடன் SLTMOBITEL இன் சிரேஷ்ட நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் சந்திப்பொன்றை முன்னெடுத்திருந்தனர். வட பகுதியைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்காக விசேடமான கலோ கலோ பக்கேஜை அண்மையில் SLTMOBITEL அறிமுகம் செய்திருந்தது. தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் வியாபாரங்களுக்கு இந்த நெருக்கடியான பொருளாதாரச் சூழலில் பல அனுகூலங்களை வழங்குவதாக இந்தப் பக்கேஜ் அமைந்துள்ளது.

# பாணந்துறை அம்பலந்துவையில் கோஷ்டி மோதல்,03 பேர் கைது

**மொறட்டுவை மத்திய விசேட நிருபர்**

பாணந்துறை அம்பலந்துவையில் ஏற்பட்ட கோஷ்டி மோதலில் இருவர் காயமடைந்து பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், மூவரை நேற்று கைதுசெய்துள்ளதாகவும் பாணந்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமந்த வெதகே தெரிவித்தார்.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, கடந்த திங்களன்று (24 ) முச்சக்கர வண்டியில் மூவர் அம்பலந்துவை ஊடாக பயணித்துக் கொண்டிருந்த போது முச்சக்கர வண்டி விபத்துக்கள்ளாகியதில் பயணித்தவர்களும் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் மது போதையில் இருந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். விபத்துக்குள்ளான முச்சக்கர வண்டியை மீட்க உதவியவர்களுக்கும் முச்சக்கர வண்டியில் வந்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தகராறு இறுதியில் கைகலப்பில் நிறைவடைந்ததாகவும் இதன் காரணமாக இவர்கள் காயமடைந்து ஆஸ்பத்திரிகையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர். பாணந்துறை தெற்கு பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## நோயாளர்களிடமிருந்து பணம்...

இதற்கு வைத்தியசாலையிலுள்ள சில ஊழியர்களும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார். நோயாளர்களின் பணம், கையடக்கத் தொலைபேசி மற்றும் தங்க நகைகளை திருடிய சிலர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## CTB பஸ்ஸுடன் பாடசாலை...

மாணவர்களை ஏற்றிச் செல்லும் பாடசாலை சேவை பஸ் வண்டியொன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். அதிஷ்டவசமாக விபத்து நடந்த வேளையில் பாடசாலை பஸ் வண்டியில் மாணவர் எவரும் பயணிக்கவில்லை என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

மேற்படி விபத்தில் 38க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் 05 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அதில் ஒரு பெண் உயிரிழந்துள்ளதாகவம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.மரணமான பெண் 67 வயதுடையரென்றும் இவர் கேகாலை மொரகொட பகுதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியரென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## அமெரிக்க திறைசேரி அதிகாரி...

அது தொடர்பில் நேற்று இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், டுவிட்டர் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். இலங்கையின் பொருளாதார மேம்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதே அவரது இலங்கை விஜயத்தின் நோக்கமாகுமென பதிவில் குறிப்பிட்டுள்ளார். அவர் இலங்கையில் தங்கியுள்ள நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் உள்ளிட்ட உயர்மட்ட பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதுடன் பொருளாதாரத்துறை சார்ந்த நிபுணர்களுடனும் பேச்சு வார்த்தைகளை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## பிரிட்டனின் புதிய பிரதமருக்கு...

தெரிவித்துள்ளார். அத்துடன் புதிய பிரதமர் சுனக்கின் தலைமையின் கீழ் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் மேலும் வலுப்பெறுமென்றும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## தேர்தல் செலவினங்களை...

திருத்தத்திற்கு சமாந்தரமாக ஏற்றுக்கொள்ளத்தக்க திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு முன்னின்று செயற்பட்ட உங்களுக்கும், அதற்கு ஆதரவாக வாக்களித்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

அதேவேளை தேர்தல்முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான திருத்தங்கள் தொடர்பில் உங்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகளில் முக்கியமானதாகக் கருதப்படுகின்ற எதிர்பார்க்கப்படும் செலவினங்களை மட்டுப்படுத்துகின்ற சட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். எதிர்பார்க்கப்படும் செலவினங்களை மட்டுப்படுத்துதல் தொடர்பில் கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து ஆராயப்பட்டுவருவதுடன் தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல்களைக் கண்காணிக்கும் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றுக்கிடையிலான கலந்துரையாடல்களுக்கு அமைவாக பல்வேறு வரைபுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் இறுதி வரைபு குறித்து இரு சந்தர்ப்பங்களில் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எனவே தேர்தல்முறை மாற்றம் தொடர்பில் நீங்கள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற விரிவான திருத்தங்களின் ஆரம்பமாக மேற்படி வரைபை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதனை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## முதல் பெண்மணி...

தலைப்பிலான ஆய்வு மாநாட்டில் கலந்து கொண்டு முதன்மை உரை ஆற்றுவதற்காகவே அவர் யாழ்ப்பாணத்துக்கு செல்லவுள்ளார்.

புதிய இயல்பு நிலையில் எதிர்காலத்தைச் செழுமைப்படுத்தல் ( Shaping the Future in the New Normal) என்ற தொனிப் பொருளில் நடத்தப்பட்டு வரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சர்வதேச ஆய்வு மாநாட்டுத் ( JUICE 2022) தொடரில், பல்கலைக்கழக பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவ நிலையத்தினால் “பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தின் ஊடாகப் புதிய இயல்பு நிலையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்” என்ற தலைப்பிலான ஆய்வு மாநாடு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவ நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் சிவாணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆய்வு மநாட்டின் முதன்மை உரையாளராக இலங்கையின் முதல் பெண்மணியும், களனிப் பல்கலைக் கழக ஆங்கிலத் துறையின் சிரேஸ்ர பேராசிரியரும், பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தில் அனுபவம் வாய்ந்த பெண்ணியவாதியுமான மைத்திரி விக்கிரமசிங்க கலந்து கொள்ளவுள்ளார்.

## அமெரிக்க திறைசேரி...

ஐக்கிய அமெரிக்காவின் ஏஜென்சி (USAID) ஆகியவற்றின் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டதாக அமைச்சர் விஜேசேகர தெரிவித்தார்.

இலங்கையின் சக்தி மற்றும் ஆற்றல் துறையில் சீர்திருத்தங்கள், கொள்கைகள், கடன் மறுசீரமைப்பு, எரிபொருள் முகாமைத்துவ அமைப்பு மற்றும் பெற்றோலியப் பொருட்களை கொள்வனவு செய்தல் போன்றவற்றில் இந்தப் பேச்சுக்கள் கவனம் செலுத்தியதாக அவர் மேலும் கூறினார்.

## முதற்கட்டமாக...

10,000 ரூபாவும் அதனையடுத்து பாதிப்புகளுக்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு நட்டஈடுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். தமக்கோ அல்லது தமது வீடுகளுக்கோ இயற்கை அனர்த்தங்களினால் பாதிப்பு ஏற்படுமாயின் அது தொடர்பிலான புகைப்படங்களை கிராமசேவை அதிகாரிகளுக்கு உடனடியாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் தமது கொடுப்பனவுக்கான வேண்டுகோளையும் அவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

அந்த வேண்டுகோள் பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன்பின்னர் கொடுப்பனவைப் பெற்றுக்கொடுக்க நிவாரண சேவை மத்திய நிலையம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மழையுடனான சீரற்ற....

தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள வளிமண்டலவியல் திணைக்களம் நாட்டில் ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யலாமென்றும் இடி, மின்னல், மண்சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள பொதுமக்கள் கவனமாக செயற்படவேண்டுமென்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## வாட்ஸ் அப் செயலி...

சரி செய்யப்பட்டதுடன், சுமார் ஒன்றரை மணி நேரத்துக்குப் பிறகு வாட்ஸ்அப் செயலி வழமை போன்று செயல்பாட்டுக்கு வந்தது.

# பாராளுமன்றுக்கு சமமான மக்கள் சபையை ஸ்தாபிக்க சட்டத்தில் இடமில்லை

### சபை முதல்வர், அமைச்சர் சுசில் தெரிவிப்பு

பாராளுமன்றத்துக்கு ஒப்பான மற்றுமொரு மக்கள் சபையை ஸ்தாபிப்பதற்கு சட்டத்தில் இடமில்லை. அவ்வாறு மேற்கொள்ள முயற்சிப்பது பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுவதாகுமெனவும் சபை முதல்வரும் அமைச்சருமான கலாநிதி சுசில் பிரேமஜயந்த கடந்த 19 ஆம் திகதி தெரிவித்தார்.

சில வாரங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்துக்கு ஒப்பான மற்றுமொரு மக்கள் சபையை ஸ்தாபிப்பதற்கு தயாராகுவதாக ஊடகங்கள் மூலம் அறிக்கையிடப்படுவதாகவும் அது அரசியலமைப்புக்கு முரணானதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். விசேடமாக தேர்தல் ஒன்றின் மூலம் பொதுமக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதாகவும், மக்கள் பிரதிநிதிகளை மாற்ற வேண்டும் எனின் தேர்தல் மூலம் அதனை மேற்கொள்ளவேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதனால், இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்வது சட்டரீதியானது அல்ல எனவும் அது பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுவதாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, பாராளுமன்ற சபை முதல்வரும் அமைச்சருமான (கலாநிதி) சுசில் பிரேமஜயந்தவினால் முன்வைக்கப்பட்ட பாராளுமன்ற சிறப்புரை மீறப்பட்டுள்ளமை தொடர்பான விடயத்தை ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரை பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தியுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அண்மையில் (20) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

# உற்பத்திச் செலவு அதிகரிப்பால் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் எதிர்வரும் வாரங்களில் சந்தையில் முட்டைகளுக்கான தட்டுப்பாடு ஏற்படலாமென அகில இலங்கை கோழி வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதுதொடர்பில் அந்த சங்கத்தின் தலைவர் அஜித் குணசேக்கர தெரிவிக்கையில், அரசாங்கம் முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையை அறிவித்துள்ள போதும் விற்பனை விலையை விட உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதால் பல உற்பத்தியாளர்கள் அந்த கைத்தொழிலை விட்டு விலகியுள்ளதாகவும் அதனால் முட்டைக்கான தட்டுப்பாடு ஏற்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்த சூழ்நிலை காரணமாக கடந்த இரண்டு வாரங்களில் கோழி இறைச்சி கொள்வனவு செய்வோரின் தொகை நூற்றுக்கு 40 வீதத்தால் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### வாழைச்சேனை ரயில் நிலையத்தில்

# டிக்கட் விற்பனை பணம் ஒரு இலட்சம் ரூபா திருட்டு

வாழைச்சேனை ரயில் நிலையத்தில் பயணச்சீட்டு விற்பனை மூலம் பெறப்பட்ட ஒரு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (25) இடம்பெற்றுள்ளது. நிலையத்தின் லாச்சி ஒன்றிலிருந்த சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா திருடப்பட்டுள்ளதாக அந்த நிலையத்தின் நிலைய அதிபர் வாழைச்சேனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## நாட்டில் HIV நோயாளர்...

இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து இதுவரைக்குமான 09 மாத காலத்தில் 342 எச்ஐவி தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர்களுள் 50 பல்கலைக்கழக மாணவர்கள், 04 பாடசாலை மாணவர்கள், மத குரு ஒருவரும் உள்ளடங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு நாட்டில் முதலாவது நோயாளர் பதிவாகியுள்ளதுடன் இதுவரை பதிவுசெய்யப்பட்டுள்ள எச்ஐவி நோயாளர்களில் 20 பிக்குகளும் 02 பிற மத குருமாரும் உள்ளடங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 1987 ஆம் ஆண்டு முதல் இதுவரை 4,404 எச்ஐவி தொற்றாளர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் 1,000 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 2,300 பேர் தற்போது சிகிச்சைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மதிப்பீட்டின்படி எச்ஐவி தொற்றாளர்கள் 3,700 பேர் சிகிச்சைபெற்றுள்ளனர் என்றும் 1,500 எச்ஐவி தொற்றாளர்கள் தாம் எச்ஐவி தொற்றுநோயாளர்கள் என்பது தெரியாமலே சமூகத்தில் வாழ்ந்து வருவதாகவும் பாதுகாப்பற்ற உடலுறவில் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் பெரும்பாலானோருக்கு அவர்களிடமிருந்து எச்ஐவி தொற்றும் அபாயமுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பற்ற உடலுறவு காரணமாக இவ்வாறான நோய்த் தொற்று உருவாவதாகவும் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் இதுதொடர்பில் திறந்த மனதுடன் கலந்துரையாடுவது இத்தகைய தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வழிவகுக்குமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வீட்டிலுள்ள பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர் அதிகளவு கவனம் செலுத்துவது சிறந்ததென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பிரித்தானியாவின் புதிய பிரதமராக...

பிரதமரென்ற பெருமைக்குரிய தகுதியை தற்போது பெற்றுள்ளார்.

இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்ள்ஸ், ரிஷி சுனக்கிற்கு பிரதமராக நேற்று பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பிரிட்டனின் பொருளாதாரத்தை நிலைபேறாக கொண்டுவரும் திட்டங்களை வகுக்கவேண்டிய கட்டாயத்தில் ரிஷி சுனக் இருக்கிறார். பொருளாதார மேம்பாடு, பண வீழ்ச்சியை சரி செய்தல், கட்சியில் ஒற்றுமையைக் கொண்டுவருதல் என்று பல பொறுப்புக்கள் தற்போது ரிஷி வசமுள்ளது.

இதற்கமைய பிரதமராக பதவியேற்ற ரிஷி தனது உரையில், “தற்போது நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது. லிஸ் டிரஸ் மீது தவறில்லை. ஆனால் சில தவறுகள் நடந்துள்ளன. பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நம்பிக்கையை இந்த அரசாங்கத்தின் அடிநாதமாக வைப்பேன்.மேலும் பொரிஸ் ஜோன்சனுக்கு எப்போதும் நன்றியுடன் இருப்பேன் ”என கூறியுள்ளார்.

## பதிவு செய்து ஒழுங்குபடுத்திய...

கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

முச்சக்கரவண்டிகளை முறையான ஒழுங்குபடுத்தலுக்கு உட்படுத்தாமல் எரிபொருள் கோட்டாவை அனைத்து முச்சக்கர வண்டிகளுக்கும் பெற்றுக்கொடுப்பது முடியாத காரியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் முச்சக்கரவண்டிகளுக்கு எரிபொருள் கோட்டாவை அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதையடுத்து அது தொடர்பில் நேற்று கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர இவ்வாறு தெரிவித்துள்ளார். அதுதொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

மக்கள் போக்குவரத்துக்கான முச்சக்கரவண்டிகளுக்கு தற்போது ஐந்து லீற்றர் எரிபொருளே வழங்கப்பட்டு வருகிறது. அதுதொடர்பில் நாம் முறையான ஒழுங்குபடுத்தலை மேற்கொண்ட பின் போக்குவரத்து அமைச்சினூடாக அதற்கான கோட்டாவை அதிகரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

தற்போதைய சூழ்நிலையில் முச்சக்கரவண்டிகள் பதிவுகள் இல்லாமல் ஒழுங்குபடுத்தலுமின்றி நாட்டிலுள்ள அனைத்து முச்சக்கர வண்டிகளுக்கும் கோட்டாவை அதிகரித்து வழங்க முடியாத நிலையில் உள்ளது.

தற்போது எம்மிடமுள்ள தரவுத் தொகுதியின் படி நாடு முழுவதும் சுமார் 11 இலட்சம் முச்சக்கரவண்டிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவற்றுக்கான கோட்டாவை அதிகரிக்க முடியும். ஆனால் 10 இலட்சம் அல்லது 09 இலட்சம் முச்சக்கரவண்டிகளுக்கே எரிபொருள் கோட்டாவை அதிகரிக்கக்கூடிய நிலை காணப்படுகிறது. அதற்கு மேல் எம்மால் அதனை அதிகரிக்கமுடியாது. அதுதொடர்பில் நாம் ஜனாதிபதியிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இரு இளைஞர்களது சடலங்கள்...

மற்றும் மந்திகை உபய கதிர்காமம் பகுதியைச் சேர்ந்த கணேசலிங்கம் லம்போசிகன் (வயது 24) ஆகிய இருவருமே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, பருத்தித்துறை, வள்ளிபுரம் பகுதியிலுள்ள வயல் வெளியில் நண்பர்களான 06 இளைஞர்கள் தீபாவளி தினமான திங்கள் மது அருந்திக் கொண்டிருந்துள்ளனர். 06 பேருக்கும் போதை அதிகரித்துள்ளதையடுத்து ஆடிப்பாடி மகிழ்ந்துள்ளளதுடன் குறிப்பிட்டு இளைஞர்கள் இருவரில் ஒருவர் மற்றைய இளைஞரை தோளில் சுமந்தவாறு ஆடியவாறு சென்றுள்ளார். திடீரென கால் தடுமாறி வழுந்த போது தோளின் மேலிருந்த நண்பர் விவசாயக் கிணற்றுக்குள் விழுந்துள்ளார். அவரைக் காப்பாற்ற நண்பரும் கிணற்றில் குதித்துள்ளார். மேலே நின்ற 04 பேரும் தங்களது சேர்ட்டை கழற்றி கயிறுபோல் செய்து இவர்களைக் காப்பாற்ற முயற்சித்த போதும் பலனளிக்கவில்லை. ஒருவாறு அயலவர்களின் உதவியுடன் இருவரையும் மீட்டு மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றபோதும் இருவரும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கிணற்றுக்குள் இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்தவாறே உயிரிழத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணை முன்னெடுத்துள்ளனர்.

## ஆட்டோ கட்டணங்களை...

போதும் 10 லீற்றருக்கு பதிலாக மொத்தமாக 15 லீற்றர் பெற்றோல் வழங்கப்பட்டால் மாத்திரமே கட்டண குறைப்பை மேற்கொள்ள முடியும் என அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

முச்சக்கர வண்டிகளுக்கு வழங்கப்படும் எரிபொருள் கோட்டாவை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் நேற்று முன் தினம் அறிவித்திருந்த நிலையில் நேற்றுக் காலை முச்சக்கர வண்டி கட்டணத்தை முதல் கிலோ மீட்டருக்கு 20 ரூபா குறைக்கப்படும் என அந்த சங்கம் தெரிவித்திருந்தது.

அதே வேளை, நேற்று மதியம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ள மேற்படி முச்சக்கர வண்டிகள் சாரதிகள் சங்கம் கட்டணக் குறைப்பு எதனையும் மேற்கொள்ள முடியாது என்றும் அவ்வாறு கட்டண குறைப்பு மேற்கொள்ள வேண்டுமானால் முச்சக்கர வண்டிகளுக்கு வழங்கப்படும் எரிபொருளை 15 லீற்றராக அதிகரிக்க வேண்டும் என்றும் அவ்வாறு அதிகரித்தால் மாத்திரமே கட்டணக் குறைப்பு தொடர்பில் கவனம் செலுத்த முடியும் என்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

## ஆட்கடத்தலை தடுக்க கிழக்கில் ...

அமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் அதிகளவு அழுத்தத்தை ஏற்படுத்தல்" என்னும் தொனிப் பொருளில் எம்கோர் நிறுவனத்தால் திருகோணமலையில் அமைந்துள்ள தலைமை செயலாளர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்திருந்த விசேட கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார். ஆட்கடத்தலை தடுப்பதற்காக எம்கோர் நிறுவனத்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக அந்நிறுவனத்தின் தலைவரால் அங்கு தெளிவுபடுத்தப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெறும் ஆட்கடத்தலை தடுப்பதற்காக அரசு அதிகாரிகள் மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகளை தெளிவுபடுத்தல், பாதிக்கப்பட்டவர்களை அறிந்து அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைகள் குறித்து அங்கு அவர் தெளிவுபடுத்தினார்.

அச் சந்திப்பில் மாகாண தலைமைச் செயலாளர் ஆர். எம். பி. எஸ். ரத்நாயக்க, ஆளுநரின் செயலாளர் எல். பி. மதநாயக்க, எம்கோர் நிறுவன பணிப்பாளர் பி. முரளிதரன், சர்வதேச புலம் பெயர்ந்தோருக்கான அமைப்பின் கிழக்கு மாகாண திட்ட இணைப்பாளர் மேரி மயூரின் லெம்பட் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## யால சரணாலய அதிகாரிகள்...

இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

மிருகங்களை துன்புறுத்தும் வகையில் வாகனங்களை செலுத்திய சம்பவம் தொடர்பில் உடனடியாக அமுலாகும் வகையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர, வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அவர்கள் எந்த தகுதி தராதரத்தில் இருந்தாலும், கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் மற்றும் வாகனங்கள் மீண்டும் சரணாலத்திற்குள் பிரவேசிப்பதை தடுக்கும் வகையில், அவர்களின் பெயர்களை கறுப்புப் பட்டியலில் இணைத்துக் கொள்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் அமைச்சர் மஹிந்த அமரவீர, அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

## தேர்தல்கள் ஆணைக்குழுவே...

தெரிவித்துள்ளார். தேர்தலுக்காக வேட்பாளர்களை தெரிவுசெய்வது தேர்தல் ஆணைக்குழுவே என்பதால் தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று நாட்டில் எந்தவொரு பிரஜைக்கும் இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டிருந்தால் நீதிமன்றம் முன்னிலையில் அதனை சவாலுக்குட்படுத்தும் உரிமையுள்ளதாகவும் இதற்கு முன்னர் இவ்வாறு இந்த விடயங்கள் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்றத்தில் சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளதாக தமக்கு அறியக்கிடைத்துள்ளதாகவும் அதைவிடவும் மேலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வாறு இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டுள்ளார்களா என்பதுதொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இரட்டைப் பிரஜாவுரிமை தொடர்பில் சட்டபூர்வமாக செயற்படவேண்டுமே தவிர அதுதொடர்பில் என்னால் எதனையும் செய்யமுடியாது. பாராளுமன்றத்தின் செயற்பாடு சட்டங்களை உருவாக்குவதே என்பதை சுட்டிக்காட்டியுள்ள சபாநாயகர் அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கே ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் வாக்குறுதிக்கு...

ஜனவரியிலிருந்து பாராளுமன்றம் அரசியலமைப்பு பேரவையாக மாற்றப்பட்ட காலத்திலிருந்து ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து இதற்கான முன்னெடுப்புகள் வழிகாட்டல் குழு எல்லாம் அமைக்கப்பட்டது. அந்த வழிகாட்டக் குழுவிலே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் நானும் அங்கத்தவர்களாக இருந்திருக்கின்றோம்.

புதிய அரசியலமைப்பு தொடர்பான இரண்டு இடைக்கான அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. 2019 ஜனவரி மாதம் இரண்டாவது இடைக்கால அறிக்கையோடு நிபுணர் குழுவினால் வரையப்பட்ட ஒரு முழுமையான அரசியலமைப்பு வரைவு கூட அப்பொழுது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கமினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதை தொடர்ந்து வந்த ஜனாதிபதி தேர்தலிலே ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக முன்நின்ற சஜித் பிரேமதாஸவுடைய தேர்தல் அறிக்கையிலே அந்த முயற்சியில் தொடர்ந்து செயற்பட்டு முடிவை எட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டது. 2016 ஆம் ஆண்டு அரசியலமைப்பு பேரவையாக உருவாக்கப்பட்டு பலவித கூட்டங்கள் கலந்துரையாடல்கள் மக்கள் சந்திப்புகள் செய்யப்பட்டு மாகாண சபைகளுடைய பிரதிநிதித்துவத்தையும் பெற்று விசேடமாக தென்பதியிலுள்ள ஏழு மாகாண சபைகளை உள்ளடக்கி வேலை செய்யப்பட்டது. அதனடிப்படையில் தொடர்ந்து முன் சொல்ல ஜனாதிபதி ஆவண செய்ய வேண்டும். கடந்த ஆட்சிக்காலத்திலே இந்த வேலை செய்யப்பட்டது. இதனை வெகு விரைவாக தொடர்ந்து முன்னெடுத்தால் ஒரு வருட காலத்திற்குள் இதனை முடிவுக்கு கொண்டு வரலாம். ஒரு வருடம் கூட தேவை இல்லை. அனைவருடைய இணக்கப்பாட்டோடு சகல மக்களுடைய ஆதரவோடு புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்பட வேண்டும். ஜனாதிபதியின் கருத்தை வரவேற்கின்ற நேரத்தில் இதற்கு முன்னர் பங்களித்ததை போலவே முழுமையான பங்களிப்பை கொடுப்போம் என்றார்.

# இந்திய - அமெரிக்க உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை

## வெளியுறவு அமைச்சர் வொஷிங்டன் பயணமாவார்



இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பல்நோக்கு கொண்ட இரு தரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் மீளாய்வு செய்வதற்காக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் வொஷிங்டன் பயணமாகவுள்ளார். இவ்விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மூலோபாய ரீதியாக இறுக்கமடையச் செய்யும் என இந்திய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் ஐ.நா. சபையின் 17வது அமர்வில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் சென்றிருந்தபோது பன்நாட்டு தலைவர்களையும் வெளிவிவகார அமைச்சர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். ஐ.நா. செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டரசை சந்தித்து ஜி 20 மாநாடு, காலநிலை மாற்றம், உணவுப் பாதுகாப்பு, உக்ரைன் யுத்தம் போன்ற உலகளாவிய பிரச்சினைகளைப் பற்றி விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தியதாக தன் ட்விட்டர் பக்கத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்விஜயத்தின் போது ரஷ்ய வெளியுறவு அமைச்சர் சேர்ஜி லவ்ரோவை சந்தித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் ஆர்மீனிய வெளியுறவு அமைச்சரை சந்தித்து சமீபத்திய உலக விவகாரங்கள் குறித்து விவாதித்ததாகவும் இந்திய வெளியுறவு அமைச்சர்களுடனும் தன் ஐ.நா. விஜயத்தின் போது அவர் உரையாடல்களை நிகழ்த்தியிருந்தார்.

# இம்ரான் ஆதரவாளர்கள் பாக். நகரங்களில் வன்முறை ஆர்ப்பாட்டம்



பாகிஸ்தான் தேர்தல் ஆணைக்குழு, முன்னாள் பாக். பிரதமரும் தெஹ்ரீக் ஈ இன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான்கானை தகுதிநீக்கம் செய்ததையடுத்து அக்கட்சி ஆதரவாளர்கள் இஸ்லாமாபாத், ராவல்பிண்டி உட்பட பல நகரங்களில் தேர்தல் ஆணைக்குழுவின் முடிவை எதிர்த்து வன்முறைப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். வீதி மறியல்களில் ஈடுபட்டும், வீதிகளில் டயர்களை எரித்தும் தமது எதிர்பார்ப்பைக் காட்டி வருவதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. சில இடங்களில் கட்சித் தொண்டர்கள் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டுள்ளதாகவும் செய்திகள் மூலம் அறிய முடிகிறது.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு இம்ரான்கான் சமர்ப்பித்த விவர அறிக்கையில் தன் பதவி காலத்தில் தான் பெற்ற பரிசுப் பொருட்கள் பற்றி தவறான பிரமான பத்திரங்களை சமர்ப்பித்திருந்தார் என்றும் அது தேர்தல் விதிமுறைகளுக்கு புறம்பானது என்றும் தெரிவித்திருந்ததோடு அதற்கு தண்டனை வழங்கும் வகையில் தேர்தலில் போட்டியிடுவதற்கு தடை விதித்து தகுதிநீக்க உத்தரவைப் பிறப்பித்திருந்தது. இதையடுத்தே இம்ரானின் கட்சி ஆதரவாளர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு பிரதமருக்கு அவர் பதவிக் காலத்தில் கிடைக்கும் பரிசுப் பொருட்களை அரசு கருவூலத்தில் ஒப்படைத்துவிட வேண்டும். பின்னர் அவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படும். இவை ஏலத்தில் விடப்படும் என்பது பாகிஸ்தானில் கடைபிடிக்கப்படும் சட்டமாகும். இதை மீறி பொய் உரைத்தார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டாகும்.

# அன்னாசிகல த.வியில் அமரர் கன்னங்கராவின் ஜனன தினம்







தமக்கென வாழாது நாட்டு மக்களின் நலனுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த இலவசக் கல்வியின் தந்தை அமரர் C. W. W. கன்னங்கரா அவர்களின் 138 வது ஜனன தினத்தையொட்டி, மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலயம் ஏற்பாடு செய்த ஞாபகார்த்த தினம் அண்மையில் பாடசாலை அதிபர் ஏ.ஸீ.எம். றிப்கான் தலைமையில் நடைபெற்றது. அன்றைய தினம் "பிள்ளைகளை மகிழ்வுடன் கல்விக்குள் உள்வாங்கும்" பிறந்தநாள் வாழ்த்து நிகழ்வு மற்றும் சமைக்கப்பட்ட போசணைமிகு மரவள்ளிக்கிழங்கு விநியோகம் என்பனவும் பாடசாலையில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தமை விசேட அம்சமாகும்.

# அநுராதபுரம் மாவட்டத்தில் பாசிப்பயறு செய்கை ஆரம்பம்

*அநுராதபுரம் தினகரன் நிருபர்*

உலக உணவுத்திட்டத்தின் நிதியுதவியுடன் அநுராதபுரம் மாவட்டத்தில் பாசிப்பயறு செய்கையினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயனாநந்த தெரிவித்தார்.

மேற்படி திட்டத்தின் முதற்கட்ட செய்கை அநுராதபுரம் மாவட்டத்தின் நாச்சதுவ பிரதேச செயலாளர் பிரிவின் ஹல்மில்லகுளம் பகுதியில் இருபது ஹெக்டயாரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்செய்கையின் மூலம் தற்சமயம் பயனாளிகள் அறுவடையை ஆரம்பித்துள்ளதுடன் செய்கையும் வெற்றியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிக்கு தீர்வினை பெற்றுக் கொடுக்கும் முகமாகவே உலக உணவுத்திட்டம் இப்பயிர் செய்கைக்கு நிதியுதவியினை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பாசிப்பயறு செய்கையினை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விவசாய திணைக்கள அதிகாரிகளின் நேரடி கண்காணிப்பின் கீழ் இச் செய்கை மேற்கொள்ளப்படுவதாக அநுராதபுரம் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.



கொழும்பு செரியட் லயன்ஸ் கழகம் 306 சீ 2 இன் ஏற்பாட்டில் தெமட்டகொடை ஞானவிமல வீதியில் அமைந்துள்ள ஞானவிலாராம விஹாரைக்கு மின்சக்தி உபகரணங்கள், பாடசாலை நூலகங்களுக்கு வாசிப்பு புத்தகங்கள், மாணவர்களுக்கு வங்கி சேமிப்பு புத்தகங்கள், கர்ப்பிணி தாய்மர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள், 300 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கும் பல்வேறுப்பட்ட வேலை திட்டங்கள் மேற்படி கழகத்தினால் வழங்கி வைக்கப்பட்டது. பிரதம அதிதியாக கலந்து கொண்ட 306 சீ 2 லயன்ஸ் கழகத்தின் மாவட்ட ஆளுநர் லயன்ஸ் பெனட் கமலத் கழகத்தின் தலைவர் கே.வீ. ரவிந்தரன் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் கலந்துகொண்டு பொருட்களை வழங்குவதை படத்தில் காணலாம்.

# கொத்தாந்தீவு கிராமத்தில் மாதிரி விவசாய திட்டம்



*(புத்தளம் விசேட நிருபர்)*

முந்தல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கொத்தாந்தீவு கிராமத்தில் மாதிரி விவசாயத் திட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை (22) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

புத்தளம் மாவட்ட சர்வமதக் குழுவும் ரம்மிய லங்காவும் இணைந்து மாதிரி விவசாயத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.


திகதி 24.10.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4918
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,170,650.00
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 4 5 2 8 2 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 32,473,224.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3160
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,526,820.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 06 17 26 27
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,616,640.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 948
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,044,300.00
வெற்றி இலக்கினம் V வெற்றி இலக்கங்கள் 14 21 69 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 130,804,282.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1373
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,286,429.60
வெற்றி இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 2 6 4 5 6 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 227
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,444,540.00
இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 07 27 35 40
விசேட இலக்கினம் கும்பம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,538,540.80

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1266
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,700,960.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 277,629,178.00
M 10 06 11 12 27
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



கைத்தொழில் அமைச்சு

SME பெவிலியன் ப்ரொ ஃபுட்ஸ் ப்ரொபெக் கண்காட்சி 2022

கைத்தொழில், வாணிய அலுவல்கள், நீண்டகாலமாக இடம் பெயர்ந்த நபர்களின் மீள் குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு, இலங்கை உணவுப் பொருள் பதனிடும் அமைப்போடு இணைந்து, 19ஆவது முறையாகவும் வெற்றிகரமாக ப்ரொ.ஃபுட்ஸ் (Profood Propack Exhibition) ப்ரொபெக் கண்காட்சியை ஏற்பாடு செய்கின்றது. உணவு பதனிடும் கைத்தொழில் துறைக்காக, இலங்கையில் நடாத்தப்படும் மிகப் பெரிய கண்காட்சியாக இது கருதப்படுகின்றது.

அமைச்சானது, மிகச் சிறிய, சிறிய மற்றும் நடுத்தர உணவு பதனிடும் கைத்தொழில்களுக்காக, 10 கூடங்களைக் கொண்ட ஒரு விசேட பார்வையாளர் கூடத்தை (Pavilion) கண்காட்சியில் ஏற்பாடு செய்கின்றது. மிகச் சிறிய, சிறிய மற்றும் நடுத்தர அளவுகளிலான கைத்தொழிலாளர்கள், கண்காட்சிக் கூட கட்டணத்தின் 50%ஐ மாத்திரம் செலுத்தி, இந்த பார்வையாளர் கூடத்தில் (Pavilion) பங்குபற்றலாம்.

இக் கண்காட்சிக்குத் தெரிவு செய்யப்படுவதற்காக, பின்வரும் வகுதிகளைச் சேர்ந்த ஆர்வங்காட்டும் உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்களை, அமைச்சு அழைக்கின்றது.

**கண்காட்சியாளரின் பின்புலம்**

❒ பதனிடப்பட்ட உணவுப் பொருட்கள் மற்றும் குடிபானங்கள் (Beverages)
- பழம் மற்றும் மரக்கறி அடிப்படையிலான உணவுப் பொருட்கள்
- பால் உணவுப் பொருட்கள்
- இறைச்சி/ மீன் / முட்டை
- பிஸ்கட் மற்றும் இனிப்புப் பண்டங்கள்
- சுகாதார உணவுப் பொருட்கள் மற்றும் குடிபானங்கள்
- ஏனைய தொடர்புற்ற உணவுப் பொருட்கள்
- பேக்கரி உணவுப் பொருட்கள்
- தெங்கு அடிப்படையிலான உணவுப் பொருட்கள்
- பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை (ஹர்பல், சேதனம்)
- உணவு தொடர்பான பொதியிடல்
- உண்ண முடியுமான எண்ணெய் வகைகள்
- வாசனைத் திரவியங்கள்

**தெரிவு செய்யப்படும் நடைமுறை**

அமைச்சினால் நியமிக்கப்படும் ஒரு குழுவொன்றினால் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றினூடாக விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்படுவதுடன், மேற்படி கண்காட்சி ஒத்துழைப்பு தொடர்பாக, ஆகக் கூடிய தகைமைகளைக் கொண்டுள்ள பத்து விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள், கீழேயுள்ளவாறு உங்கள் விண்ணப்பத்தைத் தயாரித்து கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு அவற்றை அனுப்பி வையுங்கள்.

விண்ணப்பங்கள், 2022 ஒக்டோபர் 28ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர், அமைச்சிற்கு கிடைக்கப்பெறல் வேண்டும்.-

Profoods Propack Exhibition - 2022
Name of the Industry :-
Address :-
Contact Person :-
Tel/ Fax :-
Email :-
Type of Product :-
No. of Employees :-
Annual Turnover :-
Capital Investiment :-
(Signature of the Manager)

பணிப்பாளர், மேம்படுத்தல் துறை - 1
கைத்தொழில் அமைச்சு
73/1, காலி வீதி, கொழும்பு-03.
மேலதிக தகவல்களுக்கு: பணிப்பாளர், அபிவிருத்தித் துறை - 1.
தொ.பே : 011-2422319
பெக்ஸ் : 0112432750/ 2432250
மின்னஞ்சல் : sector1mid@yahoo.com
இணையம் : www.industry.gov.lk

Profoods Propack 2022
SME பெவிலியன்
2022 நவம்பர் 18, 19, 20
சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையம்.
www.profoodpropack.com

செயலாளர்
கைத்தொழில் அமைச்சு



NSB

தேசிய சேமிப்பு வங்கி

விலைமனுக் கோரல்

பெறுகை அறிவித்தல் இலக்கம் - என்.எஸ்.பீ/பி.டீ/2022/29

இங்கு காணப்படும் கேள்வியுடன் சம்பந்தப்பட்ட பொருட்களை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பிற்காக அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகளிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| Description of the procurement | Purchase of First Aid Fire Extinguishers |
| Method of Procurement | National Competitive Bidding (NCB) |
| Applicable Non-refundable Tender Fee | Rs. 12,000/- |
| Value of Bid Bond to be submitted | Rs. 472,500/- |
| Last Date & Time of Issuing Bid Documents | 15/11/2022 at 3.00 p.m. |
| Date & Time of Closing of Tender | 16/11 /2022 at 10.00 a.m. |
| Pre-Bid Meeting | 01/11/2022 at 10.30 a.m |

1. எந்த ஒரு கேள்விதாரர் சார்பாகவும் பிரதிநிதியொருவர் அல்லது உப பிரதிநிதியொருவர் அல்லது பெயர் குறிப்பிடுபவராக செயற்படும் எந்தவொரு நபரும கேள்விக்காக விண்ணப்பிப்பதற்கு முன்பு 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் கட்டாயமாவதுடன் அவர் சார்பாக ஒப்பந்தத்தை பதிவு செய்தல் கட்டாயமாகும்.
2. 2022.10.26 முதல் 2022.11.15 வரை வேலை நாட்களில் முற்பகல் 8.30 முதல் பிற்பகல் 3.00 வரை குறித்த கேள்விப் பத்திரங்களை, கொழும்பு-03, காலி வீதி, இல. 255இல் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியில் வழங்கல்கள் பிரிவில் வழங்கல்கள் முகாமையாளரிடம் எழுத்து மூல வேண்டுதலின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களுடன் கேள்விப் பத்திரங்களை, திறக்கும் தினம் முதல் 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் வர்த்தக வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும். தேசிய சேமிப்பு வங்கிக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய வங்கிப் பிணைமுறி/ கேள்விப் பிணைமுறியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. குறித்த தினத்தில் கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல் முற்பகல் 10.00 இற்கு முடிவடைந்தவுடன் கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் முற்பகல் 10.00 இற்குப் பின்னர் கிடைக்கும் கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. சகல கேள்விகளையும் அல்லது ஒரு கேள்வியை அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது காரணம் கூறாமலேயே நிராகரிக்கும் உரிமை தேசிய சேமிப்பு வங்கிக்கு உண்டு.

இது பற்றிய மேலதிக விபரங்களை தேசிய சேமிப்பு வங்கியின் பிரதம முகாமையாளர் (வழங்கல்கள்) இடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**நிறுவன பெறுகைக்கு குழு - பிரதான**
**தேசிய சேமிப்பு வங்கி**
**இல. 255, காலி வீதி, கொழும்பு - 03**

# கிராமிய கடற்றொழிலாளர் சங்கங்களை வலுப்படுத்தும் விதத்தில் யாப்பு திருத்தம்

## அமைச்சர் டக்ளஸ் தலைமையில் நேற்று கலந்துரையாடல்

தேசிய மீனவர் மஹா சம்மேளனத்தின் யாப்பை மறுசீரமைப்பது தொடர்பான கலந்துரையாடல், சம்மேளனத்தின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று(25) நடைபெற்றது.

சுமார் 15 வருடங்களுக்கு மேலாக சம்மேளனத்தின் யாப்பு சீர்திருத்தம் செய்யப்படாததையடுத்து, கால சூழல் மாற்றங்களுக்கமைய கடற்றொழில் சார் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யும் வகையில் யாப்பு சீர்திருத்தம் செய்யப்பட வேண்டுமென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கமைய, மறுசீரமைப்பு செய்யப்பட்டு வருகின்ற யாப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆராயும் நோக்கில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.



இதன்போது, கிராமிய கடற்றொழில் சங்கங்கள் பெயரளவிலான சங்கங்களாக இன்றி, வினைத்திறனான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில், காலத்துக்கு காலம் யாப்பு மாத்திரமன்றி, சங்கங்களின் கட்டமைப்புக்களும் புதியவர்கள் உள்வாங்கப்பட்டு மெருகூட்டப்பட வேண்டும் என்ற கருத்து அமைச்சரினால் வெளியிடப்பட்டது.

அத்துடன், மாவட்ட ரீதியான கிராமிய கடற்றொழில் சங்கங்களிடம், யாப்பு சீர்திருத்தம் தொடர்பான ஆலோசனைகளை வழங்குமாறு தெரிவித்த அமைச்சர்கள், எதிர்வரும் நவம்பர் 09 ஆம் திகதி, அனைத்து தரப்பினரது ஆலோசனைகளையும் உள்வாங்கி, யாப்பு சீர்திருத்தம் பூரணப்படுத்தப்படுமெனவும் தெரிவித்தனர். இக்கலந்துரையாடலில், கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஸாந்த, அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க, மற்றும் கடற்றொழில் திணைக்களம் உட்பட்ட கடற்றொழில்சார் திணைக்களங்களின் பிரதானிகள், கிராமிய கடற்றொழிலாளர் சங்கங்களின் மாவட்ட ரீதியான பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு, இதன்போது கருத்துக்களை தெரிவித்தனர்.

தேசிய குத்துச்சண்டை போட்டியில்

# வவுனியா திருஞானசம்பந்தர் வித்தியாலயத்துக்கு 2 தங்கம்

**வவுனியா விசேட நிருபர்**

கல்வியமைச்சினால் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட குத்துச்சண்டை போட்டியில் வவுனியா சிறீ ராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம் இரண்டு தங்க பதக்கங்களை வென்றுள்ளது.





கல்வியமைச்சினால் 2022 ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட குத்துச்சண்டை போட்டி இம்மாதம் 21,22,23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நாவலப்பிட்டிய ஜெயதிலக விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இப்போட்டியில் வவுனியா சிறீராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம் சார்பாக பங்குபற்றிய மாணவிகளான எல்.கஜேந்தினி 57 கிலோகிராம் எடைப்பிரிவில் தங்கப்பதக்கத்தை சுவீகரித்ததுடன், 60 கிலோகிராம் எடைப்பிரிவில் யூ.கீர்த்தனா தங்கப்பதக்கத்தை பெற்று பாடசாலைக்கும், வலயத்திற்கும், மாகாணத்திற்கும், கிராமத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

# இணுவிலில் சிறுவன் மீது வாள் வெட்டு

இணுவில் பகுதியில் சிறுவன் மீது வன்முறை கும்பலொன்றினால் வாள் வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் படுகாயமடைந்த சிறுவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த முருகதாஸ் மனோஜ் (வயது 17) எனும் சிறுவனே இவ்வாறு படுகாயமடைந்துள்ளான்.

சிறுவன் பாடசாலை கல்வியை இடைநிறுத்தி , இணுவில் பகுதியிலுள்ள அலங்காரப் பொருட்கள் விற்பனையகமொன்றில் வேலை பார்த்து வருகிறான். இந்நிலையில் சிறுவன் விற்பனை நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை தனது துவிச்சக்கர வண்டியில் வீடு நோக்கி செல்லும் போது, தெல்லிப்பளை பகுதியிலிருந்து மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த 06 பேர் கொண்ட வன்முறை கும்பலொன்று சிறுவனை வழி மறித்து வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பி சென்றுள்ளனர்.

காயமடைந்த சிறுவனை அங்கிருந்தவர்கள் மீட்டு,சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

வவுனியாவில்

# தனியார் வைத்தியசாலை பெயரில் போதை மாத்திரைகள் கொள்வனவு



## விசாரணைகள் ஆரம்பம்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் போதை மாத்திரைகளை கொள்வனவு செய்ததாக கூறப்படும் வைத்தியர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் எம்.மகேந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் போதை மாத்திரைகள் தனியார் வைத்தியசாலையொன்றின் பெயரில் அரச வைத்தியர் ஒருவரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் நேற்று ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் மருந்து விற்பனை நிலையங்கள் மீது உணவு மற்றும் மருந்து பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது வவுனியாவிலுள்ள அரச வைத்தியர் ஒருவர் தனியார் வைத்தியசாலையின் பெயரில் போதை மாத்திரைகளை கொள்வனவு செய்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் எமக்கு அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது. இத்தகவல் வெளியாகியதை தொடர்ந்து உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் உணவு மற்றும் மருந்து பரிசோதகர்கள் இணைந்து இதுதொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இச்சம்பவத்துடன் தொடர்புடைய தனியார் வைத்தியசாலை, வைத்தியர் மற்றும் அவரிடமிருந்து போதை மாத்திரைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போதை மாத்திரை கொள்வனவு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றமையால் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் இரண்டு மாவட்டங்களையும் உள்ளடக்கி விசாரணை செய்ய விசேட குழுவொன்றை நியமித்துள்ளது. விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



கேதார கௌரி விரத இறுதி நாளான நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. அதன்போது கடந்த 21 நாட்களாக கௌரி காப்பு நோன்பிருந்த பக்தர்கள் பூஜையில் கலந்து கொண்டு காப்பினை பெற்றுக்கொண்டனர். (படம்: யாழ். விசேட நிருபர்)

# கனகராயன் ஆற்றுப்பகுதியை துப்புரவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பம்

**(பரந்தன் குறூப் நிருபர்)**

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்துக்குட்பட்ட கனகராயன் ஆற்றுப்பகுதியை துப்புரவு செய்யும் வேலைத்திட்டம் (25.10.2022) கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டம் அதிக நீர்நிலைகளைக் கொண்ட மாவட்டமாக காணப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் மழை காலங்களில் வெள்ளப்பெருக்கு காரணமாக பல்வேறுபட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன. அவ்வாறான பாதிப்புகளை குறைக்கும் வகையில் நீர் வழிந்தோடக்கூடிய கழிவு வாய்க்கால்கள், ஆறுகள் என்பவற்றை துப்புரவு செய்யும் வேலைத்திட்டங்கள் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு என்பவற்றால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக்குளத்தின் கழிவு நீர் வழிந்தோடும் கண்டாவளை கனகராயன் ஆற்றினை துப்புரவு செய்யும் பணிகள் நேற்றுமுன்தினம் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் வெள்ளத்தினால் ஏற்படுகின்ற பாதிப்புக்களை குறைக்கும் விதத்தில் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் சர்வோதய நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் இவ்வேலைத்திட்டம் உத்தியோகபூர்வமாக நேற்று பகல் 11 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில்

# 71 ஆயிரத்து 84 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பு

**(பரந்தன் குறூப் நிருபர்)**

கிளிநொச்சி மாவட்டத்தில் 71 ஆயிரத்து 84 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வாண்டு நெற்செய்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிராமிய பொருளாதார புத்தெழுச்சி மற்றும் உணவுப்பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் உணவு உற்பத்தி தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் இவ்வாண்டு காலப்போகத்தின்போது 71 ஆயிரத்து 84 ஏக்கர்நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதேபோல 370 ஏக்கர் நிலப்பரப்பில் சோளச் செய்கையும் 20 ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய வெங்காயம், 330 ஏக்கர் நிலப்பரப்பில் சிறிய வெங்காயம், 52 ஏக்கர் நிலப்பரப்பில் குரக்கன் செய்கையும் 1190 ஏக்கர் நிலப்பரப்பில் மிளகாய் செய்கையும் 690 ஏக்கர் நிலப்பரப்பில் கௌபியும் 620 ஏக்கர் நிலப்பரப்பில் நிலக்கடலையும் 890 ஏக்கர் நிலப்பரப்பில் உழுந்துச் செய்கையும் 680 ஏக்கர் நிலப்பரப்பில் பயறுச்செய்கையும் 180 ஏக்கர் நிலப்பரப்பில் எள்ளுச் செய்கையும் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளுக்காக எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வரும் அதே நேரம் நெற்செய்கைக்கு தேவையான உரம் விநியோகிக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு முன்பாக விபத்து

## கர்ப்பிணிப் பெண்ணொருவர் உட்பட இருவர் பாதிப்பு

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை முன்பாக இடம்பெற்ற விபத்தில் கர்ப்பிணி பெண்ணுடன் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. விபத்தில் கர்ப்பிணி பெண்ணுடன் பயணித்த சைக்கிள் விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் கர்ப்பிணி பெண் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

ஓமந்தையில்

# பயிர்செய்கைக்கு தயார்படுத்தப்பட்ட நிலத்தில் வனவள திணைக்களத்தால் மீள் மரநடுகை

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, ஓமந்தைப்பகுதியில் பயிர்செய்கை மேற்கொள்ள தயார்படுத்தப்பட்ட மேட்டுநிலத்தில் வனவள திணைக்களத்தால் மீள் மரநடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

வவுனியா, ஓமந்தை, கொந்தக்காரன் குளத்தின் பின்பகுதி விளாத்திக்குளம் பகுதியில் 1972 ஆம் ஆண்டு முதல் தோட்டப்பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட மேட்டு நிலங்களும், நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்களும் யுத்தம் காரணமாக கைவிடப்பட்டு பராமரிப்பின்றிக் கிடந்தன.



இதனால் அப்பகுதி பற்றைகள் மற்றும் முட்புதர்களால் மூடப்பட்டிருந்தது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கமைய பயன்படுத்தப்படாத தமது நெல் மற்றும் மேட்டு நிலப் பயிர்செய்கை நிலங்களை அதிக பணத்தை செலவு செய்து மீள துப்புரவு செய்து கால போக செய்கைக்கு அப்பகுதி மக்கள் தயார்படுத்தினர். எனினும் அப்பகுதிக்கு சென்ற வனவளத்திணைக்களத்தினர் அந்த நிலங்களில் மீள்மர நடுகை வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

பரம்பரையாக மேட்டு நிலப்பயிர் செய்கை செய்து வந்த காணியின் ஒரு பகுதியில் மீள் மர நடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மேலும் மரநடுகையை மேற்கொள்வதற்காக அப்பகுதியில் மரக்கன்றுகளையும் கொண்டு வந்து வைத்துள்ளனர். இதன் காரணமாக அந்த காணிகளில் பெரும்போகத்தில் பயிர்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.



கரவெட்டி யா/விக்னேஸ்வராக் கல்லூரியின் மாணவர் தலைவர் சின்னம் சூட்டும் விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். (கரவெட்டி தினகரன் நிருபர்)




# மாகாண சபைகள் இயங்கவில்லை என்ற கருத்தை ஏற்க முடியாது

## தேர்தல்கள் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா

**உக்குவளை விசேட நிருபர்**



மாகாண சபைகள் கலைக்கப்பட்டு செயற்படாமல் இருப்பதாக கருத்துகள் முன்வைக்கப்பட்ட போதும் அக் கருத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. மாகாணசபைகள் கலைக்கப்பட்டு மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பின்றி அரச அதிகாரிகளின் பங்களிப்புடன் இயங்கிக் கொண்டிருப்பதாகவும் இக் கூற்று ஏற்றுக் கொள்ள கூடியதல்ல என தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார். பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஆலோசனைகளை மக்களுக்கு விளக்கமளிக்கும் விசேட கலந்துரையாடால் மாத்தளை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அக் கூட்டத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்துரையாற்றிய அவர்,

உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களை நடாத்தும் அதிகாரம் கடந்த செப்டம்பர் மாதம் 20ம் திகதிக்கு பின்னர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிட்டியுள்ளது.

அதனால் காலம் தாழ்த்தாது 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களை நடாத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பாரிய பொறுப்பாகும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் உள்ளூராட்சி மன்றம் தேர்தல்களை நடாத்த தேர்தல்கள் ஆணைக்குழு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கம்பளை புப்புரஸ்ஸ

# மணிக்கட்டி தோட்டத்தில் ஒருவர் அடித்துக் கொலை

**கம்பளை நிருபர்**

கம்பளை புப்புரஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணிக்கட்டி தோட்டத்தில் கொலை சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் பகல் இடம்பெற்றுள்ளது.

தீபாவளி தினத்தில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட முறுகலில் 38 வயது இரண்டு பிள்ளைகளின் தந்தையான ராஷேந்திரன் ஜெயக்குமார் என்பவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

லெவலன் தோட்டத்தில் இருந்து இளைஞர் குழு ஒன்று மணிக்கட்டி தோட்டத்தில் இருக்கும் உணவகம் ஒன்றுக்கு கொத்து ரொட்டி வாங்குவதற்காக வருகை தந்துள்ளனர். இதன் போது அந்த பகுதியில் இருந்த இளைஞர்களுக்கிடையில் வாய்த்தர்க்கம் உக்கிரமடைந்த நிலையில் இரு குழுக்கள் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

இதன் போது 5 பேர் காயங்களுக்குள்ளாகி கலஹா பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்பு அதில் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

மேலும் மூன்று பேர் கலஹா பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். தாக்குதல் ஏற்பட்ட இடத்தில் மது போத்தல்கள் மற்றும் கத்திகள், இரத்தக் கறைகள் இருப்பதை காணமுடிந்தது.

அத்தோடு அதே பகுதியில் இருக்கும் ஒரு வீட்டிற்குள்ளே அதிக இரத்தக் கறைகளும் காணப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பேராதனை போதானா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் புப்புரஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பொகவந்தலா ஆற்றில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

**ஹற்றன் விசேட நிருபர்**

பொகவந்தலா பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொகவந்தலா நகருக்கருகாமையில் உள்ள கெசல்கமுவ ஓயாவிலிருந்து இச்சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சடலம் ஒன்று ஆற்றில் மிதப்பதனைக் கண்டு நபர் ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்தே இச்சடலம் மீட்கப்பட்டுள்ளது. இந்த நபர் எவ்வாறு இறந்தார் என்பது தொடர்பாக பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சடலம் மேலதிக விசாரணையினை தொடர்ந்து வைத்திய பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொகவந்தலா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கண்டி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தின் தீபாவளிப் பண்டிகை விசேட பூஜை கோயிலின் அறங்காவலர் கிருஸ்ணமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. நவகலச திரவிய அபிசேகமும் அலங்கார தீபாராதனைகளுடன் வேதமந்திரம் ஒலிக்க, மங்கள வாத்தியம் முழங்க, விசேட வசந்த மண்ட பூஜையும் உள்வீதி உற்சவமும் நடைபெற்றது.

(படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்)

# வெளிமடையில் அறிவுக் களஞ்சியப் போட்டி

**பதுளை தினகரன் நிருபர்**

வெளிமடை 'வை.எம்.எம்.ஏ' கிளையின் ஏற்பாட்டில் வெளிமடை வலயத்திற்குட்பட்ட முஸ்லிம் பாடசாலைகளுக்கிடையிலான 'அறிவுக் களஞ்சியப் போட்டி' நிகழ்ச்சி கிளைத் தலைவர் எஸ். எம். நாஸிம் (ஆசிரியர்) தலைமையில் வெளிமடை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை(29) அன்று காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் இறுதிப்போட்டி 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. வெற்றியீட்டும் அணிகளுக்கு பதக்கங்கள், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.




பதுளை அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர், கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் நேற்று கேதாரகௌரி விரதப் பூர்த்தித் திருவிழா ஆகமவிதிப்படி வெகு விமர்சையாக இடம்பெற்றது. சுமார் 1000 மங்கையர்கள் பூஜைகளில் கலந்து கொண்டிருந்தனர்.

(படம்: பதுளை தினகரன் விசேட நிருபர்)

இங்கிலாந்து பிரதமர் ரிஷிக்கு

# மலையக மக்கள் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்

**நுவரெலியா தினகரன் நிருபர்**



இந்திய வம்சாவளியில் வந்த இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் எமக்கெல்லாம் பெருமை சேர்த்திருக்கின்றார். அவருக்கு மலையக மக்களின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கிலாந்திடம் இருந்து இந்தியா சுதந்திரம் பெற்றது. அந்த சுதந்திர நாட்டின் வழிவந்த ஒருவர் இன்று இங்கிலாந்தின் பிரதமராகியிருக்கின்றார் இதுதான் காலச்சக்கரம் என்பது இதனை இலங்கை அரசாங்கமும் இந்த நாட்டு மக்களும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அந்த நாடு திறமையானவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு சந்தர்ப்பத்தை துணிச்சலாக வழங்குகின்றது. அதுவே ஜனநாயகத்தின் பண்பாக இருக்க வேண்டும்.

இந்த விடயத்தை இலங்கை மக்கள் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.இந்த நாட்டில் இனம், மதம், மொழி என எங்களை பிரித்து ஆள நினைத்தவர்கள் அதனை செய்தவர்கள் இன்று அதற்கான பலனை அனுபவித்து வருகின்றார்கள். நாங்கள் இனத்தையும் மதத்தையும் பாரத்து வாக்களித்ததன் பயனை நாம் அனைவரும் ஆனுபவிக்கின்றோம்.

எனவே எதிர்வரும் காலங்களில் இலங்கை மக்கள் திறமையானவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கான வாய்ப்பை வழங்குவதற்கு முன்வர வேண்டும்.



வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாத்தளை கல்வி வலயத்திற்குட்பட்ட வரக்காமுறை அன்னூர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர்களின் சித்திரக் கண்காட்சியும் புத்தக விற்பனையும் மற்றும் மர நடுகையும் அதிபர் எம்.எஸ். நிசார்தீன் தலைமையில் நேற்று வித்தியாலய வளவில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம்

(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

பிரித்தானிய பிரதமரான ரிஷிசுனக்

# இந்திய வம்சாவளி மக்களுக்கு பெருமை சேர்த்துள்ளார்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**



இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் பிரித்தானிய பிரதமரானது பாரதத்திற்கும் இந்திய வம்சாவளி மக்களுக்கு பெருமை தரக் கூடியதொன்றாகுமென்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

பிரித்தானியாவின் முதல் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் பிரதமரானது இதுவே முதல் தடவையாகும். பிரித்தானியாவின் புதிய பிரதமராவதற்கான வாக்கெடுப்பில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் வெற்றி பெற்று பிரதமர் பதவிக்கு தெரிவாகியுள்ளார். பிரித்தானியா பிரதமர்களில் மிகவும் வயது குறைந்தவரும் இவரேயாவார்.

இந்திய கோடீஸ்வரரான என். ஆர். நாராயணமூர்த்தியின் புதல்வி அக்ஸதா மூர்த்தியை தமது வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்ட 42 வயதுடைய ரிஷி சுனக் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் 150 பேரின் அமோக ஆதரவைப் பெற்றுள்ளார்.ரிஷி சுனக்கின் மூதாதையர்கள் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்களென்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியாவில் ஏற்பட்ட இம் மாற்றம் எமது நாடு உள்ளிட்ட ஏனைய நாடுகளும் பின்பற்ற வேண்டியதும் காலத்தின் அவசியமாகும்.

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள்

# பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்

## அஸ்கிரி பீட மெதகம தம்மானந்த தேரர்

**எம்.ஏ.அமீனுல்லா**

பாராளுமன்றத்தில் இரட்டை பிரஜாவுரிமை கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தால் நாட்டுக்கும் மக்களுக்கும் நேர்மையாக வெளிப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என அஸ்கிரி பீடத்தின் பதிவாளர் வணக்கத்திற்குரிய மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் பொதுப் பிரதிநிதிகளாக நியமிக்கப்படும் வாய்ப்பு இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகவும், இதனை மகாசங்கத்தினர் சில காலமாக எதிர்பார்த்து வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# நுவரெலியா நகரில் தீப்பற்றி எரிந்த முச்சக்கரவண்டி

நுவரெலியா நகரில் ஒரே குடும்பத்தினர் பயணித்த ஓட்டோவொன்று நேற்று (25) பிற்பகல் தீப்பிடித்து எரிந்துள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து எரிபொருளை நிரப்பிக்கொண்டு லவர்ஸ் லிப் பகுதியை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போதே, இவ்வாறு தீப்பற்றி எரிந்துள்ளது.

ஓட்டோ இவ்வாறு தீப்பற்றி எரிந்த போது, ஓட்டோவுக்குள் தாய், தந்தை மற்றும் மகளும் பயணித்துக் கொண்டிருந்ததுடன், தந்தையே ஓட்டோவை செலுத்தியதாகவும் தெரியவந்துள்ளது.

இதன்போது எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என தெரிவித்துள்ள நுவரெலியா பொலிஸார், இத் தீவிபத்துக்கான காரணம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்தனர்.



# மலையக ஆலயங்களில் கேதார கௌரி விரதம்

**ஹற்றன் விசேட நிருபர்**



இந்துக்களின் விரதங்களின் முக்கிய விரதங்களில் ஒன்றான கேதார கௌரி விரதம் நேற்று (25) மலையகத்திலுள்ள இந்து ஆலயங்களில் மிக சிறப்பாக இடம் பெற்றது.

ஹற்றன் நகரில் மிகவும் பிரசித்தி பெற்ற பழைமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றான ஹற்றன் ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயத்தில் நேற்று ஆலய பிரதம குரு பாலசுப்பிரமணியம் சர்மா தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் முருகப்பெருமானுக்கும் அம்பாளுக்கும் சிவபெருமானுக்கு விசேட அலங்கார பூஜைகள் இடம்பெற்றதுடன் தேவாரா திருபாராயணங்கள், பிராரத்தனைகள் இடம்பெற்று திருவிளக்கு பூஜை, கௌரிகாப்பு கட்டும் நிகழ்வுகள் நடைபெற்றன.

# கிழக்கின் குரல்



# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை ஆரம்பிக்க பிரதான திட்டங்கள் வகுப்பு

(ஒலுவில் விசேட நிருபா்)



தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் மருத்துவ பீடம் அமைப்பதற்கு திட்டங்கள் வகுத்துள்ளதாக,தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் 26 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு, நடாத்தப்பட்ட இதன்,ஸ்தபாகர் எம். எச்.எம். அஷ்ரபின் நினைவு தினத்தில் உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நினைவு தினம் நேற்று செவ்வாய்க்கிழமை (25) ஒலுவில் வளாக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், பட்டதாரி மாணவர்களின் தொழிற்தகைமையை மேம்படுத்த, கணினி பீடத்தை நிறுவுவதற்கும், பட்டப்பின்படிப்புக் கற்கையினை வினைத்திறனாகக் கொண்டுசெல்ல பட்டப்பின்படிப்புக் கற்கைகள் பீடத்தை தாபிப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஒரு வருட காலத்தினுள் பல்கலைக்கழகத்தினை சமூகத்துடன் ஒன்றிணைப்பதில் வெற்றி கண்டுள்ளோம். பிராந்தியத்திலுள்ள விவசாய, மீன்படி சமூகங்களுடன் இணைந்த பல திட்டங்களை பல்கலைக்கழகம் முன்னெடுத்து வருகின்றது.

கல்வி மற்றும் ஆய்வுப் பரப்பில் இப்பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. வெளிநாடுகளில் உள்ள பல பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பல பயனுள்ள கல்வி மற்றும் ஆய்வுசார் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இளமாணிப் பட்டப்படிப்புக்கள் மட்டுமன்றி, கலாநிதிக் கற்கை உள்ளடங்கலாக பல பட்டப்பின்படிப்புக் கற்கைகளும் இப்பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த விரிவுரையாளர்கள், இங்கு பட்டப்பின்படிப்பு மாணவர்களாக இணைந்துள்ளனர். இதனை எமது பல்கலைக்கழகத்திற்கு கிடைத்த ஒரு அங்கீகாரமாகவே நான் பார்க்கிறேன்.

இப்பல்கலைக்கழகத்தின் ஆரம்ப வரலாற்றில், பலரது தியாகங்களும் அர்ப்பணிப்புக்களும் விரவிக்கிடக்கின்றன. மர்ஹூம் கலாநிதி எம். எச்.எம். அஷ்ரப்,இவ்விடயத்தில் நினைவுகூரப்பட வேண்டியவர். அவருக்குப் பக்கபலமாக நின்றவர்களும் நலன்விரும்பிகளும் இப்பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக உபவேந்தர், பதிவாளர், நிதியாளர், ஏனைய கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களது பங்களிப்பும் குறிப்பிடத்தக்கவை. தென்கிழக்குப் பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை தலைவரும் பேராசியருமான எம்.பீ.எம். இஸ்மாயில், பல்கலைக்கழக ஸ்தாபகரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவருமான எம்.எச். எம். அஷ்ரப் தொடர்பான நினைவுச் சொற்பொழிவை ஆற்றினார்.

# காத்தான்குடியில் ஒரு இலட்சம் மரங்கள் நடும் திட்டம் ஆரம்பம்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடியில் ஒரு இலட்சம் மரம் நடும் வேலைத் திட்டம் (21) வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

"ஒக்சி கார்டன்" சுற்றுச் சூழல் பசுமைக் கழகம் இந்த மர நடுகைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

காத்தான்குடி கடற்கரையிலுள்ள தாருள் அர்க்கம் மண்டபத்தில் இதன், பிரதான வைபவம் நடைபெற்றது.

"ஒக்சி கார்டன்" சுற்றுச் சூழல் பசுமைக் கழகத்தின் தலைவர் எம். வை.சரீப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறீகாந் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

காத்தான்குடி நகரசபை தவிசாளர் எஸ்.எஸ்.அஸ்பர், காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய ஸ்ரீதர், காத்தான்குடி உதவி பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா, காத்தான்குடி நகரசபை செயலாளர் திருமதி றிப்கா ஷபீன், விவசாய விரிவாக்கத் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பணிப்பாளர் பேரின்ப ராசா தென்னை அபிவிருத்தி சபை பிராந்திய முகாமையாளர் ரி.எம். ஹரீஸ், காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன செயலாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.எம். சபீல் நழீமி உள்ளிட்ட பலர் இதில் பங்கேற்றனர். "மரம் வளர்ப்போம் பசுமை தேசத்தை உருவாக்குவோம்" திட்டத்தின் கீழ், காத்தான்குடியில் ஒரு இலட்சம் மரம் நடும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் காத்தான்குடி தாருஸ்ஸலாம் பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெற்றன.

# சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

(கிண்ணியா தினகரன் நிருபர்)

கிண்ணியா சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு,கடந்த திங்கட்கிழமை (24) கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச்.எம். கனியின் தலைமையில் நடைபெற்றது.

இதில், கிண்ணியா சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ. முஹ்சீன், கிண்ணியா குறிஞ்சாக்கேணி சூரங்கல் வங்கி முகாமையாளர் றிஸ்வி, றபீக், திருமதி. முஸம்மிலா மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வங்கியின் கணினி பயிலுநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு அந்நூர் அமைப்பு 02 மில்லியன் நிதியுதவி



(அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில், பழுதடைந்த "வென்ரிலேட்டர்" இயந்திரத்தை, திருத்தியமைக்க இரண்டு மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.வைத்தியசாலை நிர்வாக்கத்திடம் அந்நூர் நிறுவன அதிகாரிகள் வழங்கினர்.

பாராளுமன்ற உறுப்பினர் முஷர்ரஃப் முதுநபீனிடம் இதுபற்றி தெரிவிக்கப்பட்டதால், அந்நூர் நிறுவனத்தை தொடர்பு கொண்ட முஷர்ரஃப் எம்,பி, இதற்கான நிதியுதவியை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.இதற்கமையவே,குறித்த நிறுவனத்தினர் இரண்டு மில்லியன் ரூபாவை வைத்தியசாலை நிர்வாகத்திடம் வழங்கினர்.

இந்நிழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷர்ரஃப், அந்நூர் தொண்டு நிறுவனத்தின் குவைத் நாட்டிற்கான நிருவாகி அஸ்ஸெய்க் ஷாமீஹ் சாகிர் அப்துல் அஸீஸ், அந்நூர் தொண்டு நிறுவனத்தின் இலங்கை நாட்டிற்கான தவிசாளர் எஸ்.எம். அலியார் மற்றும் நிருவாகிகள், பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எச்.ஏ. றஹிம், பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ரி.எஸ்.ஆர்.ரி.ஆர். றஜாப் மற்றும் வைத்தியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# திருக்கோணேஸ்வரர் ஆலய சூழலை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தவும்

(காரைதீவு குறூப் நிருபர் )

## காரைதீவு பிரதேச சபையில் தீர்மானம்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய சூழலை சதித் திட்டங்களிலிருந்து பாதுகாத்து,புனித பிரதேசமாக பிரகடனப்படுத்துமாறு காரைதீவு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் விஷேட அமர்வு நேற்று (25) செவ்வாய்க்கிழமை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில், இடம்பெற்றபோதே, இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்த பிரேரணையை சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் முன்மொழிந்து உரையாற்றினார். அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது, நாட்டின் மிகத்தொன்மை வாய்ந்த பாடல் பெற்ற தலமாக, திருகோணமலை திருக்கோணேஷ்வரர் ஆலயம் விளங்குகிறது.இது, சைவத்தமிழ் மக்களின் பூர்வீக வரலாற்று நிலமாகும்.

இந்த ஆலயம் சூழ்ந்த இடங்களில், சட்டவிரோதமாக கடைகள் அமைக்கப்பட்டு,இடம்பெறும் செயற்பாடுகள் இந்துக்களின் மனங்களை புண்படுத்தியிருக்கிறது.

தொல்பொருள் திணைக்களம், ஆலய விடயத்தில் தலையிடுவதானால், நிச்சயம் அங்கு ஒரு இரகசிய வேலைத்திட்டமிருக்கும். இந்த பின்புலத்தை நோக்கினால், திருகோணேஸ்வரர் ஆலயத்தை உள்ளடக்கியவாறு உல்லாசத்துறை அபிவிருத்தி எனும் பெயரில் ஆலயத்தை விழுங்கும் செயற்பாடு உள்ளதாகவே சந்தேகிக்கத் தோணுகிறது.

உல்லாசத்துறை அபிவிருத்திக்கு பல்வேறு இடங்கள் இருக்கின்றபோது, கோணேஸ்வரர் ஆலயப் பகுதியை தெரிவுசெய்ய வேண்டியதன் அவசியமென்ன? எனவே அங்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படவேண்டும் என்றார். பிரேரணையை, சபை உறுப்பினர் த.மோகனதாஸ் வழிமொழிந்தார்.

பிரேரணைக்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவாக உரையாற்றி வாக்களித்தனர். இதனால், தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றபட்டது தீர்மானத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் உள்ளிட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தவிசாளர் கூறினார்.

# இஸ்லாம் பாடப்புத்தகம் வழங்கப்படாததால் பரீட்சை எழுதுவதில் மாணவர்கள் குழப்பம்

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

முஸ்லிம் மாணவர்களுக்கு இஸ்லாம் பாட புத்தகம் வழங்கப்படாததால் மாணவர்களின் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டத்தரணி ஷஃபி எச். இஸ்மாயில் தெரிவித்தார். இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் குறிப்பிட்டதாவது,புதிய இஸ்லாம் பாட புத்தகங்கள் தரம் 06,07,10,11 மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.சில, மாதங்களில் நடைபெறப்போகும் சாதாரண தரப் பரீட்சை எழுதுவதிலும் சவால்கள் எழுந்துள்ளன.

திருத்தங்களின் பின்னர் மீண்டும் மாணவர்களுக்கு வழங்குவதாக தெரிவிக்கப்பட்டு,பத்து மாதங்களாகியும் இன்னும் இஸ்லாம் பாடப்புத்தகங்கள் வழங்கப்படவில்லை.இது தொடர்பில் முஸ்லிம் தலைவர்களும், எம்.பிக்களும் வாய்திறக்க தயங்குகின்றனர்.

மனித உரிமை ஆணைக்குழு தலைமையகத்தில் இதுகுறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் திருமலை மாவட்ட இம்ரான் மஹ்ரூப் மற்றும் அநுராதபுர மாவட்ட இசாக் ரஹ்மான் ஆகிய எம். பிக்களே வாய்திறந்துள்ளனர். ஏனைய முஸ்லிம் எம்பிக்களோ அல்லது முஸ்லிம் தலைவர்களோ வாய்திறக்கவில்லை.இதுபற்றி சகலரும் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.



# மகிழூர்முனை தூய சதாசகாய அன்னையின் புதிய ஆலய திறப்பு விழா, கூட்டுத் திருப்பலி



(மட்டக்களப்பு விஷேட நிருபர்)

மட்டக்களப்பு மகிழூர்முனை தூய சதாசகாய அன்னையின் புதிய ஆலயத் திறப்பு விழா, கூட்டுத் திருப்பலி என்பன ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்றன.

மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில், கல்முனை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஏ.தேவதாசன்,செங்கலடி மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை செபஸ்ரியான் இக்னேசியஸ் மற்றும் அருட்தந்தையர்கள் இணைந்து,திருவிழா கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். அதனைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் திருச்சுருப பவனியும், இறுதி ஆசீரும் இடம்பெற்றன.

ஆலயத் திறப்பு விழாவை சிறப்பிக்கும் வகையில் பங்கு பிள்ளைகளுக்கான திருவருட்சாதனகள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்தோடு ஆலய நிர்மாண பணியினை மேற்கொண்டவர்கள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய ஆலய நிர்வாக சபையினருக்கும் நினைவு சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.



அக்கரைப்பற்று ஏஸ் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த மாபெரும் மீலாத் நபிவிழா அக்கரைப்பற்று எப்.என். வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது. ஏஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் பி.ரி.செய்னுலாப்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சிறப்புப் பற்றி விஷேட சொற்பொழிவுகளும், மார்க்க உபன்னியாசங்களும் இடம்பெற்றன. இதேவேளை, பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி மௌலவி ஏ.எம்.றாசிக் தலைமையிலான மார்க்க அறிஞர்கள் மூலம் மௌலூது தமாம் வைபவமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

# மின்னல் தாக்கி மூன்று மீனவர் காயம் மாயமான ஒருவரைத் தேடி வலை விரிப்பு

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகத்துவாரம் பகுதியில், தீபாவளி தினத்தன்று (24) மாலை மின்னல் தாக்கி மூன்று மீனவர்கள் காயமடைந்தனர். இதேநேரம் ஒரு மீனவர் காணாமல் போயுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடியுடன் கூடிய கடும் மழைபெய்து வந்த நிலையிலே,இச்சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

முகத்துவாரம் ஆற்றுவாயில், மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையிலே, மீனவர்களை மின்னல் தாக்கியுள்ளது. இதன்போது மூன்று மீனவர்கள் படுகாயமடைந்ததுடன்,ஒருவர் காணாமலும் போயுள்ளார்.

காணாமல்போன மீனவர் திராய்மடு மூன்று பிள்ளைகளின் தந்தையான 54வயதுடைய உம்முனி விஜயகுமார் எனத் தெரிய வந்துள்ளது.

காணாமற்போன மீனவரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், படுகாயமடைந்த மீனவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.

இந்த மின்னல் தாக்கம் மற்றும் கடுமையான மழை காரணமாக முகத்துவாரத்தின் ஆற்றுவாய் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால்,கடலுக்குள் வெள்ளநீர் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.தற்போது நாடு முழுவதும் இடி மின்னலுடன் மழை பெய்து வருவதால் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

# குடும்பத் தகராறு கைகலப்பாக மாறி வயோதிபப் பெண் உயிரிழப்பு

(பாசிக்குடா நிருபர்

குடும்பத் தகராறு காரணமாக இடம்பெற்ற கைகலப்பில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாடசாலை வீதி பட்டியடிச்சேனையைச் சேர்ந்த த.காந்திமதி வயது (67) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.இச்சம்பவம் தீபாவளி தினமன்று (24) கல்குடா பொலிஸ் பிரிவில் இடம்பெற்றது.மகனுடன் ஏற்பட்ட முரன்பாடு கைகலப்பாக மாறியதில்,ஒருவர் மீது, ஒருவர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போதே,வயோதிபப் பெண் உயிரிழந்துள்ளதாக விசாரணையில் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.சம்பவ இடத்திற்கு வருகை தந்த மட்டக்களப்பு மாவட்ட தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

# நகர்வலம்





வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் தீபாவளி தின விசேட பூசை வழிபாடுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஆகியோர் கலந்து கொண்டதுடன், ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு. பெரியசாமி சுந்தரலிங்கம் மற்றும் உறுப்பினர்கள் பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டுள்ளதை படங்களில் காணலாம்.

## முன்னாள் முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே சுதந்திர கட்சி அமைப்பாளராக நியமனம்

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**



களுத்துறை மாவட்ட சிரேஷ்ட அரசியல்வாதியும் முன்னாள் மேல் மாகாண முதலமைச்சருமான ரெஜினோல்ட் குரே ஸ்ரீ.ல.சு.கட்சியின் களுத்துறை மாவட்ட அமைப்பாளராகவும் மாவட்டத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன அண்மையில் வழங்கி வைத்தார். இவர் முன்னாள் பேருவளைத் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளராகவும் பாணந்துறை தேர்தல் தொகுதி அமைப்பாளராகவும் பணியாற்றியுள்ளதோடு முன்னாள் வட மாகாண ஆளுநராகவும் சிறிது காலம் பணிபுரிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சீனன்கோட்டை

## ஆரம்ப பாடசாலையில் இன்று முப்பெரும் விழா



பேருவளை சீனன் கோட்டை ஆரம்ப பாடசாலையின் முப்பெரும் விழா இன்று புதன்கிழமை (26) மு.ப 10.30 மணிக்கு பாடசாலையின் இரீபதுல் கைரா ஞாபகார்த்த மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஜனாபா எம். வை.எப். ஜெஸீலா அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் புதிய மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டல், சுற்றாடல் கழக அங்கத்தவர்களுக்கு சின்னம் சூட்டல் மற்றும் புதிய கற்றல் வள நிலைய திறப்பு விழாவும் இதன் போது இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வியாபார அபிவிருத்தி ஆலோசனை ஊக்குவிப்பு பேச்சாளரும் 'Elon' கல்லூரியின் பணிப்பாளருமான மபாஸ் மக்கி மற்றும் விசேட அதிதியாக பன்னில பிரதேச கிராம சேவகர் திருமதி எம்.என்.எப். நஸ்லா ஆகியோர் கலந்து சிறப்பிப்பர்.

இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள் உட்பட பெற்றோர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## விரிவுரையாளர் மபாஸ் தென்னிந்தியா பயணம்



தென்னிந்தியாவின் சிவகாசியில் அமைந்துள்ள அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் எதிர்வரும் வியாழக்கிழமை (27) சர்வதேச நூல் வாசிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் ஜெயமோகனின் அறம் என்கின்ற சிறுகதைத் தொகுப்பு பற்றிய கருத்துரை வழங்குவதற்காக இலங்கையைச் சேர்ந்த விரிவுரையாளர் எம்.எஸ்.எம். மபாஸ் அழைக்கப்பட்டுள்ளார்.

கெலிஓயநிவ் எல்பிடியவை பிறப்பிடமாகக் கொண்ட இவர், தனது ஆரம்பக் கல்வியை நிவ் எல்பிடிய அஷ் ஷம்ஸ் முஸ்லிம் வித்தியாலயம் மற்றும் கம்பளை முஸ்லிம் மகா வித்தியாலயம் என்பவற்றில் கற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காணி சீர்திருத்த ஆணைக்குழு சட்டத்தை மறுசீரமைக்குமாறு கோப் குழு பணிப்பு

### 06 வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் சட்டத்தைப் புதுப்பித்து அதன் செயற்பாடுகளை மறுசீரமைப்பதற்கு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) காணி அமைச்சின் செயலாளர் சூலானந்த பெரேராவுக்கு பணிப்புரை விடுத்தது.

இதற்கமைய 06 வாரங்களுக்குள் இது தொடர்பில் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்து கோப் குழுவுக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

2020ஆம் ஆண்டுக்கான காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராயும் நோக்கில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் குழு (கோப் குழு) அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் அண்மையில் கூடியபோதே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதில் கோப் குழுவினால் பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டதுடன், இந்தப் பரிந்துரைகள் நிறைவேற்றப்படுவது பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்கு காணி சீரமைப்பு ஆணைக்குழுவை மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் குழு முன்னிலையில் அழைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.



இந்த ஆணைக்குழு காணிகளைக் கையகப்படுத்தும்போது காணப்படும் பிரச்சினைகள் கோப் குழுவினால் கவனம் செலுத்தப்பட்டதுடன், இதற்கமைய கடந்த 20 வருடங்களில் காணி கையகப்படுத்தல் தொடர்பான விரிவான தகவல்கள் அடங்கிய அறிக்கையை ஒரு மாதத்துக்குள் கோப் குழு முன்னிலையில் சமர்ப்பிக்குமாறும் குழுவின் தலைவரினால் பணிப்புரை வழங்கப்பட்டது.

அத்துடன், காணிகளை அடையாளம் காணுதல் மற்றும் பெறுமதியை மதிப்பீடு செய்தல் என்பவற்றுக்காக விசேட செயலணியொன்றை உருவாக்குமாறு கோப் குழு பரிந்துரைத்ததுடன், குறித்த செயலணியின் பொறுப்புக்கள் உள்ளடங்கிய விபரங்கள் அமைச்சின் செயலாளரினால் இரண்டு வாரங்களுக்குள் கோப் குழுவுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்றும் பணிப்புரை வழங்கப்பட்டது. இந்த செயலணிக்கு நில அளவையாளர் நாயகம் அல்லது அவரின் பிரதிநிதி, அரசாங்கத்தின் மதிப்பீட்டாளர் அல்லது அவரின் பிரதிநிதி ஆகியோரை நியமிக்குமாறும் கோப் குழு பரிந்துரைத்தது.

மேலும், 2018 பத்து லட்சம் காணித் துண்டுகளைப் பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் தொடர்பிலும் கோப் குழுவில் கலந்துரையாடப்பட்டதுடன், இதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் விரிவான அறிக்கையை கோப் குழு முன்னிலையில் சமர்ப்பிக்குமாறும் அதன் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார அறிவுறுத்தினார்.

விசேடமாக இந்த வேலைத்திட்டத்துக்காகத் தற்காலிகமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 214 பேர் தொடர்பில் நிர்வாகத் திணைக்களத்துடன் கலந்துரையாடி அனுமதியளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையை உள்ளீர்த்துக்கொள்ள உரிய தீர்வு எடுப்பது அவசியமாயின் அதனை அமைச்சரவைக்கு ஆற்றுப்படுத்துமாறும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. அதேநேரம், காணி பகிர்ந்தளிப்பு தொடர்பான தேசிய கொள்கைக்குள் காணி சீரமைப்பு ஆணைக்குழுவின் செயற்பாடுகளை உள்ளடக்கி தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கோப் குழு பரிந்துரைத்தது.

மேலும், 50 ஆண்டுகள் பழமையான இந்தக் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் சட்டத்தை தற்போதைய காலத்துக்கு ஏற்ற வகையில் புதுப்பிக்க வேண்டும் எனவும் கோப் குழு பரிந்துரைத்தது.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது 350 மில்லியன் ரூபா செலவு செய்து தற்காலிகமாக இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ள இயற்கை உரம் வேலைத்திட்டம் உர உற்பத்தி தொடர்பில் அனுபவம் வாய்ந்த அரசாங்க நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கு இரண்டு வாரகாலங்களுக்குள் நடவடிக்கை எடுக்குமாறும் கோப் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணாமல் போன கோப்புகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

## கலென்பிந்துனுவெவ யான்ஓய பகுதியில் முதலைகளின் நடமாட்டம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கலென்பிந்துனுவெவ யான்ஓயவில் நடமாடும் முதலைகளினால் மக்கள் மிகவும் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

யான்ஓய பகுதியில் மேய்ச்சலுக்காக இருபுறமும் சுற்றித்திரிகின்ற கால்நடைகள் மற்றும் விலங்குகளை முதலைகள் நீருக்குள் இழுத்துச் சென்று உண்ணுவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

அண்மையில் யான்ஓயவுக்கு அருகில் சென்ற எல்லேவ கிராமத்தைச் சேர்ந்த நபர் ஒருவரை முதலை தாக்கி இழுத்துச் சென்றபோது அந்த நபர் பெரும் சிரமத்திற்கு மத்தியில் தப்பியுள்ளார். பின்னர் பாரிய காயத்திற்கு உள்ளான அவர் கலென்பிந்துனுவெவ கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேற்படி பகுதியில் நடமாடும் இந்த முதலைகளை பிடித்து வேறு பிரதேசத்திற்கு கொண்டு செல்லுமாறு பிரதேச மக்கள் வன விலங்கு அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



தீபாவளியை முன்னிட்டு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் (24) நடைபெற்ற தீபாவளி நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள்.



பாணந்துறை ஜீலான் தேசிய பாடசாலையின் மீலாத்தின நிகழ்வுகள் கடந்த வியாழனன்று (20) கல்லூரியின் உம்முல் மலீஹா நினைவு மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட தொழிலதிபர் அல் ஹாஜ் ஏ.எஸ்.என். பௌஸிக்கு அதிபர் ஹலீம் மஜீத் சஞ்சிகையை கையளிப்பதையும், சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்ட திறன் அபிவிருத்தி, தொழில் வழிகாட்டுநர் அஷ்ஷெய்க் சப்ரி மொஹமட் மாணவரொருவருக்கு பரிசு வழங்குவதையும் மாணவிகள் குழுவாக வரவேற்பு கீதம் இசைப்பதையும் படங்களில் காணலாம். (படம்: மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

கேகாலை மாவட்டத்தில்

## ஆங்கில மொழி மூலம் மருத்துவ துறைக்கு தெரிவான மாணவிக்கு பாராட்டு



கேகாலை மாவட்டத்தில் மருத்துவத்துறையில் ஆங்கில மொழி மூலம் 3 ஏ சித்தி பெற்று, முதல் நிலையில் பல்கலைக்குத் தெரிவாகிய "சிலோன் லேடிஸ் கெம்பஸ்" தனியார் பாடசாலையின் மாணவி முஹம்மத் அன்வர் பாத்திமா இல்மாவைக் கௌரவிக்கும் நிகழ்வு வரகாபொலயில் அமைந்துள்ள சிலோன் லேடிஸ் கெம்பசில் (22) நடைபெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தினால் இந்த கௌரவம் அவருக்கு வழங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையிலேயே அவர் இந்த சித்தியை எய்தி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். இந்நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவர் என்.எம்.அமீன், தலைவி புர்கான் பி இப்திகார் உட்பட அங்கத்தவர்களும் கலந்து சிறப்பித்து அவரைப் பாராட்டிக் கௌரவித்தனர்.

*(எம்.எஸ்.எம்.ஸாகிர்)*

## விற்பனை நிலையங்களை உடைத்து பொருட்களை திருடிய கும்பல் கைது

**(புத்தளம் விசேட நிருபர்)**

கடந்த பல வருடங்களாக லொறி ஒன்றில் சென்று சில்லறைக் கடைகள் மற்றும் மின்சார உபகரண விற்பனை நிலையங்களை உடைத்து அங்கிருந்து பொருட்களைத் திருடி வந்த கும்பல் ஒன்றை அண்மையில் குளியாப்பிட்டி பிரிவின் குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர். இச்சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபருடன் மேலும் இரு சந்தேக நபர்களும் இதன் போது கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து சுமார் 70 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய வீட்டு மின்சார உபகரணங்கள் மற்றும் சில்லறைச் சாமான்கள் ஒரு தொகையும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குளியாபிட்டி, பிங்கிரிய, ஹெட்டிபொல போன்ற பிரதேசங்களில் அமைந்துள்ள விற்பனை நிலையங்களை உடைத்து அங்கிருந்து பொருட்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் தொடர்ச்சியாகக் கிடைத்து வந்த முறைப்பாடுகளை யடுத்து இது தொடர்பில் குளியாப்பிட்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெரஞ்ஜய அபயவர்தன, பிரிவின் குற்ற விசாரணைப் பிரிவுக்கு வழங்கிய உத்தரவுக்கு அமைய செயற்பட்ட பொலிஸ் குழுவினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது கடை ஒன்றுக்கருகில் நிறுத்தப்பட்டிருந்த லொறியொன்று தொடர்பில் ஏற்பட்ட சந்தேகத்தை யடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது பூட்டுக்களின் தகரங்களை உடைப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் சில அவர்களிடமிருந்ததன் காரணமாக அவர்கள் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் அவர்களிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின் போது அவர்களால் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பான விபரங்களைப் பெற முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பெறுகை அறிவித்தல்

## பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை

## உணவகத்தை நடத்திச் செல்லல் 2022/2023

2022/ 2023 ஆண்டில் கீழ்க்காணும் உணவகங்களை நடத்திச் செல்லும் ஒப்பந்தத்திற்காக பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | உணவகம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1 | வைத்தியசாலை பொது உணவகம் | 3500.00 |
| 2 | வைத்திய ஓய்வுகூட உணவகம் | 2000.00 |
| 3 | தாதியர் துணை மருத்துவம் மற்றும் இடைநிலை மருத்துவ அதிகாரிகளுக்கான பொது ஓய்வுகூட உணவகம் | 2000.00 |

மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணத்தை காசாகச் செலுத்துவதன் பேரில் மற்றும் எழுத்துமூல வேண்டுதலுடன் தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து 2022.10.26 முதல் 2022.11.15 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணத் தொகுதியை பேராதனை, சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலையின் ஐந்தாம் மாடியில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளாக வேறு வேறாகப் பொறியிட்டு இரு உறைகளில் இட்டு அவ் உறைகளை மீண்டும் ஒரு பொறியிடப்பட்ட உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் '2022/2023 பேராதனை சிறிமாவோ பன்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலையின் உணவகத்தை நடத்திச் செல்வதற்கான விலைமனுக்கள்' என்று குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விச் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிட்டு 2022.11.16 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு**
**சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை**
**பேராதனை**
**2022.10.26**
**0812389110 நீடிப்பு 2621**

---

## பூஜாப்பிட்டிய பிரதேச சபை

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் வருடத்தில் இந்த சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக ஒப்பந்தக்காரர்கள், வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதிவு செய்து கொள்வதற்கு விண்ணப்பிப்பவர்களினால் பின்வரும் ஒவ்வொரு விடயத்தின் பொருட்டும் தம்மால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக ஒரு விடயத்தின் பொருட்டு 1500.00 ரூபாவையும் ஒப்பந்தத்திற்காக பின்வரும் பதிவுக் கட்டணத்துடன் ''தலைவர், பூஜாப்பிட்டிய பிரதேச சபை'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
02. பதிவுக் கட்டணத்தை காசோலை மூலம் செலுத்துவதானால் ''பூஜாப்பிட்டிய பிரதேச சபை நிதியம்'' எனும் பெயருக்கு அனுப்புதல் வேண்டும்.
03. பதிவுக் கட்டணத்தை காசுக் கட்டளை மூலம் செலுத்துவதானால் செலுத்தும் அலுவலகம் ''பூஜாப்பிட்டிய'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
04. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2022.12.09ஆம் திகதியாகும்.
05. மேலதிக விபரங்களை 081-2302682 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பொருள் வழங்கல்**

01. காகிதாதிகள் வழங்குதல் (பிரின்டர் மை/ சகல டோனர் மற்றும் காட்ரிஜ் வகைகள் வழங்குதல்
02. கணனி, அச்சுப்பொறி, புகைப்படப்பிரதி இயந்திரம், பெக்ஸ் இயந்திரம் என்பன வழங்குதல்
03. வீதி விளக்கு உபகரணங்களை வழங்குதல்
04. துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் (சவர்க்காரம், சுத்திகரிப்புத் திரவங்கள், குப்பைக் கூடைகள், மண்வெட்டி, கத்தி, துடைப்பம், ஈர்க்கிள், பிரஸ்கள், கையுறைகள், கம்பூட்ஸ் போன்றன)
05. தார், மணல், செங்கல், கருங்கல், சிறு கற்கள், சீமெந்து, இரும்பு, நீர்க்குழாய் துணைப்பாகங்கள் உட்பட அனைத்து நிர்மாணப் பொருட்களை வழங்குதல்
06. அச்சுக் கல், சீமெந்துக் கல், கொங்கிறீட் பொருட்கள் மற்றும் ஹியூம் குழாய்களை வழங்குதல்
07. மின்சாரப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்
08. டயர், டியூப் வழங்குதல் மற்றும் மீள் நிரப்புதல்
09. மேசைகள், கதிரைகள், அலுமாரிகள், பைல் கெபினட் போன்ற அலுவலக உபகரணங்கள் (உருக்கு, பிளாஸ்டிக், மரம்)
10. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் வழங்குதல்
11. சீருடைகள் மற்றும் சீருடைகளுக்கான துணிகள், அலுவலக மேசை விரிப்புகள் மற்றும் திரைச்சீலைகளை வழங்குதல்
12. விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல்
13. சீசீடிவி கமரா முறைமையை வழங்குதல் மற்றும் பொருத்துதல்
14. வாகனங்களுக்கான குஷன் வேலைகள், டென்ட் துணிகளைத் தைத்தல் மற்றும் இருக்கைகளுக்கு மேலுறையிடுதல்
15. நிறப்பூச்சு வகைகள், வார்னிஷ் மற்றும் நிறப்பூச்சு பூசுவதற்கான பொருட்களை வழங்குதல்
16. குப்பைகளைச் சேகரிப்பதற்கான தொட்டிகள், கொங்கிறீட் மற்றும் பிளாஸ்டிக் கொம்போஸ்ட் தொட்டிகள் வழங்குதல்
17. கெனபியர் கொட்டகைகள்
18. சமையல் உபகரணங்கள்

**சேவைகள்**

01. அச்சு வேலைகள் (டிஜிட்டல் அச்சு வேலைகள், புத்தகங்களை அச்சிடல், மாதிரிப் படிவங்களை அச்சிடல், கோவைகளை அச்சிடல்)
02. வாகன திருத்தவேலைகள் (உதிரிப்பாகங்கள்)
03. வாகன திருத்த வேலைகள் ஒட்டோ மொபைல்
04. வாகன திருத்த வேலைகள் A/C
05. வாகன திருத்த வேலைகள் டிங்கரின் அன்ட் பெயின்ட்
06. வாகன திருத்த வேலைகள் இலெக்ரிகல்
07. இறப்பர் முத்திரைகள், பெயர்ப் பலகைகள், பதக்கங்கள், விருதுகள், ஞாபகச் சின்னங்கள் மற்றும் உப ஆக்கங்களை தயாரித்தல் மற்றும் வழங்குதல்
08. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
09. கணனி அச்சுப் பொறி, தட்டச்சு இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், ரோணியோ இயந்திர திருத்தவேலைகள்
10. சட்டத்தரணி சேவைகள் மற்றும் நில அளவை சேவைகள்
11. மேசன் வேலை, தச்சு வேலை, உருக்கியொட்டும் வேலைகள்
12. இயந்திரோபகரண திருத்தவேலைகள்
13. வாடகை அடிப்படையில் நிர்மாண இயந்திரோபகரணங்களை வழங்குதல்
14. கடைசல் பட்டறை வேலைகள்
15. வாடகை அடிப்படையில் போக்குவரத்து வசதிகள் வழங்குதல் / முச்சக்கர வண்டி / வான் / பஸ்கள் போன்றன
16. மேசை, கதிரை, அலுமாரி, மரத் தளபாடங்கள் வழங்குதல்
17. மரம் வெட்டும் சேவைகள்
18. ஒலி பெருக்கி இயந்திரங்களை வாடகைக்கு பெறல்.
19. புகைப்படமெடுத்தல், வீடியோ படமெடுத்தல்.
20. நில அளவையாளர் சேவை
21. மழை பாதுகாப்பு மற்றும் உற்சவப் பொருட்கள் வாடகைக்கு வழங்குதல்

**ஒப்பந்தக்காரர்கள்**

| | | |
|---|---|---|
| 01. | 50,000.00 ரூபா வரை | 1050.00 |
| 02. | 50,001.00 ரூபா முதல் 100,000.00 ரூபா வரை | 1350.00 |
| 03. | 100,001.00 ரூபா முதல் 500,000.00 ரூபா வரை | 1600.00 |
| 04. | 500,001.00 ரூபா முதல் 1,000,000.00 ரூபா வரை | 2625.00 |
| 05. | 1,000,001.00 ரூபா முதல் 2,000,000.00 ரூபா வரை | 5250.00 |
| 06. | 2,000,001.00 ரூபாவுக்கு மேல் | 8000.00 |

**அநுர பெர்னான்டோ**
**தலைவர்,**
**பூஜாப்பிட்டிய பிரதேச சபை,**
**பூஜாப்பிட்டிய.**
**2022.10.10**

---

சுற்றாடல் அமைச்சு
மத்திய சுற்றாடல் அதிகாரசபை

## உணவகத்தை நடத்திச் செல்வதற்கான விலைமனு கோரல்

### 2022 /2023 ஆண்டுகளுக்காக

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமை அலுவலகத்தின் உணவகத்தை நடத்திச் செல்வதற்கு தகுதியான விலைமனுதாரர்களிடம் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன.

மேலதிக தகவல்களை **www.cea.lk** இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
கொள்முதல் குழு,
மத்திய சுற்றாடல் அதிகார சபை,
இல.104, டென்சில் கொப்பெகடுவ மாவத்தை,
பத்திரமுல்லை.

தொலைபேசி இலக்கம் - 0112872275, 0112873447
உதவி அத்தியட்சகர் (நிர்வாகம்)

---

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### ரூ.30,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

18.00% 2025 ''A'' தொடர்களின் கீழ் ரூ. 12,500 மில்லியனையும், 18.00% 2028 ''A'' தொடர்களின் கீழ் ரூ. 17,500 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2022 ஒக்டோபர் 28ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 18.00% 2025 ''A'' | 18.00% 2028 ''A'' |
|---|---|---|
| ISIN* | LKB00325G013 | LKB00628A153 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 12,500 மில்லியன் | ரூ. 17,500 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 18.00% ஆண்டொன்றிற்கு | 18.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2021 யூலை 01 | 2022 ஜனவரி 15 |
| **முதிர்வுத் திகதி** | **2025 யூலை 01** | **2028 ஜனவரி 15** |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 01 ஜனவரி & 01 யூலை | 15 ஜனவரி & 15 யூலை |
| ஒன்றுசேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 6.0163 | ரூ. 100 இற்கு ரூ. 5.3315 |
| ஏல விற்பனைத் திகதி | 2022 ஒக்டோபர் 28, வெள்ளிக்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2022 ஒக்டோபர் 28, வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணி | |
| **தீர்ப்பனவுத் திகதி** | **2022 நவெம்பர் 01** | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்/ ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்வெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் லிமிடட் | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர் / பதிவாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்,
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

---

துறைமுகம், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு

## இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை

## கேள்வி கோரல்

**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் வீரவில நகரத்தில் அமைந்துள்ள விடுமுறை பங்களாவை முகாமைத்துவ அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்**

**கேள்வி இல. SP/2022-09**

1. சிவில் விமான சேவைகள் அதிகார சபை சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் (DPC) தலைவரினால் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் வீரவில நகரத்தில் அமைந்துள்ள விடுமுறை பங்களாவை முகாமைத்துவ அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்காக தகைமை வாய்ந்த தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. 2022 ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி முதல் 2022 நவம்பர் மாதம் 16ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்ததன் பின் மீளளிக்கப்படாத ஆயிரத்து ஐந்நூறு (1500.00) (வெட் இன்றி) ரூபா கட்டணத்தைச் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தி கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
3. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, சிவில் விமான சேவைகள் சூழல் ஆராய்ச்சி மற்றும் செயற்றிட்டப் பிரிவின் 0112358824 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் அனைத்து கேள்விதாரர்களினாலும் ஐம்பதாயிரம் (50,000.00) ரூபாவுக்கான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றை வைப்புச் செய்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்கு கேள்விப் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.
5. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2022 நவம்பர் மாதம் 02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையில் இடம்பெறும்.
6. 2022 நவம்பர் மாதம் 17ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இல. 152/1, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவருக்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளைக் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வீரவில சுற்றுலா பங்களாவை முகாமைத்துவ அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
7. கேள்வியைக் கையளிப்பதற்கு தகைமை பெறும் நிறுவனத்தினால் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் (750,000.00) பெறுமதியான இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பெயரில் பெற்றுக்கொண்ட நிபந்தனைகளற்ற செயற்றிறன் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. 2022 நவம்பர் மாதம் 17ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான காலம் முடிவடைந்தவுடன் உடன் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை,**
**இல. 152/1, மினுவங்கொட வீதி,**
**கட்டுநாயக்க.**

---

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

---

CEYLON PETROLEUM STORAGE TERMINALS LIMITED

## கேள்வி அறிவித்தல்

### சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிட்டட்

### கொலன்னாவையிலுள்ள பாவிக்கப்பட்ட/பாவனைக்கொவ்வாத அம்சங்களின் விற்பனை

**கேள்வி இல.: KPR/45/2022**

பின்வரும் கேள்விகளுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிட்டட் பெற்றுக் கொள்ளும்.

| விற்பனைகளின் விளக்கம் | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ஒவ்வொரு தொகுதிக்குமானது) | கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளல் | கேள்வி செல்லுபடியாகும் காலப்பகுதி | கேள்வி பிணை மற்றும் செல்லும்படியாகும் காலம் | கேள்வி திறக்கும் திகதி மற்றும் நேரம் | பரீட்சித்தல் ஏற்பாடு |
|---|---|---|---|---|---|---|
| **பாவிக்கப்பட்ட/ பாவனைக்கொவ்வாத அம்சங்கள்** (used unserviceable wheel rims L iron H iron pieces and pipe pcs, wooden cupboard and steel cupboard, damaged asbestos sheets and asbestos ceiling sheet, used Engine Oil with drums etc., | 1,000 ரூபா | 2022.11.09 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் | 2023.01.10 ஆம் திகதியன்று வரையும் | 10,000 ரூபா மற்றும் 2023.02.10 ஆம் திகதியன்று வரையும் | 2022.11.10 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு | 011-5668954 அல்லது 011-5750751 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக களஞ்சியசாலை களுக்கான முகாமையாளருடன் சந்திப்பு முன்னேற்பாடொன்றை மேற்கொள்வதன் மூலம். |

ஆர்வமுள்ள சாரார் கேள்வி ஆவணங்களை **www.cpstl.lk** என்ற இணையதளத்தினூடாக பார்வையிட்டு **(பார்வையிடல் நோக்கத்திற்காக மாத்திரம்)** தேவையான தகவலை பெற்றுக் கொள்வதுடன் மூலப்பிரதி கேள்வி ஆவணங்கள் **2022.10.26 ஆம் திகதியிலிருந்து 2022.11.09 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும்** மேலே கூறப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத கேள்வி ஆவண கட்டணத்தை செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கீழேயுள்ளவரிடமிருந்து மூலப்பிரதி கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் பெறுகை செயற்பாட்டிலிருந்து பெறக்கூடிய கேள்வி ஆவணத்திலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் **மேலே கூறப்பட்டவாறான** திகதியன்று அல்லது அதற்கு முன்னராக **கிடைக்கும் வகையில்** பதிவுத் தபாலில்/ நேரடியாக /தூதஞ்சல் சேவையில் அல்லது முத்திரையிடப்பட்ட உறையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, முகாமையாளர் பெறுகை மே/பா, சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிட்டட், பெறுகை செயற்பாடு, 1 ஆம் மாடி, புதிய கட்டிடம், எண்ணெய் குதம், கொலொன்னாவ, வெல்லம்பிட்டிய என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிட்டட்டின் பிரதான உட்செல்லும் வழியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம்.

கேள்விகள் மேலே கூறப்பட்டுள்ளவாறு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே பெறுகைக்காக முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விகளை திறக்கும் நிகழ்வில் பங்குபெறுவதற்கு/ பார்வையிடுவதற்கு உரித்தான விலைமனுதாரரின் அதிகாரம் பெற்ற ஒரு அங்கத்தினர் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்.

மேலே கூறப்பட்டுள்ளவாறு கேள்வியின் செல்லுபடியாகும் காலம் மற்றும் கேள்விப் பிணையின் காலமும் அமைந்திருக்கும்.

011-2572156/ 5663121 ஆகிய இலக்கங்களினூடாக பெறுகைக்கான முகாமையாளரிடமிருந்து எந்தவொரு தெளிவுறுத்தல்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் பெறுகை மே/ பா.,**
**சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிட்டட்,**
**பெறுகை செயற்பாடு, புதிய கட்டிடம்,**
**எண்ணெய் குதம்,**
**கொலொன்னாவ, வெல்லம்பிட்டிய.**

**தொலைபேசி:** +94 11 2572156 , +94 11 5663121
**தொலைநகல்:** +94 11 2572155
**மின்னஞ்சல்:** procure@cpstl

### நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

## விலைக்கோரல் அறிவித்தல் - 2022.10.26

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலைமனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | திருகோணமலை நீர் வழங்கல் திட்டம் - கந்தளாய் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் வண்டல்களை உலர்த்தும் படுகையின் மிகுதி வேலைகளுக்கான நிர்மாணங்கள்<br>ஒப்பந்த இல: **RSC(E)/DGM/RH/SLUDGE DRY BED/ KANTALE/2022/32** | 12,500/-+ VAT | ரூபா 270,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C4 அல்லது C5 தரத்தில் CIDA பதிவு மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 27.0 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 17/11/2022 மு.ப. 10.00 |
| 02 | பதுளை நீர் வழங்கல் திட்டம் - ரத்வத்த மாவத்தையிலுள்ள தேநீவவச பணியாளர் விடுதியின் புதுப்பித்தல் வேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ BADULLA/2022/181** | 4,000/-+ VAT | ரூபா 45,790/- | கட்டிட நிர்மாணத் துறையில் C7 முதல் C8 வரையான தரத்தில் CIDA பதிவு | 3.4 மில்லியன் | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 09/11/2022 பி.ப. 2.00 |
| 03 | களனி பிராந்தியத்திலுள்ள (களனி) பிரதேச பொறியியலாளர் பிரிவிற்கு புதிய சேவை இணைப்புகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல : **RSC(W/N)/SC/KEL(O&M)/2022/66** | 12,500/-+VAT ** | ரூபா 321,300/- | குழாய் பதிப்புத் துறையில் அனுபவம் வாய்ந்த நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 21.5 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele: 0112922129 Fax: 0112922146 | 16/11/2022 மு.ப. 10.00 |
| 04 | களனி பிராந்தியத்திலுள்ள (பியகம) பிரதேச பொறியியலாளர் பிரிவிற்கு புதிய சேவை இணைப்புகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல : **RSC(W/N)/SC/KEL(O&M)/2022/67** | 12,500/-+VAT ** | ரூபா 321,300/- | குழாய் பதிப்புத் துறையில் அனுபவம் வாய்ந்த நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 21.5 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele: 0112922129 Fax: 0112922146 | 16/11/2022 மு.ப. 10.00 |
| 05 | களனி பிராந்தியத்திலுள்ள (ஜா-எல) பிரதேச பொறியியலாளர் பிரிவிற்கு புதிய சேவை இணைப்புகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல : **RSC(W/N)/SC/KEL(O&M)/2022/68** | 12,500/-+VAT ** | ரூபா 321,300/- | குழாய் பதிப்புத் துறையில் அனுபவம் வாய்ந்த நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 21.5 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele: 0112922129 Fax: 0112922146 | 16/11/2022 மு.ப. 10.00 |
| 06 | கதிர்காமம் நீர் வழங்கல் திட்டத்திலுள்ள அலுவலக இடப்பரப்பு மற்றும் பொறித்தொகுதியைச் சுற்றி வேலியை வழங்குதல் மற்றும் நிரப்புதல்<br>ஒப்பந்த இல:<br>**RSC(S)/P&C/C/CHAIN LINK FENCE/KATARAGAMA WSS/ RH/2022-57** | 12,500/-+VAT ** | ரூபா 200,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 13.83 மில்லியன் | பி.ஒ.நி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை<br>Tele:041-2222105<br>Fax 041-2221329 | 09/11/2022 பி.ப. 2.00 |
| 07 | தெஹிவளை பிராந்தியத்திலுள்ள நீர் வழங்கல் திட்டத்தில் குழாய்வழி கசிவுகளுக்கான திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல: **W-S/P&C/C/ LK(01)/DEHI/ O&M/2022/41** | 12,500/-+VAT ** | ரூபா 174,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 17.40 மில்லியன் | பி.ஒ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946 / 0112637947<br>**Pre-Bid meeting will be held on 03.11.2022 at 10.00 a.m in RSC (Western-South) Office** | 10/11/2022 மு.ப. 10.00 |
| 08 | தெஹிவளை பிராந்தியத்தில் புதிய சேவை இணைப்பு வழங்குவதற்கு அகழ்தல், குழாய் பதித்தல் மற்றும் மீள் நிரப்புதல்<br>ஒப்பந்த இல: **W-S/P&C/C/NS(01)/ DEHI/O&M/2022/42** | 12,500/-+VAT ** | ரூபா 130,500/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவு | 13.04 மில்லியன் | பி.ஒ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946 / 0112637947 | 10/11/2022 மு.ப. 10.00 |
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 09 | 40,000 கி.கிராம் 15mm (1/2'') gunmetal ferrule வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **SUP & MM/GF-03/2021/26** | 35,000/-+VAT ** | ரூபா 2,550,000/- | 40,000 கி.கிராம் 15mm (1/2'') gunmetal ferrule வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 17/11/2022 மு.ப. 10.00 |
| 10 | கண்டி நகர கழிவுநீர் சுத்திகரிப்புத் தொகுதியிலுள்ள சேற்றுக் கழிவுநீர் சுத்திகரிப்பு Screw Pressஇற்கு 3000 கி.கிராம் Cationic Polymer வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல. **RSC-C/KCWWTP/O&M/SUP/2022/32** | 6,000/-VAT ** | ரூபா 75,000/- | 3000 கி.கிராம் Cationic Polymer வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tel .0812386068/ 0812388086<br>Fax.0812388027 | 09/11/2022 பி.ப. 2.00 |
| 11 | பதுளை மாவட்டத்திலுள்ள பிராந்திய ஆய்வுகூடம் மற்றும் மின் ஆய்வுகூடங்களுக்கு தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/O&M/BAN/LAB ASSISTANTS/2022/187** | 6000/-+ VAT ** | ரூபா 77,000/- | தொழிலாளர் சேவைகளை வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 8.4 மில்லியன் | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 09/11/2022 பி.ப. 2.00 |
| 12 | பண்டாரவளை மற்றும் அதனைச்சுற்றியுள்ள பிரதேச முகாமையாளர் அலுவலகங்களுக்கு சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்கான ஒப்பந்தம்.<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/O&M/ BANDARAWELA/2022/200** | 2000/-+ VAT | ரூபா 28,000/- | ஆவணத்தின் பிரகாரம் | 1.8 மில்லியன் | பி.ஒ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 09/11/2022 பி.ப. 2.00 |
| | **2022-10-19** திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. 1000 தொன் பொலி அலுமினியம் குளோரைட்டை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: **SUP&MM/CHEM/PAC-04/2022/12 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-11-10ஆம் திகதி மு.ப. 10.00 மணி எனத் திருத்தப்பட்டுள்ளது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | **2022-10-19** திகதி பிரசுரமான விளம்பரம் தொடர்பானது. 600 தொன் நீர்ச் சுண்ணாம்பை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: **SUP&MM/CHEM/HL-04/2021/42 -** இந்தக் கேள்வியின் தேவைப்படும் பிணை முறித் தொகை ரூபா 1,000,000/- (1 மில்லியன் ) எனத் திருத்தப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 13 | கொழும்பு வடக்கு பிராந்திய முகாமையாளர் அலுவலகத்திற்கு வழங்குதல் மற்றும் விநியோகித்தல் - 2023ஆம் வருடத்திற்கான வருடாந்த பொருள் தேவைப்பாடுகள்<br>ஒப்பந்த இல: **WC/SS/M(C-N) /R.CLAMP/2022/133- O&M** | 4,000/-VAT | ரூபா 30,000/- | Stainless Steel Repair Clamps உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பி.ஒ.நி (மேற்கு - மத்திய) தேநீவவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011- 2856421/ 0112856420-2 | 11/11/2022 மு.ப. 10.00 |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 14 | தெலவெல - சிறிய நகரங்கள், கிராமிய நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு பிரிவு மற்றும் தரைக்கீழ் நீர்ப் பிரிவிற்கு 02 எண்ணிக்கையான வளிச்சீராக்கம் செய்யப்பட்ட வேன்களை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **T&C/STRWS/Veh-Hire/2022/01** | 2,000/-VAT | ஒரு வாகனத் திற்கு ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 16/11/2022 மு.ப. 10.00 |
| 15 | மேலதிகப் பொது முகாமையாளர் (CAM) பாவனைக்கு SUV வகையான வாகனமொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **ADDLGM(CAM)/VEH-HIRE/2022/03** | 2,000/-VAT | ஒரு வாகனத் திற்கு ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 16/11/2022 மு.ப. 10.00 |
| 16 | பிரதிப் பொது முகாமையாளர் (CAM) பாவனைக்கு Sedan வகையான வாகனமொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **ADDLGM(CAM)/VEH-HIRE/2022/04** | 2,000/-VAT | ஒரு வாகனத் திற்கு ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 16/11/2022 மு.ப. 10.00 |
| 17 | புத்தளம் மற்றும் சிலாபம் நீர் வழங்கல் திட்டத்தின் கீழுள்ள திட்டக் கண்காணிப்பிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : **RSC(NW)/M-PUT/HV/RC-(CRIWMP)/MANA-OFFI/2022/67** | 4,000/-VAT | ரூபா 10,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஒ.நி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086 | 16/11/2022 பி.ப. 2.00 |
| 18 | குருநாகல் பிராந்தியத்திலுள்ள பொல்பித்திகம நீர் வழங்கல் திட்டத்திற்கு 01 க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : **RSC(NW)/M(KURU)/HV/ CRIWMP/ POLPITHI/2022/62** | 4,000/- + VAT | ரூபா 10,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஒ.நி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086 | 16/11/2022 பி.ப. 2.00 |
| 19 | வவுனியா - பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் - (வடக்கு) பி.ஒ.நி (வ) சமூகம் சம்பந்தப்பட்ட குழாய் வேலைகளுக்கு வாகனம் (வேன் ஒன்றை) வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : **RSC/N/DGM/CRIWMP(Project)/ Hiring of Vehicle/2022/043** | 4,000/- + VAT | ரூபா 36,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஒ.நி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 16/11/2022 பி.ப. 2.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமூகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

## பதுளை மாநகர சபை

# 2023 ஆண்டு வரவு செலவு அறிக்கை

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அத்தியாயம்) 212(ஆ) சட்டத்தின் பிரகாரம் பதுளை மாநகர சபையின் 2023 நிதியாண்டிற்காகத் தயாரிக்கப் பட்ட வரைவு வரவு செலவு அறிக்கையானது பொது மக்களின் பரிசீலனைக்காக அலுவலக நேரங்களில் 2022 ஒக்டோபர் 26 முதல் நவம்பர் 11 வரை பதுளை மாநகர சபையின் செனரத் பரணவிதான பொது நூலக வளாகத்தில் மற்றும் மாநகர சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**டப்ளியூ.டீ. பிரியந்த அமரசிரி,**
**மாநகர முதல்வர்,**
**மாநகர சபை,**
**பதுளை.**

2022 ஒக்டோபர் 20ஆம் திகதி
**பதுளை மாநகர சபை அலுவலகத்தில்**

Repeat Your Ad For Better Offers

## 2023 வரவு செலவு வரைவு ஆவணம் பரிசீலனை செய்தல்

### பிபிலை பிரதேச சபை

பிபிலை பிரதேச சபையின் 2023 ஆண்டுக்கான வரவு செலவு வரைவு ஆவணம் பொதுமக்களுடைய பரிசீலனைக்காக பிபிலை பிரதேச சபை காரியாலயத்தில் 2022.10.25ஆம் திகதி தொடக்கம் 2022.11.09ஆம் திகதி வரை வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

**தவிசாளர்**
**பிபிலை பிரதேச சபை**

## ஹரிஸ்பத்துவ பிரதேச சபை

### வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2023

2023ஆம் ஆண்டிற்காக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் முகமாக வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கு குறித்த விண்ணப்பங்கள் 2022.12.31 பி.ப. 3.00 வரை என்னால் ஏற்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொ.பே. இல. 081-2499576 ஊடாக விசாரிக்கலாம். அல்லது **harispaththuwaps@gmail.com** மின்னஞ்சல் முகவரிக்கு உங்களது மின்னஞ்சல் முகவரியை அனுப்புவதன் மூலம் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**எச்.ஏ. ஆனந்த ஜயவிலால்**
**தலைவர்,**
**ஹரிஸ்பத்துவ பிரதேச சபை.**

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

USA, CA92841, Garden Grove, APT 2Q, Beach Blvd, 12221ஐச் சேர்ந்த **இத்தபான பயகலகே சூலா தமயந்தி பீரிஸ்** எனப்படும் **சூலா இத்தபான பீரிஸ்** (USA கடவுச் சீட்டு இல. A07444767 கொண்ட) நான் பாணந்துறை, வலன வீதி, இல. 20ஐச் சேர்ந்த **இத்தபான பயகலகே துஷாந்த பிரேமலால்** இன் பெயரில் என்னால் வழங்கப்பட்ட கலிபோர்னியா பகிரங்க நொத்தாரிசு **Doris C. Duenas** இன் முன்னிலையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007 ஜூன் 28ம் திகதிய வெளிநாட்டு அற்றோணி தத்துவத்தை 2022 ஒக்டோபர் 01ம் திகதி முதல் அமுலாகுமாறு இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். என் பெயரில் அல்லது என் சார்பாக சொல்லப்பட்ட அற்றோணி தத்துவத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட **இத்தபான பயகலகே துஷாந்த பிரேமலால்** இனால் மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாடுகள் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் இதன் பிறகு நான் பொறுப்பாகமாட்டேன்.

**சூலா இத்தபான பீரிஸ்,**
**முதன்மையாளர்**
28 செப்டெம்பர் 2022

## ரம்பேவ பிரதேச சபை

### 2023ஆம் ஆண்டில் ஆதனங்களைக் குத்தகைக்கு விடுதல் – கேள்வி கோரல்

ரம்பேவ பிரதேச சபைக்கு உரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தக இடங்களை 2023.01.01 முதல் 2023.12.31 வரையான ஒரு வருட காலத்திற்குக் குத்தகைக்கு விடுவதற்காகக் கேள்வி கோரப்படுகின்றது.

**கேள்வி கோரல்**

1. மாதிரிப்படிவங்களை வழங்கல் : 2022.10.26 முதல் 2022.11.14 அன்று பி.ப. 3.00 வரை
2. ஏற்றுக்கொள்ளல் : 2022.11.15 அன்று மு.ப. 10.00 வரை
3. திறத்தல் : 2022.11.15 அன்று மு.ப. 10.15 இற்கு

இதற்கான மாதிரிப்படிவக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை பின்வருமாறு

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | வியாபாரத்தின் பெயர் | ஆகக் குறைந்த கேள்வி ரூபா | கேள்விப் பிணைத் தொகை ரூபா | படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1 | ரம்பேவ வார சந்தை | 800000.00 | 25000.00 | 3000.00 |
| 2 | பிஹிம் பிய கொள்ளேவ வார சந்தை | 20000.00 | 2500.00 | 3000.00 |
| 3 | இக்கிரியகொள்ளேவ மாட்டிறைச்சிக் கடை | 1250000.00 | 25000.00 | 3000.00 |
| 4 | சாலாம்பபுர மாட்டிறைச்சிக்கடை | 900000.00 | 25000.00 | 3000.00 |
| 5 | தல்கஹவெல மாட்டிறைச்சிக்கடை | 550000.00 | 25000.00 | 3000.00 |
| 6 | கொலின்பெந்த வெவ மாட்டிறைச்சிக்கடை | 550000.00 | 25000.00 | 3000.00 |
| 7 | ரம்பேவ கடல் மீன் கடை | 50000.00 | 2500.00 | 3000.00 |
| 8 | வெலிஒய சந்தி கடல் மீன் தட்டு | 5000.00 | 1000.00 | 3000.00 |
| 9 | இக்கிரிகொள்ளேவ கடல் மீன் கடை | 5000.00 | 1000.00 | 3000.00 |

கேள்வி கோரல் தொடர்பான இறுதித் தீர்மானம் ரம்பேவ பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும். இது தொடர்பாக மேலதிக விளக்கங்கள் தேவையெனின் இலக்கம் 025-2266606 என்ற தொலைபேசியை அழைக்கவும்.

**எஸ். தய்பு**
**தலைவர்**
**ரம்பேவ பிரதேச சபை**
**ரம்பேவ.**

## வழங்குநர்களை பதிவு செய்தல் – 2023

### வ/ப இலங்கை உரக் கம்பனி

**கமத்தொழில் அமைச்சு**

2023 ஆம் ஆண்டிற்காக கீழே குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக வழங்குனர்களாக கம்பனியுடன் பதிவு செய்வதற்காக வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள், ஏகமுகவர்கள் மற்றும் சேவை வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பண்டங்கள் மற்றும் சேவைகள்:**

| | | | |
|---|---|---|---|
| 01. | செங்கற்கள், மணல், ஓடுகள், இறப்பர், உலோகம், கரைக்கப்பட்ட சுண்ணாம்பு இன்னும் பலவும் அடங்கலான கட்டிடப் பொருட்கள் (அம்சங்கள் குறித்துரைக்கப்படல் வேண்டும்) | 24. | தைக்கும் நூல் (Woven Polypropylene Bag) |
| 02. | பலகை (அறுக்கப்பட்டது, குற்றிகள்) | 25. | குடிநீர் போத்தல்கள் மற்றும் விநியோகிக்கும் சாதனங்கள் |
| 03. | மின்னியல் சாதனங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் | 26. | Polythene Sealer |
| 04. | ஹாட்வெயார் அம்சங்கள் | 27. | தராசுகள் |
| 05. | Tyre & Tubes and other consumables such as filters etc., | 28. | CCTV Camera |
| 06. | வாகனங்களுக்கான மோட்டார் வாகன உலர் பற்றரிகள் | 29. | Empty Plastic Bottle for Liquid Fertilizer (250ml, 500ml, 1L, 5L) |
| 07. | பெயிண்டுகள் மற்றும் துணைப்பொருட்கள (பெயிண்ட், பிரஷ்கள் இன்னும் பலவும்) | 30. | அச்சடித்தல் (புத்தகங்கள், ஸ்டிக்கர், துணடுப் பிரசுரங்கள் இன்னும் பலவும்) |
| 08. | தீ அணைப்பு சாதனங்கள் | 31. | என்சிஆர் கணனி தாள் அச்சடித்தல் |
| 09. | பாதுகாப்பு உபகரணங்கள் | 32. | Screen Printing/Digital Printing (Mega display Board, Sticker) |
| 10. | காகிதாதி அம்சங்கள் | 33. | Constructions, maintenance (Painting works, Partition etc.,) |
| 11. | கணனி அச்சடிக்கும் காகிதாதிகள் (என்சிஆர் தாள்கள்) | 34. | Weighbridge maintenance & services |
| 12. | கணனிக்கான ஒரு தடவை பாவிப்பவைகள் ( Cartridge & Toner) | 35. | Courier Service |
| 13. | கணனி வன்பொருள் | 36. | பீடை ஒழிப்பு கட்டுப்படுத்தல் |
| 14. | கணனி மென்பொருள் | 37. | Air Conditioner (Purchasing, repairing & services) |
| 15. | தைக்கும் இயந்திரம் | 38. | ஆய்வுகூட அபிவிருத்திக்காக பரீட்சித்தலின் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு |
| 16. | அலுவலக உபகரணங்கள் (அச்சுப்பொறிகள், டுப்பிளிக்கேட்டர்ஸ், தொலைநகல் இயந்திரங்கள், போட்டோக்கொப்பி இயந்திரங்கள் மற்றும் Franking machine) | 39. | Calibration & maintenance of Laboratory Equipments |
| 17. | பாதுகாப்பு அம்சங்கள் (பாதுகாப்பு சப்பாத்துக்கள், Overalls, Gum Boots, மழைக்கோட்டுக்கள், தோல் பைகள் இன்னும் பலவும்) | 40. | அலுவலக உபகரணங்கள் - பழுதுபார்த்தல் மற்றும் சேவை வழங்கல் (அச்சுப்பொறிகள், டுப்பிளிக்கேட்டர்ஸ், தொலைநகல் இயந்திரங்கள், போட்டோக்கொப்பி இயந்திரங்கள் மற்றும் Franking machine) |
| 18. | ஆய்வுகூட உபகரணங்கள், ஒரு தடவை பாவிக்கும் அம்சங்கள் மற்றும் இரசாயனங்கள் | 41. | தராசுகள் - பழுதுபார்த்தல் மற்றும் சேவை வழங்கல் |
| 19. | Woven Poly propylene Bag (WPP) with inner liner | 42. | வெல்டிங் வேலை மற்றும் வெல்டர்கள் |
| 20. | அச்சடிக்கப்பட்ட பொலிஎத்தலீன் பைகள் - (500g, 1கிகி, 2 கிகி, 5கிகி, 10கிகி) | 43. | மேசன் வேலைகள் மற்றும் மேசன்கள் |
| 21. | ஆச்சடிக்கப்பட்ட பொலித்தீன் Mini Pack (500 கிகி) | 44. | கூரை பழுதுபார்த்தல் |
| 22. | Empty Polytheen for Potting mixture (Back side Black & Front side White) | 45. | கட்டிட பராமரிப்பு |
| 23. | அச்சடிக்கும் மை (for printing of Polypropylene bags/ Screen etc.,) | | |

ஒவ்வொரு படிவத் தொகுதிக்கும் 2,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் வ/ப இலங்கை உரக் கம்பனியின் காசாளரிடம் செலுத்திய பின்னர் (காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது) பெறுகை மற்றும் இறக்குமதிகளுக்கான தற்காலிகமான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய விதித்துரைக்கப்பட்ட படிவங்களிலேயே விண்ணப்பங்கள் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் தனித்தனியாக மேலேயுள்ள அம்சங்களுக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (விலைமனுதாரர்கள் ஒவ்வொரு அம்சத்திற்கும் ஒரு விண்ணப்பத்தை பாவித்து விண்ணப்பிக்கலாம்) விதித்துரைக்கப்பட்ட படிவங்களில் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களுடன் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எவ்வித காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு பதிவு செய்தலையும் நிராகரிப்பதற்கான உரிமையை கம்பனியானது கொண்டுள்ளது. கம்பனியின் திருப்திக்காக சேவைகளை செயற்படுத்த தவறும் வழங்குனர்கள் அறிவித்தலின்றி வழங்குனர்களின் பட்டியலிலிருந்து நீக்கப்படுவார்கள்.

2022.11.23 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Registration of Suppliers for the year 2023"** என குறிப்பிடப்பட்டு முகாமையாளர் (பெறுகை மற்றும் இறக்குமதிகள்), வ/ப இலங்கை உரக் கம்பனி, 'லக்பொஹொர', சுவர்ண ஜயந்தி மாவத்தை, ஹுனுப்பிட்டிய, வத்தளை என குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(பண்டங்கள் வ/ப இலங்கை உரக் கம்பனியின் ஒரு தடவை பாவிக்கக்கூடிய பொருட்களின் களஞ்சியசாலைகளுக்கு வழங்கப்படல் வேண்டும்)

**தலைவர்,**
**வ/ப இலங்கை உரக் கம்பனி,**
**'லக்பொஹொர', சுவர்ண ஜயந்தி மாவத்தை,**
**ஹுனுப்பிட்டிய, வத்தளை.**
**திகதி: 26.10.2022**

## அறிவித்தல்

### வ/ப இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊழியர் கூட்டுறவு வங்கியின் மகா சபை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு – 2023/25

**வாக்காளர் பெயர் பட்டியல் காட்சிப்படுத்தல்**

2022.10.27 முதல் 2022.11.08 வரை அலுவலக நேரங்களில் பின்வரும் இடங்களில் வாக்காளர் பெயர்ப்பட்டியல் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கும். அங்கத்தவர்களின் பெயர்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அல்லது உள்வாங்கப்படாத பெயர்களை வாக்காளர் பெயர் பட்டியலில் உட்படுத்துவதற்கான முன்மொழிவுகள் ஏதுமிருப்பின் அவற்றை 2022.11.08ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மேற்படி கூட்டுறவு வங்கியின் செயலாளருக்கும் பிரதியொன்றுடன் எனக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**கொழும்புத் துறைமுகம்**

வலய இலக்கம் 01 - செயலாளர் அலுவலகம், நிதிப் பிரிவு, கெனல் முற்றம்.
வலய இலக்கம் 02 - நலன்புரிக் கட்டிடம் (பண்டாரநாயக்க பாலம்)
வலய இலக்கம் 03 - சிரேஷ்ட டக் மாலுமி அலுவலகம்
வலய இலக்கம் 04 - ஜய கொள்கலன் முனையம் - மனித வளங்கள் அலுவலகம்
வலய இலக்கம் 05 - விஜய பாலம் - மஹாபொள பயிற்சி நிறுவகம்
காலி துறைமுகம் - உறைவிட முகாமையாளர் அலுவலகம்
திருகோணமலைத் துறைமுகம் - உறைவிட முகாமையாளர் அலுவலகம்

**திருத்தப்பட்ட வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தல்**

2022.11.11 முதல் 2022.11.21 வரை அலுவலக நேரங்களில் மேற்படி இடங்களில் காட்சிப்படுத்தப்படும்.

**வேட்பு மனுக்களை வழங்கல்**

2022.11.11 முதல் 2022.11.21 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 03.00 வரை வார வேலை நாட்களில் பின்வரும் இடங்களில் ரூபா 200/-ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு துறைமுகம் - கூட்டுறவு வங்கி அலுவலகம்
காலி துறைமுகம் - உறைவிட முகாமையாளரின் அலுவலகம்
திருகோணமலை துறைமுகம் - உறைவிட முகாமையாளரின் அலுவலகம்

**வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் காட்சிப்படுத்தல்**

வேட்பு மனுக்கள் 2022.11.23 அன்று மு.ப. 09.00 முதல் மு.ப. 11.00 வரை பின்வரும் இடங்களில் தேர்தல் அலுவலர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

வலய இலக்கம் 01, 02, 03, 04, 05 - பண்டாரநாயக்கபாலம் நலன்புரி கட்டிடம்
காலி துறைமுகம் - உறைவிட முகாமையாளர் அலுவலகம்
திருகோணமலை துறைமுகம் - உறைவிட முகாமையாளர் அலுவலகம்

பெற்றுக்கொள்ளப்படும் வேட்பு மனுக்கள் மு.ப. 11.00 முதல் மதியம் 12.00 வரை அவை பெற்றுக்கொள்ளப்படும் இடங்களில் காட்சிப்படுத்தப்படும்.

**காட்சிப்படுத்தப்படும் வேட்புமனுக்களிற்கான ஆட்சேபனைகளை ஏற்றுக்கொள்ளல்:**

வேட்புமனுக்களிற்கான ஆட்சேபனைகள் எழுத்துருவில் முன்வைக்கப்படல் வேண்டுமென்பதுடன், அவை 2022.11.23 மதியம் 12.00 முதல் பி.ப. 13.00 வரை அவை ஏற்றுக்கொள்ளப்படும் இடங்களில் பிரதான வாக்கெடுப்பு அலுவலரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அபேட்சகர் இலக்கம் வழங்கல் மற்றும் வாக்கெடுப்பு நடாத்தல்**

உத்தேச பொதுச் சபை பிரதிநிதிகளின் எண்ணிக்கையானது, மேலதிகமாக வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்படுமானால், அன்றையதினம் பி.ப. 13.05 இற்கு அபேட்சகர் இலக்கங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் வாக்கெடுப்பு நடைபெறும் திகதி மற்றும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**டீ.ஏ.எஸ். சேனாதீர**
**பிரதான வாக்கெடுப்பு அலுவலர்**
**கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்**
**இலக்கம் 330, யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு - 02.**

றுஹுணு பல்கலைக்கழகம் - மாத்தறை

# கேள்விகளுக்கான அழைப்பு

## 29ஆவது பட்டமளிப்பு விழாவினை புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ படமெடுத்தலுக்கான விலைமனுக்கோரல் - 2022

றுஹுணு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா 2022 டிசம்பர் 16ஆம் திகதி மாத்தறை, வெல்லமடம வளாகத்தில் அமைந்துள்ள ரவீந்திரநாத் தாகூர் மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இங்கு கிட்டத்தட்ட 2000 பட்டதாரிகளுக்கு பட்டம் வழங்கப்படும் பட்டமளிப்பு விழா நடைபெறும் வேளையில் புகைப்படம் எடுத்தல்/வீடியோ படமெடுத்தலுக்காக பல்கலைக்கழகத்தினால் அனுமதி அளிக்கப்படுவது, இத்துறையில் வியாபார விடயங்களை நடத்திச் செல்வதற்காக பதிவு செய்துள்ள புகைப்பட/வீடியோ நிறுவனங்களுக்கு மட்டும் ஆவதுடன் அவ்வாறான நிறுவனங்களில் இருந்து கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக 2022.11.16 பி.ப.2.00 வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. உற்சவ மண்டபத்தில் பட்டமளிக்கும் சந்தர்ப்பங்களை புகைப்படமெடுத்தல் மற்றும் பட்டமளிப்பு விழாவை வீடியோ படமெடுத்தல்.
02. பட்டமளிப்பு விழா நடைபெறும் காலத்தில் பல்கலைக்கழக வளாகத்தில் தற்காலிக புகைப்பட நிலையமொன்றை அமைத்து அங்கு பட்டம் பெறுவோரை புகைப்படமெடுத்தல்.

**கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ளல்**

மீளளிக்கப்படாத ரூ. 5000/- தொகையை கேள்விக் கட்டணமாக றுஹுணு பல்கலைக்கழகத்தின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பிரதிப்பதிவாளர் (பொது நிர்வாகம்) இடம் சமர்ப்பித்து குறித்த விபரங்கள் மற்றும் கேள்விப் பத்திரங்களை 2022.11.15 பி.ப.3.00 வரை (அலுவலக நேரங்களில்) பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல்**

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" என வேறு வேறு இரு உறைகளில் இட்டு அவ் உறைகளின் மேல் மூலையில் "பட்டமளிப்பு விழாவை புகைப்படம் எடுத்தல் மற்றும் வீடியோ படமெடுத்தலுக்கான விலைமனுக்கோரல் - 2022" என்று தெளிவாக குறிப்பிட்டு 2022.11.16 பி.ப.2.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் "தலைவர், பெறுகைக்குழு, றுஹுணு பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் அந்த முகவரியில் பதிவாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் (இல:01) கொண்டு வந்து உள்ளிடலாம்.

கேள்விப் பத்திரத்துடன் மீளளிக்கப்படும் கேள்விப் பிணையொன்றாக ரூ. 100,000.00 தொகையை றுஹுனு பல்கலைக்கழகத்தின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாக அல்லது பூர்த்தியற்று கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

**கேள்விகள் திறத்தல்**

2022.11.16 ஆம் திகதி பி.ப.2.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்டட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும். இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு இல. 041-2233254 நீடிப்பு 12015 என்ற தொ.பே. இலக்கத்தின் மூலம் பிரதிப் பதிவாளர்/பொது நிர்வாகம் இடம் விசாரித்து அறியலாம்.

**தலைவர்**
**பெறுகைக்குழு, றுஹுணு பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை**
**2022.10.21**

# சிலாபம் பிரதேச சபை

## 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட வரைவு

சிலாபம் பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டிற்கான குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கை 2022 ஒக்டோபர் 28 முதல் 2022 நவம்பர் 09 வரை (அரச விடுமுறை தினம் மற்றும் ஞாயிறு தவிர்ந்து) அலுவலக நேரங்களில் சிலாபம் பிரதேச சபை அலுவலகத்தில் பொது மக்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் அமுலாக்கும் விதிகளின் 10.2 (ஆ) விதியின் பிரகாரம் பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**டப். சரத் டி சில்வா**
**தலைவர்**
**சிலாபம் பிரதேச சபை**

**2022 ஒக்டோபர் 21ம் திகதி**
**சிலாபம் பிரதேச சபை அலுவலகம்**
**மாதம்பே**

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

USA, CA 92841, Garden Grove, APT 2Q, Beach Blvd, 12221ஐச் சேர்ந்த **இத்தபான பயகலகே சூலா தமயந்தி பீரிஸ்** எனப்படும் **சூலா இத்தபான பீரிஸ்** (USA கடவுச் சீட்டு இல. A07444767 கொண்ட) நான் பாணந்துறை, வலன வீதி, இல. 20ஐச் சேர்ந்த **இத்தபான பயகலகே துஷாந்த பிரேமலால்** இன் பெயரில் என்னால் வழங்கப்பட்ட கொழும்பு பகிரங்க நொத்தாரிசு **S.L. வீரசேக்கரவினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2022 ஒக்டோபர் 19ம் திகதிய அற்றோணி தத்துவ இலக்கம் 6343ஐ 2022 ஒக்டோபர் 01ம் திகதி முதல் அமுலாகுமாறு இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கை சனநாயக குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். என் பெயரில் அல்லது என் சார்பாக சொல்லப்பட்ட அற்றோணி தத்துவத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட **இத்தபான பயகலகே துஷாந்த பிரேமலால்** இனால் மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாடுகள் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் இதன் பிறகு நான் பொறுப்பாகமாட்டேன்.

**சூலா இத்தபான பீரிஸ்,**
**முதன்மையாளர்.**
28 செப்டெம்பர் 2022

## அறிவித்தல்

**மீட்டுக் கொள்ளப்படாத அடகு நகைகளின் ஏலவிற்பனை**

வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கிகளின் மகா சபையின் அடகு முகவர்களான வரையறுக்கப்பட்ட பேருவளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்

**பேருவளை, பயாகலை, தர்கா நகர், ஹல்கந்தவில, பாதாகொட, களுவாமோதர, முங்ஹேன மற்றும் மக்கொன**

ஆகிய கிராமிய வங்கி சமூகங்களில் 2013.08.01 முதல் 2021.06.30 வரை அடகு வைத்து 2022.11.04 வரை மீட்டுக் கொள்ளப்படாத அனைத்து அடகு நகைகளும் 2022.11.05 மற்றும் 2022.11.06 ஆகிய தினங்களில் வ/ப பேருவளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான அலுவலக வளாகத்தில் மு.ப. 9.00 முதல் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**பொது முகாமையாளர்,**
**வ/ப பேருவளை ப.நோ.கூ. சங்கம்,**
**"சமுபகார மந்திரய". காலி வீதி, பேருவளை.**
**தொலைபேசி இல: 034-2276198**

The largest Job Market in Sri Lanka
www.observerjobs.lk
Widest reach for your employment advertisement
Email : info@observerjobs.lk Hotline: 1949
For more information 0777270012 / 0112429314




Repeat Your ad For Better Offers

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**
**(கலாசார பிரிவு)**

1. பின்வரும் வேலைகளின் நிறைவேற்றல் மற்றும் பூர்த்தி செய்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பத்தரமுல்ல, I ஆம் கட்டம் ''செத்சிரிபாய'', 8 ஆம் மாடி, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் சார்பாக, அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் தேசிய பெறுகை வழிகாட்டி 2006 இல் விபரிக்கப்பட்டவாறு நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் -
   i. அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும்
   ii. கீழேயுள்ள 4 ஆம் அம்சத்தின் பிரகாரம் தகைமை தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தல்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைக்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:

| ஒப்பந்தம் | உறுதியான கண்ணாடி கதவுகள், நிலையான கண்ணாடிகள் மற்றும் கூரையின் பக்கங்களை மறைக்கும் சாதனங்களை வழங்கல் மற்றும் நிறுவுதல் | பண்டித்த டபிள்யு.டி. அமரதேவ அசாப்புவருக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடத்திற்கான உறுதியான கண்ணாடி கூரை |
|---|---|---|
| **ஒப்பந்த இலக்கம்** | CA/7/9-6-xxiv | CA/7/9-6-xxvi |
| **பெசேவ நீங்கலான மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (ரூபாவில்)** | 1.5 மில்லியன் ரூபா | 3.04 மில்லியன் ரூபா |
| **ஒப்பந்தக் கால எல்லை** | 42 நாட்கள் | 90 நாட்கள் |
| **விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்)** | 23,000 ரூபா | 45,000 ரூபா |
| **விலைமனுக்கள் செல்லுபடியாகும் காலம்** | விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 91 நாட்கள் | விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 91 நாட்கள் |
| **விலைமனுப்பிணை செல்லுபடியாகும் காலம்** | விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்கள் | விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்கள் |
| **CIDA பதிவின் விஷேடத்துவம்** | ஏற்புடையதாகாது | கட்டிட நிர்மாணம் |
| **CIDA பதிவின் தரம்** | ஏற்புடையதாகாது | சி-9 அல்லது சி-8 |
| **கடந்த கால அனுபவம்** | 1 மில்லியன் ரூபா பெறுமதியில் நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மையில் உறுதியான கண்ணாடி வேலைகளை வழங்கல் மற்றும் நிறுவுதலில் கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது 03 செயற்றிட்டங்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். | 1. கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட வருடாந்த வேலையின் சராசரி பெறுமதி ஆகக் குறைந்தது 16 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும். 2. தேவைப்படும் திரவச் சொத்துக்கள் அல்லது கடன் வசதிகளின் ஆகக் குறைந்த தொகை 1 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும். 3. கடந்த ஐந்து வருடங்களில் பொறுப்பேற்ற 1 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதியில் நிகரான தன்மையுடைய வேலையின் அனுபவம் மூன்று அல்லது மேற்பட்டதாகவிருத்தல் வேண்டும். |
| **மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்** | 1,000 ரூபா | 1,500 ரூபா |
| **1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டம்** | ஏற்புடையதாகாது | தேவைப்படுமிடத்து 4.டி உபகூற்றின் பிரகாரம் பதிவு பெற்றிருத்தல். |
| **விலைமனுக்களை திறக்கும் திகதிகள்** | 2022.11.09 | 2022.11.09 |
| **விலைமனுக்களை திறக்கும் நேரம்** | மு.ப. 10 மணிக்கு | பி.ப. 2 மணிக்கு |

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, I ஆம் கட்டம் ''செத்சிரிபாய'', 8 ஆம் மாடி, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பிரதான கணக்காளரிடமிருந்து 2022.10.27 ஆம் திகதியிலிருந்து 2022.11.08 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 011-2862675. தொலைநகல்: 011-2862675. மின்னஞ்சல்: **procurement.cultural@gmail.com**)
6. 2022.10.27 ஆம் திகதியிலிருந்து 2022.11.08 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பெயரில் செலுத்திய பின்னர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுவின் (கீழ் மட்டம்) தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. **2022.11.09** ஆம் திகதியன்று மேலேயுள்ள அட்டவணையில் திட்டவட்டமாக குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் கீழேயுள்ள முகவரியான தலைவர், அமைச்சு பெறுகைக் குழு (கீழ் மட்டம்), புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிற்கு இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2023 பெப்ரவரி 08 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் (விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 91 நாட்கள்)
9. அனைத்து விலைமனுக்களும் பின்வரும் பாங்கிலமைந்த விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - பத்தரமுல்ல, I ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 8 ஆம் மாடி, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.
   - விலைமனுக்கோரல் தரவில் குறித்துரைக்கப்பட்டவாறு முகவராண்மையொன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.
10. விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறவுள்ள இடம், நேரம் மற்றும் திகதி ஆகியன பின்வருமாறு:

| | உறுதியான கண்ணாடி கதவுகள், நிலையான கண்ணாடிகள் மற்றும் கூரையின் பக்கங்களை மூடும் சாதனங்கள். | உறுதியான கண்ணாடி கூரை |
|---|---|---|
| திகதி | 2022.11.02 | 2022.11.02 |
| நேரம் | மு.ப. 10 மணிக்கு | மு.ப. 11.30 மணிக்கு |
| இடம் | ''அப்பே கம'' இடப்பரப்பிற்கு அண்மையிலுள்ள கிராமிய கலைகள் நிலையத்திற்கு அருகாமையில். | ''அப்பே கம'' இடப்பரப்பிற்கு அண்மையிலுள்ள கிராமிய கலைகள் நிலையத்திற்கு அருகாமையில். |

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு (கீழ் மட்டம்),**
**புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,**
**8 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', I ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

## கரையோரப் பாதுகாப்புக் கட்டமைப்புகளின் நிர்மாணிப்புக்காக பொருட்கள் மற்றும் இயந்திரங்களை வழங்குதல்

**அம்பாறை மாவட்டம் - நிந்தவூர், திருக்கோயில்**

1. கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கரையோரப் பாதுகாப்பு கட்டமைப்புகளின் நிர்மாணிப்புக்காக பொருட்கள் மற்றும் இயந்திரங்கள் வழங்குதல் மற்றும் நிர்மாணப் பொருட்களை போக்குவரத்து செய்வதற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத் திணைக்களம் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் தற்போது முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். ஒவ்வொரு பெறுகையும் தனியான மற்றும் சுயாதீன பெறுகை செயற்பாடாகும்.

| ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இல: | வழங்கல் விபரம் | விலைமனுப் பிணை | செல்லுபடிக் காலம் | தொடர்புகொள்ள வேண்டிய நபர் |
|---|---|---|---|---|
| நிந்தவூர் கிரோயின் நிர்மாண செயற்றிட்டம் கட்டம் 1 CCD/CD/2022/75 | கலப்புக் கல் (2-250kg) 2500 மீற்றர் கியூப் | ரூபா 125,000.00 | 77 நாட்கள் | பிராந்திய பொறியியலாளர் அம்பாறை 075-9991225 |
| | 12 தொன் எக்ஸ்கவேட்டர் - 1095 மணித்தியாலங்கள் | ரூபா 120,450.00 | 77 நாட்கள் | |
| | 01 கியூப் லோடர் - 730 மணித்தியாலங்கள் | ரூபா 65,700.00 | 77 நாட்கள் | |
| | 03 கியூப் டிப்பர் - 127 நாட்கள் | ரூபா 57,150.00 | 77 நாட்கள் | |
| | கலப்புக் கல் (2-250kg) 3675 மீற்றர் கியூப், 02 தொன் சக்கைக் கற்கள் 315 மற்றும் 1 1/2 தொன் 4095 சக்கைக்கற்கள் ஒலுவில் துறைமுகம் முதல் வேலைத் தளம் வரை 3 கியூப் டிப்பர் மூலம் போக்குவரத்து செய்தல் | ரூபா 64,680.00 | 77 நாட்கள் | |
| திருக்கோயில் 110 மீற்றர் கேபியன் மதில் திருத்தவேலைகள் CCD/CD/2022/74 | 1 - 1.5 தொன் சக்கைக்கல் தொகுதி 1000 | ரூபா 48,000.00 | 63 நாட்கள் | |
| | கலப்புக் கல் (2-250kg) 125 மீற்றர் கியூப் | ரூபா 6,250.00 | 49 நாட்கள் | |

2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனு நடைமுறை மூலம் விலைமனு செயற்பாடு நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும். மேலும் 1987ஆம் ஆண்டில் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, விலைமனுதாரர் கேள்விப் படிவத்தில் கேட்கப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5 ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் கொழும்பு-10, மாளிகாவத்தை, புதிய செயலகம், 4ஆம் மாடி, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் பிரதான பொறியியலாளரிடமிருந்து (கரையோர அபிவிருத்தி) மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், எந்தவொரு வேலை நாளிலும் 9.00 மணி முதல் 15.00 மணி வரை விலைமனுப் படிவங்களை பரீட்சித்துப் பார்க்கவும் முடியும். விலைமனுதாரர்கள் குறித்த உத்தியோகத்தர்களுடன் 011-2472622, 011-2322654 எனும் தொலைபேசி இலக்கங்களில் மற்றும் 011-2438005 எனும் தொலைநகல் இலக்கத்தில் தொடர்புகொள்ளலாம்.
6. வியாபார கடிதத் தலைப்பிலான ஒரு வேண்டுதல் கடிதம் மேற்படி முகவரியிலுள்ள பிரதான பொறியியலாளருக்கு (கரையோர அபிவிருத்தி) சமர்ப்பிக்கப்பட்டு மீளளிக்கப்படாத கட்டணமான மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய் (ரூ. 3,500/-) செலுத்தப்படுவதன் பேரில் 2022-10-26ஆம் திகதி முதல் 2022-11-09ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நிர்மாணப் பொருட்கள், இயந்திராங்களை வழங்குதல் மற்றும் நிர்மாணப் பொருட்களைப் போக்குவரத்து செய்வதற்கான விலைமனுக்களை 2022-11-10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம், 04ஆம் மாடி, புதிய பொதுச் செயலாளர் அலுவலகம், மாளிகாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
8. குறித்த முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறைகளில் ஒப்பந்தத்தின் பெயர், ஒப்பந்த அடையாள இலக்கம் மற்றும் வழங்கல் மூலப்பிரமாணம் (நிர்மாணப் பொருட்கள், இயந்திரங்கள், நிர்மாணப் பொருட்கள் போக்குவரத்து) என்பவற்றை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
9. குறித்த விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்தவுடன் கொழும்பு-10, மாளிகாவத்தை, புதிய செயலகம், 04ஆம் மாடி, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்திற்கு வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
10. சகல விலைமனுக்களுடனும் வழங்க வேண்டிய விபரங்கள் உட்பட விலைக்கோரல் பிணை முறி, வங்கிப் பிணை முறி அல்லது பணம் செலுத்திய பற்றுச்சீட்டு மூலமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த பிணை முறியானது விலைக்கோரல் செல்லுபடிக் காலம் நிறைவடைந்து 28 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும். குறித்த விலைக்கோரல் பிணையை திணைக்களத்தின் காசாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தலாம். விலைக்கோரலின் செல்லுபடிக் காலம் விலைமனுக்கள் திறக்கப்படும் நாளுக்கு அடுத்த நாள் முதல் கணக்கிடப்படும்.
11. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்,**
**4ஆம் மாடி, புதிய செயலகம்,**
**மாளிகாவத்தை, கொழும்பு-10.**

**தொலைபேசி: 011-2449197 / 011-2472622 / 011-2387920**
**தொலைநகல்: 011-2387920 / 011-2438005.**

# ஆஸியிடம் தோற்றது இலங்கை



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 உலகக் கிண்ண சுப்பர் 12 சுற்றுப் போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்தது.

பேர்த்தில் நேற்று (25) நடைபெற்ற இந்தப் போட்டியில் தோல்வி அடைந்ததை அடுத்து இலங்கை அணியின் நிகர ஓட்ட விகிதம் சரிந்து புள்ளிப்பட்டியலில் மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டது.

காயம் காரணமாக அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் ஆடாத பத்தும் நிசங்கள் இலங்கை அணிக்கு அழைக்கப்பட்டதோடு ஆஸி. அணியில் கொரோனா தொற்று காரணமாக சுழற்பந்து வீச்சாளர் அடம் சம்பா இடம்பெறாததோடு அவருக்கு பதில் அஷ்டன் ஏகர் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை அணிக்கு பத்தும் நிசங்க சிறப்பாக செயற்பட்டார். 45 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 40 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்தை பௌண்டரியை நோக்கி அடிப்பது கடினமான நிலையில் இரண்டு மற்றும் மூன்று ஓட்டங்களை பெறுவதில் துடுப்பாட்ட வீரர்கள் முயற்சித்தனர். தனஞ்சய டி சில்வா 23 பந்துகளில் 26 ஓட்டங்களைப் பெற்றார்.

எனினும் கடைசி ஓவரில் இலங்கை அணி 20 ஓவர்களை பெற்றதன் மூலம் வலுவான வெற்றி இலக்கொன்றை நிர்ணயிக்க முடிந்தது. இதன்போது வேகமாக ஆடிய சரித் அசலங்க 25 பந்துகளில் 3 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களை பெற்றார். இதன்மூலம் இலங்கை 20 ஓவர்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து 157 ஓட்டங்களை பெற்றது.

பந்துவீச வந்த இலங்கை அணி ஆரம்பத்திலேயே பெரும் இழப்பை சந்திக்க வேண்டி ஏற்பட்டது. வேகப்பந்து வீச்சாளர் பினுர பெர்னாண்டோ 5 பந்துகளை வீசிய நிலையில் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அரங்கு திரும்பினார். ஏற்கனவே இலங்கை அணியின் இரு வேகப்பந்து வீச்சாளர்கள் காயம் காரணமாக உலகக் கிண்ண குழாத்தில் இருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் ஆஸி. துடுப்பாட்ட வீரர்களுக்கு இலங்கை பந்துவீச்சாளர்கள் நெருக்கடி கொடுத்தபோதும் மத்திய ஓவர்களில் குறிப்பாக வனிந்து ஹசரங்கவின் பந்துகளுக்கு அதிரடியாக ஆடி ஓட்ட வேகத்தை அதிகரித்துக் கொண்டது. இந்நிலையில் 5ஆவது வரிசையில் துடுப்பெடுத்தாட வந்த மார்க்கஸ் ஸ்டொயினிஸ் இலங்கை அணியை முழுமையாக துவம்சம் செய்தார். 17 பந்துகளுக்கு அரைச்சதம் பெற்ற அவர் டி20 போட்டியில் ஆஸி. அணிக்காக வேகமாக அரைச்சதம் பெற்றவராக சாதனை படைத்தார்.

இதன்மூலம் ஆஸி. அணி 16.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 158 ஓட்ட வெற்றி இலக்கை எட்டியது. அதிரடியாக ஆடிய ஸ்டொயினிஸ் 18 பந்துகளில் 4 பௌண்டரிகள் மற்றும் 6 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 59 ஓட்டங்களை பெற்றார். மறுமுனையில் அணித்தலைவர் அரோன் பின்ச் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களை குவித்தார்.

இதன்போது ஹசரங்க 3 ஓவர்களுக்கு 53 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## பினுரவுக்கு காயம்




எங்கள் சிங்கங்களை வாழ்த்திட நீங்களும் இணைந்துக்கொள்ளுங்கள்
QR குறியீட்டை Scan செய்து உங்கள் வாழ்த்துகளை பதிவு செய்யுங்கள்
Dialog

## சம்பியனானது சுப்பர் வொரியர்ஸ்




*கல்முனை மத்திய தினகரன் நிருபர்*

கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை பழைய நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற மெற்றோ பொலிடன் ஸஹரியன் பிரீமியர் லீக் தொடரில் பூம் பூம் ஸாஹிரியன் அணியை வீழ்த்தி சுப்பர் வொரியர்ஸ் ஸாஹிரியன்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

ஸாஹிரா கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் 64 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய பூம் பூம் ஸாஹிரியன் 48 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இறுதிநாள் நிகழ்வில், கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும், மெற்றோ பொலிடன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி. சிராஸ் மீரா சாஹிப் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

## தேசிய குத்துச்சண்டை போட்டி: இரு மாணவிகளுக்குத் தங்கம்

*வவுனியா விசேட நிருபர்*



பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட குத்துச்சண்டை போட்டியில் வவுனியா சிறீராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது. நாவலப்பிட்டிய ஜெயதிலக விளையாட்டரங்கில் கடந்த திங்கட்கிழமை முடிவுற்ற இந்த போட்டியில் வவுனியா சிறீராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம் சார்பாக பங்குபற்றிய மாணவிகளான எல். கஜேந்தினி 57 கிலோகிராம் எடைப் பிரிவிலும் யூ. கீர்த்தனா 60 கிலோகிராம் எடைப் பிரிவிலும் தங்கம் வென்றனர்.

## வருடாந்த கால்பந்து போட்டியில் மஹிந்தவை வீழ்த்தியது றோயல்



அல்பேர்ட் எதிரிசிங்க கிண்ணத்திற்காக கொழும்பு குதிரைப்பந்தய திடல் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 21 ஆவது 19 வயதுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்து போட்டியில் மஹிந்த கல்லூரிக்கு எதிராக றோயல் கல்லூரி 2-1 என்று கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

றோயல் கல்லூரியின் இந்த வெற்றியின் மூலம் இந்தத் தொடரில் அந்த அணி 18 ஒட்டுமொத்த வெற்றிகளை பதிவு செய்துள்ளது. 1984ஆம் ஆண்டு மஹிந்த கல்லூரி பழைய மாணவரான அல்பர்ட் எதிரிசிங்கவினால் இந்தத் தொடர் ஆரம்பிக்கப்பட்டதோடு அவரது புதல்வர்களான காமினி எதிரிசிங்க மற்றும் ஜனக்க எதிரிசிங்க றோயல் கல்லூரி பழைய மாணவர்களாவர்.

போட்டியின் ஆரம்பத்திலேயே ஆதிக்கம் செலுத்திய றோயல் கல்லூரி, மொஹமட் சனீரின் கோல் மூலம் முதல் பாதியில் 1–0 என முன்னிலை பெற்றது. எனினும் வலுவான ஆட்டத்திற்கு திரும்பிய மஹிந்த கல்லூரி கோல் ஒன்றை புகுத்தி 1–1 என சமநிலைக்குக் கொண்டுவந்தது. எனினும் ஹம்தி நசீம்தீனின் நேர்த்தியான கோல் மூலம் றோயல் கல்லூரி வெற்றியை உறுதி செய்தது.

1980 றோயல் கல்லூரி கால்பந்து அணியின் தலைவராக இருந்த ஆர்.டி. குணதிலக்க பிரதம அதிதியாக கலந்துகொண்டதோடு இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அசோக ரவீந்திர கௌரவ அதிதியாக கலந்துகொண்டார்.

# சர்வதேச செய்திகள்

## பாடசாலைத் தீயில் 11 சிறுவர்கள் பலி



உகண்டாவில் பார்வை குறைபாடுள்ள சிறுவர்களுக்கான பாடசாலை ஒன்றில் நேற்று (25) ஏற்பட்ட தீ விபத்தில் பதினொரு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். நால்வர் மோசமான காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தலைநகர் கம்பாலாவில் இருந்து கிழக்கில் உள்ள முகோனோவில் இருக்கும் விடுதிப் பாடசாலையில் ஏற்பட்ட இந்தத் தீக்கான காரணத்தை கண்டறிய விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் இவ்வாறான சம்பவங்கள் அரிதானதல்ல.

தீ ஏற்படும்போது பாடசாலை விடுதியில் 27 மாணவர்கள் உறங்கிக்கொண்டிருந்துள்ளனர். விபரம் அறிந்த பெற்றோர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

2008ஆம் ஆண்டு கனிஷ்ட பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட தீயில் பத்தொன்பது சிறுவர்கள் உயிரிழந்தது நாட்டில் இடம்பெற்ற மோசமான சம்பவமாக உள்ளது.

## இங்கிலாந்துப் பிரதமராக பதவியேற்றார் ரிஷி சுனக்



பிரிட்டனில் ஏழு வாரங்களில் மூன்றாவது பிரதமராக நேற்று (25) உத்தியோகபூர்வமாக பதவியேற்ற ரிஷி சுனக், தமக்கு முன்னிருந்தவர்கள் தவறுகளை செய்ததாகவும் நாட்டில் ஸ்திரத்தன்மையை கொண்டுவர பாடுபடுவதாகவும் உறுதி அளித்துள்ளார்.

பதவியில் இருந்த பிரதமர் லிஸ் டிரஸ் தனது இராஜினாமா கடிதத்தை கையளித்ததை தொடர்ந்து லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் மாளிகையில் மூன்றாம் சார்ல்ஸ் மன்னரிடமிருந்து சுனக் தனது நியமனக் கடிதத்தை பெற்றுக்கொண்டார்.

முதல் வெள்ளையரல்லாத மற்றும் ஹிந்து மதத்தைச் சேர்ந்த ஒருவராக கடந்த திங்கட்கிழமை (24) ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராக சுனக் தேர்வு செய்யப்பட்டார். 42 வயதான சுனக் பிரிட்டனில் 200 ஆண்டுகளில் பிரதமராக பதவி ஏற்கும் இளம் வயதானவர் என்றும் சாதனை படைத்துள்ளார். ஆட்சி அமைப்பதற்கு மன்னர் அழைப்பை ஏற்ற பின் பிரதமர் அலுவலகத்திற்கு திரும்பிய சுனக் அங்கு உரை ஒன்றை நிகழ்த்தினார். பிரிட்டன் தற்போது சிக்கலான ஒரு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருப்பதாக கூறிய அவர், கொவிட் காலக்கட்டத்துக்குப் பிந்திய பாதிப்புகள் நீடிப்பதாக தெரிவித்தார்.

ஒருசில தவறுகள் இழைக்கப்பட்டதாக அவர் கூறினார். அவை வேண்டுமென்றே செய்யப்படவில்லை என்றபோதும் தவறு தவறுதான் என்றார் அவர். அந்தத் தவறுகளைச் சரிசெய்யப்போவதாகத் சுனாக் வாக்களித்தார். சுனக், பிரிட்டன் எதிர்நோக்கியிருக்கும் பொருளாதார நெருக்கடி, கன்சர்வேட்டிவ் கட்சியின் உட்பூசல், பிளவுபட்டிருக்கும் பிரிட்டன் என்று பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் நாட்டின் நிதி அமைச்சராக செயற்பட்ட அனுபவம் பெற்றவராக சுனக் உள்ளார்.

## ஆறு பலஸ்தீனர் சுட்டுக்கொலை



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் நேற்று (25) அதிகாலை இஸ்ரேல் படையினர் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின்போது ஆறு பலஸ்தீனர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான இஸ்ரேலிய படையினர் நப்லுஸ் நகருக்குள் ஊடுருவிய நிலையில் பலஸ்தீன பாதுகாப்பு படையினர் மற்றும் போராளிகளுடன் மோதல் ஏற்பட்டதாக பலஸ்தீன பத்தா அமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஆரம்பத்தில் நிராயுதபாணியான பலஸ்தீனர் ஒருவர் உட்பட ஐந்து பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக குறிப்பிட்ட பலஸ்தீன சுகாதார மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றொரு பலஸ்தீன இளைஞர் கொல்லப்பட்டதை பின்னர் உறுதி செய்தனர்.

இதில் மேலும் 21 பலஸ்தீனர்கள் காயமடைந்திருப்பதோடு நால்வரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக கூறப்படுகிறது. தமது இராணுவம் நப்லுஸில் சுற்றிவளைப்பு தேடுதல் ஒன்றில் ஈடுபட்டதாக மாத்திரமே இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிய இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து இஸ்ரேலிய இராணுவம் கடந்த இரண்டு வாரங்களாக நப்லுஸ் நகரை முடக்கி தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பங்களாதேஷில் சூறாவளி தாக்கி 16 பேர் உயிரிழப்பு



பங்களாதேஷில் வீசிய சிட்ரங் சூறாவளியில் சிக்கி குறைந்தது 16 பேர் உயிரிழந்திருப்பதாக கூறப்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகளில் வாழும் சுமார் ஒரு மில்லியன் பேர் தங்களது வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

துறைமுகப் பகுதிகளில் சுமார் 10 மில்லியன் மக்கள் மின்சாரம் இன்றி இருப்பதோடு தெற்கு மற்றும் தென்மேற்கு பிராந்தியங்களில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

தெற்கு பங்களாதேஷில் கடந்த திங்கட்கிழமை பின்னேரம் இந்த சூறாவளி கரையை அடைந்தபோதும் சுமார் ஒரு மில்லியன் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். இதில் மரங்கள் விழுந்து 14 பேர் உயிரிழந்திருப்பதோடு படகு மூழ்கி மேலும் இருவர் பலியாகி இருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 26ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.